
# கல்கி



KALKI மார்ச் 29, 1953 4 அணா

# டால்டா வனஸ்பதி நீங்கள் செலவு செய்யும் பணத்திற்கு முழுப் பிரயோஜனத்தைத் தருகிறது



டால்டாவிலிருந்து பெறும் சக்தியால் இவன் ஆரோக்கியமாகவும் நாள்முழுவதும் உல்லாசமாகவும் இருக்கிறான்.

உங்கள் குடும்பத்தினருக்கு டால்டாவில் தயாரித்த உணவை அளியுங்கள். இப்படிச் செய்வதால், டாக்டர்கள் ஒவ்வொருவர் தினசரி உணவிலும் அவசியம் தேவை என்று கூறும் சக்தியளிக்கும் கொழுப்பு அவர்களுக்குக் கிடைப்பதை உறுதிப்படுத்திக் கொள்கிறீர்கள். காற்றுப்புகாத சீல்செய்த டின்களில் அடைக்கப்பட்ட டால்டா மிகவும் சுத்தமானது, புதிதானது, ஆரோக்கியமானது. மேலும் மிகவும் சிக்கனமானது.

நமது உணவில் விடமின்கள் ஏன் அடங்கியிருக்க வேண்டும்?

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே எழுதுங்கள்:

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1




# டால்டா

உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும் சமையல்-கொழுப்பு

10, 5, 2, 1, பவுண்டு டின்களில் கிடைக்கிறது

HVM. 190-50 TM

# கல்கி
# பொருளடக்கம்

மலர் 12 இதழ் 35 | **1953 மார்ச் 29** | நந்தன ௵ பங்குனி 16உ


| | | | |
|---|---|---|---|
| ஒரே குரலாகக் கேளுங்கள் | (தலையங்கம்) | ... | 3 |
| பதினெட்டு முழக் கைத்தறிச் சேலை பத்தே ரூபாய்! | ... | ... | 4 |
| "மெட்ராஸ் மெயில்" பட்டினிச் சாவு | ... | ... | 4 |
| உதவி போதுமா? | (கார்ட்டூன்) | ... | 5 |
| ஆலம் உண்டவர்! | ... | ... | 6 |
| பொன்னியின் செல்வன் | கல்கி | ... | 7 |
| கல்யாணக் கடிதம் | எஸ். வைத்தியநாதன் | ... | 19 |
| அகில உலகச் சிறுகதைப் போட்டி | ... | ... | 24 |
| மலை உச்சியில் மாமுனிவர் | பத்மா சீனிவாசன் | ... | 26 |
| அதிர்ஷ்டக் குழந்தை (பாப்பா மலர்) | விஜயம் | ... | 29 |
| மறு பிறவி | சரசன் | ... | 33 |
| தந்தையின் கண்ணீர் | கே. ஆர். கௌஸல்யா | ... | 38 |
| பாலை வனத்திலே... | எரிக் ரே—வாஞ்சி | ... | 43 |
| அகதிப் பெண் | கமல்ஜோஷி—ரா. வீ. | ... | 49 |
| விடாமுயற்சி | சௌமித்திரி | ... | 55 |
| விபரீத விளைவு! | குண்டுமணி | ... | 59 |
| பனித்திரை | டி. எஸ். கோதண்டராமன் | ... | 60 |
| புலிக்குப் பிறந்தது! | தில்லைவாசி | ... | 65 |
| அழகரும் சிங்கரும் | கோணல் | ... | 69 |


"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


## ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமி சபை (ரிஜிஸ்டர்டு), திருவல்லிக்கேணி

வருஷாந்திர சங்கீத விழா ★ திருவல்லிக்கேணி கலா மண்டபத்தில்,

| | | | |
|---|---|---|---|
| ஏப்ரல் 3உ | டி. கே. எஸ். சகோதரர்கள் நாடகம் | - | மனிதன் |
| ஏப்ரல் 4உ | Do | - | கள்வனின் காதலி |
| ஏப்ரல் 5உ | Do | - | ரத்த பாசம் |
| ஏப்ரல் 11உ | திருவல்லிக்கேணி பைன் ஆர்ட்ஸ் கிளப் நாடகம் | - | அப்பளியும் சாம்பு |
| ஏப்ரல் 12உ | பாட்டு | | |
| ஏப்ரல் 13உ | வைஜயந்திமாலா | - | பரத நாட்டியம் |
| ஏப்ரல் 18உ | லலிதா, பத்மினி, ராகினி | - | நடனம் |

தினசரி டிக்கட்டுகள்: ரூ. **10, 5, 3, 2 & 1.** சீசன் டிக்கட்டுகள்: ரூ. **35, 25, 15 & 10.**

கீழ்க்கண்ட இடங்களில் டிக்கட்டுகள் கிடைக்கும்:

1. 84, வெங்கடரங்கம் பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி
2. தேசிய பெண்கள் உயர்தர பாடசாலை, Dr. பெஸண்ட் ரோட், திருவல்லிக்கேணி
3. மியூஸிக் மான்ஷன்ஸ், 174, பிராட்வே, சென்னை

# Advertisers...
# get the TRUTH
# about the media you use!

As an advertiser, it is vital for you to know exactly how many readers you get for each rupee spent on advertising.

More than 125 leading publications are now members of the Audit Bureau of Circulations — enough to conduct a full-scale, 13 language national advertising campaign in India, Pakistan and Ceylon. Their circulation figures are subject to re-check at any time by ABC appointed auditors, and are passed on as half-yearly confidential certificates to ABC members.

If you want to know the truth about your advertising media write today for full details of ABC membership!

**AUDIT BUREAU OF CIRCULATIONS LTD.**

Mubarak Manzil, Apollo Street
Fort, Bombay

The following advertisers and advertising agencies are already members of the ABC :—

ADVERTISERS:

Allied photographics Ltd., E. M. Allcock & Mohatta Ltd. Atlantis (East) Ltd. Balmer Lawrie & Co. Ltd. Bombay Mutual Life Assurance Society Ltd. Boots Pure Drug Co. (India) Ltd. Burmah - Shell Oil Storage & Distributing Company of India Ltd. Caltex (India) Ltd. Central Tea Board. Corn Products Co. (India) Ltd. Dunlop Rubber Co. (India) Ltd. Glaxo Laboratories (India) Ltd. Godrej & Boyce Mfg. Co. Ltd. Hall & Anderson Ltd. Imperial Chemical Industries (India) Ltd. Imperial Tobacco Co. of India Ltd. India Tyre & Rubber Co. (India) Ltd. J. L. Morison, Son Lever Brothers (India) Ltd. Lipton Ltd. & Jones (India) Ltd. Mullar & Phipps (India) Ltd. National Carbon Co. (India) Ltd. Parle Products Manufacturing Co. Ltd. Punjabi Chandu Halwai Karachiwala. Sales Products Overseas Ltd. Shalimar Paint, Colour & Varnish Co. Ltd. Tata Oil Mills Co. Ltd. Volkart Brothers.

ADVERTISING AGENCIES:

Advertising & Sales Promotion Co. Easterns. Efficient Publicities Ltd. Everest Advertising Ltd. Grant Advertising Inc. Greens' Advertising Service Agents. India Advertising Service. D. J. Keymer & Co., Ltd. Lintas Ltd. National Advertising Service Ltd. Press Syndicate Ltd. P. S. Mani & Co. Ranjit Sales & Publicity Ltd. Shilpi Ltd. Sista's Ltd. F. D. Stewart Ltd. L. A. Stronach & Co (India) Ltd. J. Walter Thompson Company (Eastern) Ltd.

**Inserted by the "KALKI" Madras**

THE TAMIL WEEKLY WITH THE ABC CERTIFIED CIRCULATION

கல்கி

மலர் 12 | தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார். | இதழ் 35

# ஒரே குரலாகக் கேளுங்கள்

காஷ்மீர் மீது அன்னியர்கள் படையெடுத்து வந்தபோது, அதற்கு உதவி புரிந்து அதைக் காப்பாற்றுவதற்காக இந்திய சர்க்கார் விரைந்து சென்றனர்.

காஷ்மீர் போரைச் சமாளிக்க இந்திய சர்க்கார் எத்தனையோ கோடி ரூபாய் செலவு செய்ய வேண்டியதாயிற்று. அவ்விதம் செலவு செய்வது இந்தியாவின் முழு முதற் கடமையாக அமைந்தது.

அதுபோலவே இப்போது நமது சென்னை மாகாணத்தின் மீது பல கஷ்டங்கள் படையெடுத்து வந்துள்ளன. அவற்றை எதிர்த்துப் போர் தொடுத்து வெற்றி பெறுவதற்குச் சென்னை சர்க்கார் இந்திய சர்க்காரின் உதவியை நாடும்படியான அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

இந்திய சர்க்கார் உதவி புரிந்தாலன்றி மேற்படி கஷ்டங்களைச் சமாளிப்பது முடியாத காரியம் என்று ராஜாஜி அசெம்பிளியில் கூறியிருக்கிறார்.

இந்திய யூனியன் சர்க்காரின் பலத்துக்கும் செல்வாக்கிற்கும் அதனுடன் ஐக்கியம் அடைந்துள்ள மாகாணங்களே காரணம்.

எனவே, அத்தகைய மாகாணம் ஒன்றில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைச் சமாளிப்பதற்கு உதவி புரிய இந்திய சர்க்கார் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

* * * *

சில தினங்களுக்கு முன் சென்னை சர்க்காரின் 1953-54ம் வருஷத்திய வரவு செலவுத் திட்டம் அசெம்பிளியில் சமர்ப்பிக்கப்பட்டபோது, அதைச் சரிக்கட்டுவதற்கு இரண்டு இனங்களிலிருந்து பெரும் தொகை கிடைக்கும் என்று மதிப்பிட்டனர்.

1. சென்னை மாகாண மக்களிடமிருந்து ஐந்து கோடி ரூபாய் கடன் வாங்குவது.
2. இந்திய சர்க்காரிடமிருந்து கணிசமான உதவியைக் கோருவது.

புதிய வரிகளை விதித்தோ, அல்லது பழைய வரிகளை உயர்த்தியோ சர்க்கார் வரவு செலவைச் சரிக்கட்ட முற்பட்டிருக்கலாம்.

ஆனால் ஜனங்களுக்கு மேற்கொண்டு அணுவளவும் துன்பம் ஏற்படும்படி செய்யச் சென்னை சர்க்கார் விரும்பவில்லை.

ஜனங்களிடமிருந்து எழுப்ப உத்தேசித்துள்ள கடன் தொகையைச் சர்க்கார் அதிகமாக்கி இருக்கலாம்.

அவ்விதம் செய்வது தாற்காலிகமான பரிகாரமாக இருக்குமே யன்றி, அதனால் சர்க்காரின் நிதி நிலைமை சீர்படாது.

தற்போது சென்னை சர்க்காருக்கு ஏற்பட்டுள்ள பணக் கஷ்டம் சர்க்காரின் திறமைக் குறைவினாலோ, ஊதாரித்தனத்தினாலோ ஏற்பட்டதல்ல; இயற்கையின் மறக் கருணையினால் சிருஷ்டிக்கப்பட்டது; சேர்ந்தாற்போல் ஆறு வருஷங்களாகப் பருவ மழை பொய்த்து விட்டதால் உருவானது.

அதன் காரணமாக இந்த மாகாணத்தில் உள்ள விவசாயிகள் மாத்திரம் பாதிக்கப்படவில்லை; நெசவாளர்கள், குடிசைத் தொழிலாளர்கள், அன்றாடக் கூலி வேலை செய்து பிழைப்பவர்கள் ஆகிய எல்லோருமே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

சென்ற வருஷம் ராயல சீமையில் ஏற்பட்ட பஞ்சத்தை மாத்திரம் சமாளிப்பதற்குச் சர்க்கார் சற்றேறக்குறைய நாலுகோடி ரூபாய் செலவு செய்ய நேர்ந்தது.

பிறகு மேற்படி பஞ்சம் வட ஆற்காடு ஜில்லா பிரதேசங்களில் பரவியது. அது சர்க்கார் பொக்கிஷத்திலிருந்து ஒரு கோடி ரூபாய்க்குமேல் விழுங்கியது.

இப்போது அது கோயம்புத்தூர், திருநெல்வேலி, ராமநாதபுரம் ஜில்லாக்களில் பரவி, சர்க்கார் பொக்கிஷத்தை உறிஞ்சி வருகிறது.

அதாவது சென்னை சர்க்காரின் மொத்த வருமானத்தில் ஆறில் ஒரு பகுதி பஞ்சத்தைச் சமாளிப்பதற்காக ஏற்கெனவே செலவாகி விட்டது. மேற்கொண்டு இன்னும் செலவு செய்வதற்கு அவசியமும் ஏற்பட்டிருக்கிறது.

இதற்குமுன் சென்னை ராஜ்யத்தில் இத்தகைய கொடிய பஞ்சம் ஏற்பட்டதில்லை என்று ராஜாஜி குறிப்பிட்டிருப்பதிலிருந்து, நெருக்கடியின் தன்மையை அறிந்து கொள்ளலாம்.

எனவே, ஜனப்பிரதிநிதிகள் சர்க்காரிடம் குறை கண்டு பிடிப்பதில் மாத்திரம் கவனம் செலுத்தாமல், மேற்படி நெருக்கடியைத் தீர்ப்பதற்குற்ற தகுந்த யோசனைகளைக் கூற வேண்டும்; சென்னைக்குக் கணிசமான உதவி அளிக்க முன்வரும்படி இந்திய சர்க்காரை எல்லோரும் ஏகோபித்து ஒரே குரலாகக் கேட்டுக் கொள்ள வேண்டும் என்று ராஜாஜி கூறியிருக்கிறார்.

இந்த மாகாணத்தில் வருமான வரி போன்ற நேர் வரிகளின் மூலம் இந்திய சர்க்காருக்குக் கிடைக்கும் தொகையில் கணிசமான பகுதியைத் தாற்காலிகமாக அவர்கள் உதவினாலே போதும்; இந்த மாகாணத்தின் பொருளாதார நெருக்கடியை ஒருவாறு சமாளித்துக் கரையேறலாம்.

ஜனப் பிரதிநிதிகளுக்குள் அரசியல் விஷயமாகக் கட்சி வேற்றுமையும், அபிப்பிராய பேதங்களும் இருப்பது இயல்புதான்.

ஆனால் மக்கள் பஞ்சத்திலிருந்து விடுதலை பெற வேண்டும்; நமது மாகாணத்தின் பொருளாதார நிலைமை சீர்பட வேண்டும்; மக்கள் சுபிட்சம் அடைய வேண்டும்—இவை சம்பந்தப்பட்ட வரையில் எத்தகைய அபிப்பிராய பேதமும் இருப்பதற்கு இடமில்லை.

எனவே, இப்போது ஏற்பட்டுள்ள கடுமையான நிதி நெருக்கடியைச் சமாளிக்கும் விஷயமாக ராஜாஜிக்குப் பக்க பலமாக இருக்க வேண்டியது ஜனப் பிரதிநிதிகளின் ஏகோபித்த பொறுப்பு, தமிழ் நாட்டு மக்களின் தலைசிறந்த கடமை என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

# பதினெட்டு முழக் கைத்தறிச் சேலை பத்தே ரூபாய்!

சென்னைமா நகரின் வீதிகளில் கைத்தறியில் நெய்த துணிகளைக் கை வண்டியில் போட்டுக் கொண்டு போகிறார்கள். "கைத்தறித் துணி வாங்குங்கள்!" என்று கோஷமிட்டுக் கொண்டு போகிறார்கள். வாங்க முன்வரும் புண்ணியவான்களிடம் விற்று விட்டு மேலே செல்கிறார்கள். பதினெட்டு முழம் (ஒன்பது கஜம்) நீளமுள்ள கைத்தறிச் சேலையைப் பத்து ரூபாய்க்குக் கொடுக்கிறார்கள். மற்றத் துணிகளையும் இதே மாதிரி மலிவான விலைக்குத் தருகிறார்கள்.

எண்பதாம் நம்பர் நூலில் நெய்த பதினெட்டு முழக் கைத்தறிச் சேலையைப் பார்க்கப் பார்க்க அதிசயமாயிருக்கிறது! சேலையின் அமைப்பும் வர்ணமும் வேலைப்பாடும் அதிசய மளிக்கின்றன. பத்து ரூபாய் விலைக்கு இந்த அற்புதமான கைத்தொழில் பண்டத்தை எப்படிக் கொடுக்கிறார்கள் என்ற அதிசயமும் சேர்ந்து கொள்கிறது.

பதினெட்டு முழச் சேலைக்கு வேண்டிய எண்பதாம் நம்பர் நூலின் கிரயம் என்ன! அதற்கு ஏற்றியுள்ள சாயத்தின் கிரயம் என்ன! இந்தக் கைத்தொழில் அற்புதத்தைத் தயாரிப்பதற்கு எத்தனை பேர் எத்தனை நாள் ஒத்துழைத்து வேலை செய்திருக்க வேண்டும்! நெசவுக் கூலி எவ்வளவு! வண்டியில் போட்டு வீதியில் கொண்டு வந்து விற்கும் வரையில் ஆகும் செலவு எவ்வளவு!—இவற்றை யெல்லாம் எண்ணிப் பார்த்தால், யாரும் வியப்படையாம லிருக்க முடியாது. நெல்லின் விலையும் மற்றப் பண்டங்களின் விலையும் இருக்கும் நிலவரத்தை எண்ணிவிட்டு, இந்தச் சேலையைப் பத்து ரூபாய் விலைக்கு எப்படிக் கொடுக்கிறார்கள் என்று நினைத்துப் பார்த்தால், ஆச்சரியக் கடலில் மூழ்கி விடுவோம்.

கைத்தறிச் சேலையைப் போலவே மற்ற ரகத் துணிகளும் மலிவாக இருக்கின்றன. ஒரு சேலையோ அல்லது வேறு கைத்தறித் துணியோ வாங்கினால், ஒரு நெசவுத் தொழிலாளியின் குடும்பத்தைச் சில நாள் பட்டினி கிடக்காமல் காப்பாற்றிய புண்ணியத்தைக் கட்டிக் கொள்ளலாம்.

இத்தகைய அபூர்வமான கைத்திறமை வாய்ந்த நெசவுத் தொழிலாளர் குடும்பங்கள் இந்த நாட்டில் முப்பது லட்சம் குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களை நம்பிப் பிழைக்கும் ஒரு கோடி ஜீவன்கள் இருக்கிறார்கள்.

என்ன துரதிர்ஷ்டத்தினாலோ, யார் செய்த பாவத்தினாலோ, இவர்கள் விஷயத்தில் இந்திய அரசாங்கத்தார் இரும்பு மனம் படைத்திருக்கிறார்கள். ஆலைத் தொழில் ராட்சதனை இந்த ஏழை எளியவர்களுடன் போட்டியிட அனுமதித்திருக்கிறார்கள். கரை போட்ட வேஷ்டிகளையும் வர்ணம் போட்ட சேலைகளையும் மட்டும் கைத்தறிக்கு ஒதுக்கும் யோசனையை இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்திய சர்க்காரின் மனது இளகும்போது இளகட்டும். அதுவரைக்கும், தமிழ் நாட்டில் ஈவிரக்கம் பச்சாத்தாபம் உள்ளவர்கள் அனைவரும் கைத்தறியில் நெசவு செய்த துணிகளையே தங்கள் உபயோகத்துக்கு வாங்கிப் பல லட்சம் கைத்திறன் படைத்த தொழிலாளிகளைப் பசி பட்டினியிலிருந்து காப்பாற்றி வர வேண்டும்.

# "மெட்ராஸ் மெயில்" பட்டினிச் சாவு

ராயபுரத்தில் ஒரு துர்ப்பாக்கிய சாலியான மனிதன் இருந்தான். அவனுக்கு எங்கும் வேலை கிடைக்கவில்லை. கஞ்சி நிலையத்துக்குப் போனான். கஞ்சி நிலையத்தை மூடிவிட்டார்கள் என்று தெரிந்தது. திரும்பி வந்தான். ஐந்து நாள் பட்டினியாகக் கிடந்தான். அவன் ஆவி பிரிந்தது. அவனுடைய உடல் ஒரு கோவிலில் கிடந்தது.

பிறகு அவனுக்கு யோகம் பிறந்தது. "மெட்ராஸ் மெயில்" பத்திரிகைக்காரர்கள் ஓட்டமாய் ஓடிச் சென்றார்கள். இறந்து போனவனுடைய உடலைப் படம் பிடித்தார்கள். பேஷான பிளாக் தயாரித்தார்கள். பத்திரிகையில் சென்ற வாரத்து இதழ் ஒன்றில் வெளியிட்டார்கள். போட்டோ பிடித்த செலவு, பிளாக் செய்த செலவு, அச்சிட்ட

செலவு, பல்லாயிரம் பிரதிகளின் காகித விலை — எல்லாமாக ஒரு கணிசமான தொகை ஆகியிருக்கும்.

இந்த யோகம் அந்த மனிதனுக்கு இறந்து போவதற்கு இருபத்து நாலு மணி நேரத்துக்கு முன்னால் வந்திருக்கக் கூடாதா! "மெட்ராஸ் மெயில்" காரர்களின் கருணை அவன் பேரில் சில மணி நேரத்துக்கு முன்னால் திரும்பியிருக்கக் கூடாதா! திரும்பியிருந்தால், சில அணுச் செலவில் அவன் உயிரைக் காப்பாற்றியிருக்கலாம். காப்பாற்றி ஒரு கிராம முனிசிப்பிடமோ, வேறு அதிகாரியிடமோ அவனைக் கொண்டு போய்ச் சேர்த்திருக்கலாம். பட்டினிச் சாவுகளைத் தடுப்பதற்குச் சட்டத்திலேயே ஏற்பாடு இருக்கிறது. அதன்படி அதிகாரிகள் செய்து அவனைப் பிழைக்க வைத்திருப்பார்கள்.

பாவம்! அந்த மனிதன் அவ்வளவுக்குக் கொடுத்து வைத்திருக்கவில்லை. உண்ணாவிரதம் இருப்பவர்கள் நாற்பது நாள், ஐம்பது நாள்வரை உயிரோடிருந்து விட்டுத்தான் கடைசியில் இறந்து போகிறார்கள்.

ஆனால் அந்த ஏழை ஐந்து நாளில் இறந்து போனான். "மெட்ராஸ் மெயில்" பத்திரிகையில் தன் படத்தை இறந்த பிறகு எடுத்துப் போட வேண்டுமென்பதற்காகவே அவ்வளவு அவசரப்பட்டான் போலும்!

சீச்சீ! இது என்ன இழிந்த செய்கை! "மெட்ராஸ் மெயில்" பத்திரிகையின் நிர்வாகிகள் வெள்ளைக்காரர்கள். அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் ஒரு வெள்ளைக்காரர். பலப்பல வருஷங்களாக அப்பத்திரிகையின் ஆசிரியராக இருக்கிறார். இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்னால் சுதந்திர இயக்கத்தையும் தேசியத் தலைவர்களையும் தாக்குவதே அப்பத்திரிகையின் முக்கிய கொள்கையாக இருந்தது. பிரிட்டிஷ் சர்க்காரையும் பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தையும் பிரிட்டிஷ் முதலாளி வர்க்கத்தையும் தாங்குவது அடுத்த படியான கொள்கையாக இருந்தது. அந்த நாளில், பிரிட்டிஷ் ஆட்சி நடந்த நாளில், வங்காளத்தில் அறுபது லட்சம் மக்கள் பட்டினியினால் செத்துப் போனார்கள். சாலை ஓரங்களிலெல்லாம் விழுந்து செத்துக் கிடந்தார்கள். கல்கத்தா நகரங்களின் வீதிகளில் ஆயிரம், பதினாயிரம் மக்கள் செத்துக் கிடந்தார்கள். அப்போதெல்லாம் இந்த "மெட்ராஸ் மெயில்" பட்டினியினால் செத்தவர்களைப் படம் எடுத்துப் போடவில்லை.

பெரிய அதிகாரிகள், மகாராஜாக்கள், ஜமீன்தார்களின் டின்னர் பார்ட்டிகள், டீ பார்ட்டிகளின் படங்களை எடுத்துப் போடுவதுடன் திருப்தி அடைந்திருந்தது.

இப்போது நாட்டின் எந்த மூலையில் எவன் பட்டினி கிடக்கிறான்.— அவன் எப்போது சாவான் என்று பார்த்துக் கொண்டிருந்து, டபக்கென்று காமிராவை எடுத்துக் கொண்டு போய்ப் படம் பிடித்துக் கொண்டு வந்து, பேஷான பிளாக் செய்து வெளியிடுகிறார்கள்.

கடவுளே! இப்படியும் மனித ஜன்மம் உண்டா!

* * *

தமிழ் நாட்டின் சில பகுதிகளில் இப்போது பஞ்சம் பரவியிருப்பது உண்மை. பஞ்சம் பரவி

## உதவி போதுமா?




சென்னை மாகாணத்தில் தற்போது பஞ்சத்தினால் ஏற்பட்டுள்ள நிலைமையில் இந்திய சர்க்கார் அளித்திருக்கும் உதவி சிறிதும் போதாது என்று ராஜாஜி சட்டசபையில் வற்புறுத்தினார்.

யுள்ள இடத்தில் பட்டினி இருப்பதும் இயல்புதான். மக்களின் பட்டினியைப் போக்கவும் பஞ்சத்தின் கொடுமையைத் தணிக்கவும் காங்கிரஸ் சர்க்கார் எவ்வளவோ பிரயத்தனங்கள் செய்து வருகிறார்கள். நேர்மையும் கருணையும் உள்ளவர்கள் எல்லாரும் அந்தப் புனிதமான பணியில் உதவி செய்வதுதான் நியாயம்.

காங்கிரஸ் விரோதிகளோ அதற்கு நேர்மாறான காரியம் செய்து வருகிறார்கள். பட்டினியினால் செத்தவர்களைப் படம் எடுத்துப் போடுவதே தாங்கள் செய்யக்கூடிய திருப்பணி என்று நினைத்துச் செய்து வருகிறார்கள்.

இறந்து போனவனின் உடலைப் படம் பிடித்துப் போட்டு விடலாம். ஆனால் அவன் எதனால் இறந்தான் என்பதை எளிதில் நிரூபிக்க முடியாது. நோயினால் இறந்தானா! பட்டினியினால் இறந்தானா! அல்லது இறந்த பிறகு படம் பிடித்துப் போடுகிற ஜன்மங்கள் இருப்பதை எண்ணி இறந்தானா என்று யார் கண்டார்கள்! அச்சடித்ததெல்லாம் உண்மையாகி விடாதல்லவா!

சீரும் செல்வாக்கும் சகல வசதிகளும் பொருந்திய "மெட்ராஸ் மெயில்" பத்திரிகை இத்தகைய இழி செயலில் இறங்க வேண்டியதில்லை.

அதற்குப் பதிலாக, வேலையின்றியும் உணவின்றியும் பட்டினி கிடப்பவர்களை உயிரோடிருக்கும் போதே கண்டு பிடித்து அந்தப் பகுதியின் கிராம உத்தியோகஸ்தர்களிடமோ, வேறு பெரிய அதிகாரிகளிடமோ கொண்டு போய்ச் சேர்த்துவிட்டு, அப்படிக் காப்பாற்றப் பட்டவர்களைப் படம் பிடித்துப் போடலாம்.

அவ்வாறு, பட்டினி கிடப்பவனைச் சாகாமற் காப்பாற்றி விட்டு அவனைப் படம் பிடித்து அனுப்புகிறவர்களுக்குப் பத்து ரூபாய் பரிசு கொடுப்பதாகவும் விளம்பரப் படுத்தலாம். இதற்கு "மெட்ராஸ் மெயில்" பத்திரிகை ஒரு நிதி ஏற்படுத்தினால், அதன் வாசகர்கள் பெரும்பாலும் பண வசதி உள்ளவர்களாதலால் தாராளமாக நன்கொடை வழங்குவார்கள்.

ஏன்! "மெட்ராஸ் மெயில்" பத்திரிகை அதன் சொந்தப் பொறுப்பில் சில கஞ்சி நிலையங்களையும் ஏற்படுத்தலாம். தினம் முப்பது ரூபாய் செலவில் ஆயிரம் ஜனங்களுக்குக் கஞ்சி ஊற்றிப் பட்டினியிலிருந்து காப்பாற்றலாம்.

"மெட்ராஸ் மெயில்" நிர்வாகிகள் கோமகவரர்கள். "மெட்ராஸ் மெயில்" ஆசிரியர் பலப் பல ஆண்டுகள் இந்நாட்டில் வசித்து இந்நாட்டு மக்களினால் பல வசதிகளையும் அடைந்தவர். அவர்கள் மனது வைத்தால் சில கஞ்சி நிலையங்களை ஏற்படுத்தி மக்களைப் பட்டினிக் கொடுமையிலிருந்து காப்பது மிக எளிதாயிருக்கும்.

இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் இருக்கும் பெரிய செல்வாக்குள்ள பத்திரிகைகள் இப்படிப்பட்ட சமூகத் தொண்டு கைங்கரியங்கள் பல செய்து வருவது உண்டு.

அம்மாதிரி கைங்கரியத்தை "மெட்ராஸ் மெயில்" ஏன் செய்யக் கூடாது! கழுகுகளும் பருந்துகளும் சாகப் போகிறவனைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்து, அவன் செத்தவுடனே உயிரற்ற உடலின்மீது பாய்வது போன்ற நீசத்தனமான காரியத்தை ஏன் செய்ய வேண்டும்!

---

## ஆலம் உண்டவர்!




*Courtesy — Sunday Times*

# பொன்னியின் செல்வன்

கல்கி

மணியம்

இரண்டாம் அத்தியாயம்

## வந்தான் முருகய்யன்!

சூடாமணி விஹாரத்துக்கு வெளியே கடல் பொங்கும்போது எழும் ஓசையைப் போல் மக்களின் இரைச்சல் ஒலி பெருகிக் கொண்டிருந்ததைச் சிறிது நேரம் ஆச்சாரிய பிக்ஷுவும் அருள்மொழி வர்மரும் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அந்தப் புத்த விஹாரமும் அதில் உள்ள பிக்ஷுக்களும் தம்மால் இந்தப் பெரும் சங்கடத்துக்கு உள்ளாகியிருப்பதை எண்ணி இளவரசர் மிகவும் மனக் கலக்கம் அடைந்தார்.

"சுவாமி! என்னால் உங்களுக்கு இந்தத் தொல்லை உண்டானதைப் பற்றி வருத்தப்படுகிறேன்" என்றார்.

"இளவரசே! தங்கள் காரணமாக இதுபோல் நூறுமடங்கு தொல்லை நேர்ந்தாலும் நாங்கள் பொருட்படுத்த மாட்டோம். தாங்களும் தங்கள் குடும்பத்தாரும் எங்களுக்குச் செய்திருக்கும் உதவிகளுக்கு இது ஒரு கைம்மாறாகுமா?" என்றார் பிக்ஷு.

"அதுமட்டும் அல்ல. இம்மாதிரி ஒளிவு மறைவாகக் காரியம் செய்வது எனக்கு எப்போதும் பிடிப்பதில்லை. நான் இங்கு இருந்து கொண்டே எதற்காக 'இல்லை' என்று சொல்ல வேண்டும்? சத்தியத்துக்கு விரோதமான இந்தக் காரியத்தில் தங்களையும் எதற்காக நான் உட்படுத்த வேண்டும்? தங்களுடைய பரிவான சிகிச்சையினால் எனக்கு உடம்பும் நன்றாகக் குணமாகி விட்டது. இப்போதே வெளியேறிச்சென்று ஜனங்களிடம் நான் இன்னான் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். தாங்கள் எனக்கு அடைக்கலம் அளித்துச் சிகிச்சை செய்து என் உயிரையும் காப்பாற்றினீர்கள் என்பதை மக்களிடம் அறிவிக்கிறேன். இந்தச் சூடாமணி விஹாரத்துக்கு என் காரணமாக எந்த வித அபகீர்த்தியும் ஏற்படக் கூடாது" என்றார் இளவரசர்.

"ஐயா! இதில் சத்தியத்துக்கு விரோதமான காரியம் எதுவும் இல்லை. தங்களுடைய எதிரிகள் தாங்கள் இருக்கும் இடத்தைக் கண்டு பிடிக்க முயல்கிறார்கள். இந்த நாகைப் பட்டினத்தில் அவர்கள் சென்ற இரண்டு நாளாகப் பரப்பி உள்ள வதந்தியிலிருந்தே அது நிச்சயமாகிறது. அப்படியிருக்க, தாங்கள் இங்கே இருப்பதைத் தெரிவியாமல் வைத்திருப்பதில் தவறு என்ன? அரச குலத்தினர் இம்மாதிரி சில சமயம் மறைந்திருக்க வேண்டியது இராஜரீக தர்மத்துக்கு உகந்தது. பஞ்ச பாண்டவர்கள் ஒரு வருஷம் அஞ்ஞாத வாசம் செய்யவில்லையா? அப்போது தர்மபுத்திரர் சத்தியத்துக்கு மாறாக நடந்தார் என்று சொல்ல முடியுமா?" என்று பிக்ஷு கேட்டார்.

"குருதேவரே! தங்கள் அறிவுத்திறனும் விவாதத்திறனும் அபாரமானவை யென்பதை அறிவேன். தங்களுடன் தர்க்கம் செய்து என்னால் வெல்ல முடியாது. ஆனாலும், ஒன்று சொல்லுகிறேன். பஞ்சபாண்டவர்கள் மறைந்

திருக்க வேண்டியது அவர்கள் ஏற்றுக் கொண்ட 'சூள்' காரணமாக அவசியமாயிருந்தது. எனக்கு அப்படி அவசியம் ஒன்றும் இல்லை. என் விரோதிகளைப் பற்றிச் சொல்கிறீர்கள். எனக்கு அப்படிப்பட்ட விரோதிகள் யார்? எதற்காக என்னை அவர்கள் விரோதிக்க வேண்டும்? எனக்கோ இராஜ்யம் ஆளுவதில் சிறிதும் ஆசை இல்லை. இதையெல்லாம் நான் வெளியிட்டுச் சொல்லி, அப்படி யாராவது எனக்கு எதிரிகள் இருந்தாலும், அவர்களையும் சிநேகிதர்கள் ஆக்கிக் கொள்வேன். என்னால் உங்களுக்குத் தொந்தரவும் இல்லாமற் போகும். மக்களும் நான் உயிரோடிருப்பது அறிந்து ஏதேனும் திருப்தி அடைவதா யிருந்தால் அடையட்டுமே? அதில் யாருக்கு என்ன நஷ்டம்?"

"இளவரசே! தாங்கள் சொல்லுவதெல்லாம் உண்மையே. தங்களுடைய நிலைமையில் நானும் அவ்விதமே எண்ணி நடந்து கொள்வேன். ஆனால் அதற்குத் தடையாக நிற்பது தங்கள் திருச் சகோதரி குந்தவைப் பிராட்டிக்கு நாங்கள் கொடுத்திருக்கும் வாக்குறுதிதான். பழையாறை இளைய பிராட்டியைப் போன்ற அறிவிற் சிறந்த மாதரசி சோழ குலத்தில் தோன்றியதில்லை யென்று தாங்களே பலமுறை சொல்லி யிருக்கிறீர்கள். வேறு எந்த இராஜ குலத்திலும் தோன்றியதில்லை என்பது என் கருத்து. அவர் தாம் செய்தி அனுப்பும் வரையில் தங்களை இங்கே வைத்துப் பாதுகாக்கும்படி சொல்லிவிட்டுச் சென்றார். முக்கியமான காரணம் இன்றி அவர் அவ்விதம் சொல்லி யிருக்க மாட்டார். சுந்தர சோழ சக்கரவர்த்தியின் குடும்பத்துக்கு விரோதமாகச் சோழ நாட்டுச் சிற்றரசர்கள் பலர் சதி செய்வதாக நாடெல்லாம் பேச்சாக இருந்து வருகிறது. மற்றொரு பக்கத்தில் பாண்டிய நாட்டைச் சேர்ந்த சிலர் இரகசியச் சதி வேலை செய்து வருவதாகவும் பேசிக் கொள்கிறார்கள். அந்தக் கூட்டத்தாருக்கு இந்தப் புத்த விஹாரத்திலுள்ள நாங்கள் உதவி செய்கிறோமோ என்று எண்ணித்தான் ஜனங்கள் ஆத்திரம் அடைந்து வாசலில் வந்து கூடியிருக்கிறார்கள். இந்த நிலைமையில் தாங்கள் வெளியேறி மக்களின் முன்னிலையில் தங்களை வெளிப்படுத்திக் கொள்வது உசிதமான காரியமா? யோசியுங்கள்! அதைக் காட்டிலும், தங்களைப் பாதுகாக்கும் முயற்சியில் எங்களுக் கெல்லாம் ஏதேனும் சங்கடம் நேர்ந்தால் நேரட்டுமே?—அதற்கு நாங்கள் ஒரு நாளும் பின்வாங்கப் போவதில்லை!......"

இவ்வாறு தலைமைப் பிக்ஷு சொல்லிக் கொண்டிருந்த போது, இன்னொரு இளம் சந்நியாசி அங்கே பரபரப்புடன் வந்தார்.

"சுவாமி! நிலைமை மிஞ்சிப் போய் விட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் விஹாரத்தைச் சூழ்ந்து நின்று 'இளவரசரைப் பார்க்க வேண்டும்' என்று கூச்சலிடுகிறார்கள். 'இளவரசர் இங்கே இல்லை' என்று நாங்கள் எவ்வளவு சொல்லியும் பயனில்லை. 'நாங்களே விஹாரத்துக்குள் வந்து சோதித்துப் பார்க்க வேண்டும்' என்று கூச்சலிடுகிறார்கள். அவர்களுக்கு நாம் ஏதாவது ஒரு வழி சொல்லாவிட்டால், பலாத்காரமாக உள்ளே புகுந்து விடுவார்கள் போலிருக்கிறது!" என்றார்.

"அவர்களுக்கு நாம் என்ன வழி சொல்ல முடியும்? புத்த பகவான் அவர்களுடைய மனத்தை மாற்ற ஏதேனும் வழி கூறினால்தான் உண்டு!" என்றார் தலைமைப் பிக்ஷு.

இளவரசர் அப்போது, "குருதேவரே! எனக்கு ஒரு வழி தோன்றுகிறது. கருணை கூர்ந்து கேட்கவேண்டும். தங்கள் சீடர்கள் நான் இங்கே இல்லை என்று ஜனங்களுக்குச் சொல்லி யிருக்கிறார்கள். இனி நான் ஜனங்களின் முன்னிலையில் போய் நின்றால் தங்கள் சீடர்களின் வாக்கைப் பொய்யாக்கியதாகும். அதனால் ஒருவேளை ஜனங்களின் மூர்க்காவேசம் அதிகமானாலும் ஆகலாம்" என்றார்.

"நிச்சயமாய் ஆகியே தீரும். அதன் பலனை நாங்கள் அநுபவிக்க வேண்டியதுதான்" என்றார் பிக்ஷு.

"அதைக் காட்டிலும் தங்கள் சீடர்களுடைய வாக்கை நான் மெய்யாக்கி விடுகிறேன்......"

"இளவரசே! தங்களால்கூட அது முடியாத காரியம் என்று நினைக்கிறேன். இவர்கள் சொன்னது சொன்னதுதானே? அதை எப்படி இனி மெய்யாக்க முடியும்?"

"அதற்கு வழியிருக்கிறது. ஜனங்கள் இந்த விஹாரத்துக்குள் புகுவதற்குள்ளே நான் இங்கிருந்து போய்விடலாம் அல்லவா?"

"ஆகா! எங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அத்தகைய பாவச் செயலை நாங்கள் செய்ய வேண்டுமா? தங்களை வெளியேற்ற வேண்டுமா?"

"குருதேவரே! இதில் பாவமும் இல்லை, பழியும் இல்லை. இங்கிருந்து அரைக்காத தூரத்தில் ஆனைமங்கலத்தில் சோழ மாளிகை இருக்கிறது. அன்றைக்கு என் சகோதரியைப் பார்க்கச் சென்றபடி இப்போதும் உடனே கால்வாய் வழியே அங்கே போய் விடுகிறேன். பிறகு, சௌகரியமானபோது திரும்பி வந்து விட்டால் போகிறது!" என்று சொன்னார் இளவரசர்.

ஆச்சாரிய பிக்ஷுவுக்கு இளவரசர் கூறிய அந்த யோசனை பிடித்திருந்ததாகத் தோன்றியது.

"ஆம், ஆம்! அப்படிச் செய்தால் தங்களை உடனே வெளிப்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியமில்லாமற் போகும். தங்கள் தமக்கையின் கருத்தையும் நிறைவேற்றியதாகும். ஆனால் கால்வாய் விஹாரத்திலிருந்து வெளியேறும் இடத்திலும் ஜனங்கள் நிற்கலாம் அல்லவா? அவர்கள் படகில் தாங்கள் போவதைப் பார்க்கக் கூடுமே?" என்றார்.

"குருதேவரே! அதற்கு ஓர் உபாயம் செய்ய முடியும். கூட்டத்தில் உள்ளவர்களில் யாரேனும் ஒருவன் விஹாரத்திற்குள் வந்து தேடிப் பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லுவோம்" என்றார் இளம் பிக்ஷு.

"ஒருவன் வந்து பார்த்தால் போதாதா? அவன் வெளியிலே சென்று மற்றவர்களிடம் சொல்லமாட்டானா?" என்றார் குரு.

"அவனை இங்கே கொஞ்சம் தாமதப்படுத்தி வைத்திருந்தால், அதற்குள் இருட்டிவிடும். இளவரசர் வெளியேறச் சௌகரியமாயிருக்கும். அது மட்டுமல்ல; சீக்கிரத்தில் ஒரு பெரும் புயல் அடிக்கலாம் என்பதற்கு அறிகுறிகள் தென்படுகின்றன. இங்கிருந்து பார்க்கும்போதே கடல் அலைகள் மலைபோல் எழுகின்றன. கடலின் ஆரவாரமும் அதிகமாகி வருகிறது. புத்த பகவானுடைய கருணை அப்படி இருக்கிறதோ, என்னமோ? பெரும் புயல் அடித்து நம்முடைய இந்தச் சங்கடம் தீரவேண்டும் என்பது பகவானுடைய சித்தமோ, என்னமோ!" என்று கூறினார் இளம் பிக்ஷு.

"அப்படியெல்லாம் சொல்ல வேண்டாம். நம்முடைய சங்கடம் தீருவதற்காகக் கடல் கொந்தளித்துப் பெரும் புயல் வரவேண்டுமா?" என்றார் குரு.

"சுவாமி! தங்கள் சீடர் சொல்லும் வழியைப் பரீட்சித்துப் பார்க்கலாம் என்று எனக்கும் தோன்றுகிறது. உள்ளே ஒரு தனி மனிதன் மட்டும் வந்தால், ஒருவேளை அவனிடம் நான் பேசி அவன் மனத்தை மாற்றுவது சாத்தியமாகலாம்" என்றார் இளவரசர்.

"அந்த யோசனையும் என் மனதில் இருக்கிறது. இரண்டு தினங்களுக்கு முன்பு கோடிக்கரையிலிருந்து ஒரு படகோட்டியும் அவன் மனையாளும் விஹாரத்தின் வாசலில் வந்து இளவரசரைப் பற்றி விசாரித்தார்கள். இளவரசர் இங்கேதான் இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். படகோட்டியின் மனையாள் பெருங் கூச்சல் போட்டாள்......!"

"ஆகா! அப்படிப்பட்ட படகோட்டி யார்? அவன் பெயர் என்னவென்று தெரியுமா?" என்றார் இளவரசர்.

"ஆம்; தன் பெயர் முருகய்யன் என்று சொன்னான். கோடிக்கரைத் தியாக விடங்கர் மகன் என்று கூறினான்......"

"அவன் எனக்கு நன்கு தெரிந்தவன். என் விருப்பத்துக்கு விரோதமாக எதுவும் செய்ய மாட்டான். அவனை ஏன் என்னிடம் அழைத்து வரவில்லை......"

"அவன் பெண்டாட்டியினால் நமது இரகசியத்தைக் காப்பாற்ற முடியாது என்று எண்ணினோம். இப்போது அவனும் அவன் மனையாளும் மக்களின் கூட்டத்தில் இருக்கிறார்கள்......"

"பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று. படகோட்டி முருகய்யனை மெதுவாக இங்கே அழைத்து வந்து விடுங்கள். நான் இட்ட கோட்டை அவன் தாண்ட மாட்டான். இருட்டிய பிறகு திரும்பிவந்து அவனே என்னைப் படகில் ஏற்றி ஆனைமங்கலத்துச் சோழ மாளிகைக்கு அழைத்துப் போய் விடுவான்!" என்றார் இளவரசர்.

ஆச்சாரிய பிக்ஷு, "இளவரசே! இந்தக் காலத்தில் யாரையும் பூரணமாக நம்பி விடுவதற்கில்லை. இந்தப் படகோட்டியும் அவனது மனையாளுந்தான் இரண்டு நாளாக இந்தப் பட்டினத்தில் தங்களைப் பற்றிய வதந்தியைப் பரப்பியிருக்கவேண்டும் என்று கருதுகிறேன்."

"அப்படியேயிருந்தாலும் அதனால் பாதகமில்லை. எப்படியும் யாரேனும் ஒருவனை விஹாரத்துக்குள் அழைத்து வரவேண்டும் அல்லவா? அவன் கொஞ்சம் பெண்டாட்டி சொல்லுகிறபடி ஆடுகிறவன்தான். ஆனாலும் என் விருப்பத்துக்கு மாறாக மனையாள் சொல்வதைக்

கூடக் கேட்கமாட்டான். முடியுமானால், அவனையே அழைத்துக் கொண்டு வாருங்கள்!'' என்றார் இளவரசர்.

ஆச்சாரிய பிக்ஷுவின் சம்மதத்துடன் இளைய பிக்ஷு வெளியேறினார். அவர் சென்ற சிறிது நேரத்துக்கெல்லாம் பெரிய பிக்ஷு "இளவரசே! என் மனம் ஏனோ நிம்மதியாகவே இல்லை. நானும் வெளியிலே சென்று பார்த்துவருகிறேன். ஜனங்களுடைய மனோ நிலை எப்படி இருக்கிறது என்பதை நேரில் அறிந்து வருகிறேன். என்னுடைய பிசகினால் இந்தப் புராதனமான சூடாமணி விஹாரத்துக்கும் கேடு வரக்கூடாது. தங்களுக்கும் தீங்கு எதுவும் நேரக்கூடாது!'' என்று சொல்லி விட்டு வெளியே சென்றார்.

## மூன்றாம் அத்தியாயம்

# கடல் பொங்கியது!

விஹாரத்துக்கு வெளியே ஆச்சாரிய பிக்ஷு கண்ட காட்சி அவருக்குக் கதிகலக்கம் உண்டாக்குவதாயிருந்தது. ஆயிரக் கணக்கான மக்கள் திரண்டு வந்து நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களுடைய தோற்றமும் அவர்கள் போட்ட கூச்சலும் அவர்கள் ஆவேசங் கொண்டவர்கள் என்பதைக் காட்டின. அந்த ஆவேசத்தைக் குரோத வெறியாகச் செய்வது மிக எளிதான காரியம். பலர் கைகளில் வாள், வேல், தடி முதலிய ஆயுதங்களை வைத்திருந்தார்கள். இன்னும் சிலரின் கையில் கடப்பாரைகள் இருந்தன. பிக்ஷுக்கள் வழிக்கு வராவிட்டால், விஹாரத்தையே இடித்துத் தரை மட்டமாக்கிவிடுவது என்று அவர்கள் உத்தேசித்திருந்தனர் போலும்.

அதற்கு வேண்டிய காரணம் இல்லாமலும் போகவில்லை. பராந்தக சக்கரவர்த்தியின் காலம் முதல் அடிக்கடி சோழ நாட்டுக்கும் ஈழ நாட்டுக்கும் யுத்தம் நடந்து வந்தது. சோழ நாட்டு வீரர் பலர் இலங்கைப் போர்களில் மடிந்திருந்தார்கள். ஏதாவது ஒன்றைப் பிடிக்கவில்லையென்றால், அதைச் சேர்ந்த மற்றவையும் பிடிக்காமற் போவது மக்களின் இயல்பு அல்லவா? இலங்கைப் போர்கள் காரணமாகச் சோழ மக்களுக்கு ஏற்பட்டிருந்த ஆத்திரம் அத்தீவில் வியாபகமாயிருந்த பௌத்த மதத்தின் மேலும் ஓரளவு திரும்பியிருந்தது. ஏதாவது ஒரு சிறிய காரணம் ஏற்பட்டால் போதும்; — தமிழகத்தில் மிஞ்சியிருந்த பௌத்த விஹாரங்கள் மீதும் அவற்றில் வாழ்ந்த பிக்ஷுக்கள் மீதும் பழி தீர்த்துக் கொள்ளப் பாமர மக்கள் சித்தமாயிருந்தார்கள்.

அத்தகைய சந்தர்ப்பம் இப்போது ஏற்பட்டு விட்டதாக ஆச்சாரிய பிக்ஷு கருதினார். யாரோ தீய நோக்கம் கொண்டவர்கள் இவ்விதம் பாமர மக்களின் ஆத்திரத்தைத் தூண்டி விட்டிருக்கிறார்கள். புத்த பகவானுடைய கருணையினாலேதான் இந்தப் பேராபத்திலிருந்து மீள வேண்டும்!......

ஆச்சாரிய பிக்ஷுவைப் பார்த்ததும் அந்த ஜனக் கூட்டத்தின் ஆரவாரம் முன்னைவிட அதிகமாயிற்று.

"பொன்னியின் செல்வரைக் கொடுத்துவிடுங்கள்; இல்லாவிடில் விஹாரத்தை இடித்துத் தரை மட்டமாக்கி விடுவோம்'' என்பவை போன்ற மொழிகள் ஏக காலத்தில் ஆயிரக் கணக்கான குரோதம் நிறைந்த குரல்களிலிருந்து வெளியாகிச் சமுத்திர கோஷத்தைப் போல் கேட்டது. அதே சமயத்தில் கடலின் பேரோசையும் அதிகமாகிக் கொண்டிருப்பதை ஆச்சாரிய பிக்ஷு கவனித்துக் கொண்டார். இளம் பிக்ஷு கூறியது உண்மைதான். அளவிலாத வேகம் பொருந்திய கொடும் புயல், கடற்கரையை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. அதி சீக்கிரத்தில் புயல் கரையைத் தாக்கப் போகிறது. இந்த மக்களால் ஏற்படும் அபாயத்துக்குப் பிழைத்தாலும் புயலின் கொடுமையிலிருந்து விஹாரம் தப்பிப் பிழைக்க வேண்டுமே என்ற கவலை பிக்ஷுவுக்கு ஏற்பட்டது.

இதற்குள் வாலிப பிக்ஷு கையமர்த்திச் சமிக்ஞைசெய்து ஆத்திரம் கொண்ட மக்களின் கூட்டத்தில் சிறிது இரைச்சல் அடங்கும்படி செய்திருந்தார்.

"மகா ஜனங்களே! எங்கள் தலைவரை அழைத்து வந்திருக்கிறேன். சற்று நிம்மதியாயிருங்கள். நீங்கள் இத்தனை பேரும் இந்த விஹாரத்துக்குள் ஒரே சமயத்தில் புக முடியாது அல்லவா? உங்களில் யாராவது ஒருவரையோ, இரண்டு பேரையோ குறிப்பிடுங்கள். அவர்கள் விஹாரத்துக்குள் வந்து தேடிப் பார்க்கட்டும்! திரும்பி வந்து

அவர்கள் சொல்வதை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்! இது உங்களுக்குச் சம்மதந்தானே? உங்களில் யார் என்னுடன் விஹாரத்துக்குள் வருகிறீர்கள்?" என்று வினவினார்.

கூட்டத்தில் நூற்றுக் கணக்கானவர்கள் "நான் வருகிறேன்" "நான் வருகிறேன்" என்று கூச்சலிட்டார்கள்.

இளம் பிக்ஷு மறுபடியும் கையமர்த்தி "எல்லாரும் சேர்ந்து கூச்சலிடுவதினால் என்ன பயன்? யாராவது ஒருவரைத் தேர்ந்தெடுங்கள். நான் யோசனை சொல்லுகிறேன். சமீப காலத்தில், சென்ற ஒரு மாத காலத்துக்குள், பொன்னியின் செல்வரைப் பார்த்தவர் உங்களில் யாராவது இருந்தால் சொல்லுங்கள். அப்படிப் பட்டவரை நான் அழைத்துப் போகிறேன். இளவரசரை அடையாளம் கண்டு கொள்ளவும் சௌகரியமா யிருக்கும்!" என்றார்.

கூட்டத்தின் முன்னணியில் நின்று கொண்டு ஒவ்வொரு தடவையும் பெருங் கூச்சல் போட்டுக் கொண்டிருந்த ராக்கம்மாள், "இதோ நாங்கள் பார்த்திருக்கிறோம்" என்று கூவினாள்.

படகோட்டியைப் பார்த்து இளம் பிக்ஷு, "அப்பனே! இவள் கூறுவது சரியா?" என்று கேட்டார்.

முருகய்யன், "சுவாமி! இவள் கூறுவது முழுதும் சரியல்ல; இவள் இளவரசரைச் சமீபத்தில் பார்க்கவில்லை. நான் சென்ற ஒரு மாதத்துக்குள்ளே ஈழநாட்டில் பொன்னியின் செல்வரைப் பார்த்தது உண்மை. நான் அறியாமல் அவருக்குச் செய்த அபகாரத்துக்காகக் காலில் விழுந்து மன்னிப்பும் கேட்டுக் கொண்டேன். அச்சமயம் அவர் கருணையுடன் என்னைப் பார்த்துப் புன்னகை புரிந்தது நேற்று நடந்ததுபோல் என் மனத்தில் பதிந்திருக்கிறது. அவரை நான் சுலபமாக அடையாளங் கண்டு கொள்ள முடியும்" என்று சொன்னான்.

"அப்படியானால் நீதான் இந்த வேலைக்குத் தகுதியானவன். உன் மனையாள் சொன்னதிலும் அவ்வளவு தவறு இடையாது. நீ பார்த்தது இவள் பார்த்தது போலத்தான் என்று எண்ணிச் சொல்லியிருக்கிறாள். இப்போதும் நீ இந்த விஹாரத்துக்குள் தேடிப் பார்த்துவிட்டு வந்து சொன்னால் இவள் ஒப்புக் கொள்வாள். பிக்ஷுக்கள் தவம் செய்யும் புத்த விஹாரத்துக்குள் பெண் பிள்ளைகளை விடுகிறதில்லை யென்பது உன் மனையாளுக்குத் தெரிந்து தானிருக்கும். ஆகையால், நீ வா இங்கே!" என்று இளம் பிக்ஷு கூறினார். பிறகு விஹாரத்தின் முன் வாசற்படிகளில் இறங்கிச் சென்று முருகய்யனுடைய ஒரு கரத்தைப் பற்றி அழைத்துக் கொண்டு மறுபடியும் படிகளில் ஏறினார். மக்களைப் பார்த்து, "இதோ இந்தப் படகோட்டி முருகய்யன் சமீபத்தில் இளவரசரைப் பார்த்திருக்கிறானாம். இவனை உள்ளே அழைத்துப் போகிறேன். விஹாரம் முழுதும் தேடிப் பார்த்து விட்டுத் திரும்பி வந்து சொல்வான். உங்கள் எல்லாருக்கும் இது சம்மதந்தானே?" என்றார்.


மக்களின் கூட்டத்திலிருந்து சம்மதக் குரல் அவ்வளவு வேகத்துடன் வரவில்லை. சிலர் "சம்மதம்" என்று முணுமுணுத்தார்கள். மற்றவர்கள் ஒருவரோடொருவர் "இதில் ஏதாவது மோசம் இருக்குமோ?" என்று இரகசியமாகப் பேசிக் கொண்டார்கள். அவர்கள் இரகசியம் பேசிய குரல்கள் சேர்ந்து கடலின் இரைச்சலுடன் போட்டி யிட்டன.

இளம் பிக்ஷு அதைக் கவனித்து விட்டு, பெரிய குரலில், "மகா ஜனங்களே! இதோ எங்கள் ஆச்சாரியரும் வந்திருக்கிறார். உங்களுக்கு ஏதேனும் கேட்க வேண்டியது இருந்தால் அவரைக் கேட்டுக் கொள்ளுங்கள். அதற்குள் இந்த மனிதனை நான் அழைத்துப் போய் விஹாரத்தைச் சுற்றிக் காண்பித்து விட்டு வருகிறேன்" என்று சொல்லிப் படகோட்டி முருகய்யனை அழைத்துக் கொண்டு சென்றார்.

கம்பீரமான தோற்றத்துடனும் சாந்தம் குடிகொண்ட முகத்துடனும் பொலிந்த ஆச்சாரிய பிக்ஷுவைப் பார்த்ததும் மக்களின் மனத்தில் சிறிது பயபக்தி உண்டாயிற்று. அவரிடம் அதிகப் பிரசங்கமான கேள்வி எதுவும் கேட்பதற்கு யாரும் துணிவு கொள்ளவில்லை.

ஆச்சாரிய பிக்ஷு சற்று நேரம் அந்த ஜனக் கூட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். பின்னர், அவர்களுக்குப் பின்னால் சற்றுத் தூரத்தில் தெரிந்த கடலையும் நோக்கினார்.

"மகா ஜனங்களே! நீங்கள் எல்லாரும் இங்கே வந்து கூடியிருப்பதின் நோக்கத்தை அறிந்து கொண்டேன். சக்கரவர்த்தியின் திருக் குமாரரும் பொன்னியின் செல்வருமான இளவரசர் அருள்மொழி வர்மரிடம் உங்களுக்கெல்லாம் எவ்வளவு அன்பு உண்டு என்பது இன்றைக்கு எனக்கு நன்றாய்த் தெரிந்தது.



உங்களைப் போலவே அடியேனும் பொன்னியின் செல்வரிடம் அன்புடையவன்தான். அருள்மொழி வர்மர் கடலில் மூழ்கி விட்டார் என்ற செய்தி வந்த அன்று காலையில் நான் இதே இடத்தில் நின்று கண்ணீர் அருவி பெருக்கினேன். புத்த தர்மத்தில் பற்றுக் கொண்டவர் எவரும் அருள்மொழி வர்மரிடம் அன்பு கொள்ளாமல் இருக்க முடியாது. புத்த தர்மத்துக்கும் புத்த பிக்ஷுக்களுக்கும் அவர் அத்தகைய மகத்தான உபகாரங்களைச் செய்திருக்கிறார். புத்தர்களின் புண்ணிய க்ஷேத்திரமாகிய அநுராதபுரத்தில் புத்த மன்னர்களின் காலத்தில் இடிந்து தகர்ந்து பாழான விஹாரங்களையும் ஸ்தூபங்களையும் திருப்பணி செய்து செப்பனிடுவதற்கு ஏற்பாடு செய்தவர். அப்படிப்பட்ட உத்தமரான இளவரசருக்கு எந்த வகையிலும் தீங்கு நேர நாங்கள் உடந்தையாக இருக்க முடியுமா? இளவரசருக்கு ஒன்றும் நேராமல் இருக்க வேண்டும், அவரைக் கடல் கொண்ட செய்தி பொய்யாயிருக்க வேண்டும் என்று நாங்கள் பிரார்த்தனை செய்த வண்ணம் இருந்தோம். உங்களையெல்லாம் விடப் பொன்னியின் செல்வரிடம் நாங்கள் அன்புடையவர்களாயிருப்பதற்குக் காரணங்கள் உண்டு......"

இச் சமயத்தில் கூட்டத்தில் ஒருவன் குறுக்கிட்டு, "அதனாலேதான் எங்களுக்கு அச்சமாயிருக்கிறது. உங்களுடைய அன்பு அபரிமிதமாகப் போய் எங்கள் இளவரசரின் தலையை மொட்டையடித்துக் காவித் துணி கொடுத்துப் பிக்ஷுவாக்கி விடுவீர்களோ என்று பயப்படுகிறோம்!" என்றான்.

அவனைச் சுற்றி நின்றவர்கள் பலர் இதைக் கேட்டதும் கலீர் என்று கேலிச் சிரிப்புச் சிரித்தார்கள்.

ஆச்சாரிய பிக்ஷுவுக்கு எப்படியோ அச் சமயம் ஒருவித ஆவேசம் ஏற்பட்டு விட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் மக்களின் சந்தேகத்தைத் தீர்த்து வைப்பதற்கு ஒரே ஒரு நிச்சயமான வழி மட்டும் உண்டு என்பதை அவர்

உள்ளம் உணர்த்திற்று. உடனே முன் பின் யோசியாமல் தம் உள்ளத்தில் தோன்றியதைப் பின்வரும் மொழிகளில் சபதமாக வெளியிட்டார்:—

"சக்கரவர்த்தியின் திருக்குமாரரும் பொன்னியின் செல்வருமான இளவரசர் அருள்மொழிவர்மரைப் புத்தசமயத்தை மேற்கொள்ளும்படி நான் கோர மாட்டேன். அவரே முன் வந்தாலும் ஏற்றுக் கொள்ள மாட்டேன். உலகை ஆளப் பிறந்தவரும் உங்கள் அன்பைக் கவர்ந்தவருமான கோமகனைத் தலையை மொட்டை யடித்துக் காவித் துணி அளிக்கும் கைங்கரியத்தை நான் ஒரு நாளும் செய்ய மாட்டேன். அதற்கு உடந்தையாகவும் இருக்க மாட்டேன். இவ்வாறு புத்த பகவானுடைய பத்ம சரணங்களின்மீது ஆணையாகச் சபதம் செய்கிறேன்! புத்தம் கச்சாமி! தர்மம் கச்சாமி! சங்கம் கச்சாமி!"

இடி முழக்கம்போன்ற கம்பீரத்துடன் உணர்ச்சி ததும்பக் கூறிய இந்த மொழிகளைக் கேட்டதும் அங்கே கூடியிருந்த அத்தனை மக்களின் உள்ளங்களும் ஒரு பெரிய மாறுதலை அடைந்தன. பலர் கண்களில்கண்ணீர் ததும்பியது. சிறிது நேரம் நிசப்தம் நிலவியது.

ஆச்சாரிய பிக்ஷு தொடர்ந்து கூறினார்:—



"சோழ நாட்டு மக்களின் கண்ணுக்குக் கண்ணான இளவரசரைக் குறித்து நீங்கள் எல்லாரும் இவ்வளவு சிரத்தை கொண்டிருப்பது இயல்புதான். பொன்னியின் செல்வரைக் குறித்த கவலை இப்போது உங்களுக்குத் தீர்ந்து போயிருக்கலாம். இனிமேல் உங்கள் குடும்பம், வீடு, வாசலைப் பற்றிச் சிறிது கவலை கொள்ளுங்கள். மகாஜனங்களே! இது வரையில் நாம் இந்தப் பக்கத்திலேயே கண்டும் கேட்டுமிராத கொடும் புயல் நம்மை நெருங்கிக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. அதோ, உங்கள் பின் பக்கமாகத் திரும்பிப் பாருங்கள்!"

ஜனங்கள் திரும்பிப் பார்த்தார்கள். பிக்ஷு கூறியபடியே அவர்களுடைய வாழ்க்கையில் என்றுமே காணாத அதிசயமான காட்சியைக் கண்டார்கள்: அதிசயமான காட்சி மட்டுமன்று; பயங்கரமான காட்சியுந்தான்.

கடலானது பொங்கி மேலுயர்ந்து வானத்தில் மேலே மேலே வந்து கொண்டிருந்த கரிய கொண்டல்களைத் தொட்டுக் கொண்டிருந்தது. அந்தக் கரிய நிறத் தண்ணீர் மலையானது நின்ற இடத்தில் நிற்கவில்லை. மேலே மேலே நகர்ந்து வந்து கொண்டிருந்தது. ஜனங்கள் நின்ற இடத்திலிருந்து பார்க்கும்போது அந்த மலையானது அவர்கள் இருக்குமிடம் வரையில் வந்தால் அவர்கள் மட்டுமல்ல, சூடாமணி விஹாரமே மூழ்கிப் போவது திண்ணம் என்று தோன்றியது.

இந்தக் காட்சியைப் பார்த்து மக்கள் பிரமித்து நின்றபோது, ஆச்சாரிய பிக்ஷு மறுபடியும் "அதோ, நீங்கள் எல்லாரும் வசிக்கும் நாகைப் பட்டினத்தைப் பாருங்கள்!" என்று சொன்னார்.

நாகைப்பட்டினம் நகரம் சூடாமணி விஹாரத்துக்குச் சிறிது வட திசையில் அமைந்திருந்தது. வெகு தூரத்துக்கு வெகு தூரம் பரவியிருந்தது. கடற்கரையை யடுத்துப் பண்டகசாலைகள், சுங்கம் வாங்கும் கட்டிடங்கள் முதலியவை இருந்தன. அவற்றுக்கு அப்பால் ஜனங்கள் வசிக்கும் வீடுகள் ஆரம்பமாகிக் கிழக்கு மேற்கிலும் தெற்கு வடக்கிலும் சுமார் அரைக் காத தூரத்துக்குமேல் பரவி யிருந்தன.

கடல் பொங்கிப் பண்டக சாலைகளும், சுங்கச் சாவடிகளும் இருந்த இடத்தையெல்லாம் தாண்டிக் கொண்டு வந்து பட்டினத்தின் தெருக்களிலும் புகுவதற்கு அச்சமயம் ஆரம்பித்திருந்தது.

கடலில் இருந்த படகுகளும் நாவாய்களும் எங்கேயோ ஆகாசத்தில் அந்தரமாகத் தொங்குவதுபோல் தண்ணீர் மலைகளின் உச்சியில் காட்சி அளித்து அப்படியும் இப்படியும் ஆடிக் கொண்டிருந்தன. படகுகளின் பாய் மரங்கள் பேயாட்டம் ஆடிச் சுக்கு நூறாகப் போய்க் கொண்டிருந்தன.

"மகா ஜனங்களே! ஒரு காலத்தில் காவேரிப் பட்டினத்தைக் கடல் கொண்டது என்று கேள்விப் பட்டிருக்கிறோம். அம்மாதிரியான விபத்து நமது நாகைப் பட்டினத்துக்கு நேராமல் புத்த பகவான் காப்பாற்றுவாராக! ஆனாலும் நீங்கள் உடனே திரும்பிச் சென்று உங்கள் குழந்தை குட்டிகளையும் உடைமைகளையும் கூடுமானவரை காப்பாற்றிக் கொள்ள முயலுங்கள்!" என்று ஆச்சாரிய பிக்ஷு தழதழுத்த குரலில் கூவினார்.

இதைக் கேட்டதும் அந்த ஜனக் கூட்டமானது கடல் அலைபோலவே விரைந்து நகரத்தை நோக்கி நகரலாயிற்று. முன்னணியில் நின்றவர்கள் ஓடத் தொடங்கினார்கள். பின்னால் நின்றவர்கள் அவர்களைத் தொடர்ந்து ஓடினார்கள். முதலில் கூட்டமாக நகர்ந்தார்கள்; பிறகு நாலாபுறமும் சிதறி ஓடினார்கள். சில நிமிட நேரத்திற்குள், சற்று முன்னால் பெரும் ஜனத்திரள் நின்று கொண்டிருந்த இடம் வெறுமையாகக் காட்சி அளித்தது.

படகோட்டி முருகய்யனின் மனையாள் ராக்கம்மாள் மட்டும் நின்ற இடத்திலேயே நின்று "என் புருஷன்! என் புருஷன்!" என்று கத்தினாள்.

"தாயே! உன் புருஷனுக்கு ஒன்றும் ஆபத்து நேராது. பத்திரமாகத் திரும்பி வந்து சேருவான். நீ உன்னைக் காப்பாற்றிக் கொள்!" என்றார் பிக்ஷு.

"இல்லை, இல்லை! என் புருஷனை விட்டு விட்டு நான் எப்படிப் போவேன்? நானும் கோவிலுக்குள் வருகிறேன்" என்றாள் ராக்கம்மாள்.

"கூடாது, அம்மா, கூடாது! புத்த சந்யாசிகள் வசிக்கும் விஹாரத்துக்குள் பெண்பிள்ளைகள் வரக் கூடாது! உனக்குத் தெரியாதா?" என்றார் பிக்ஷு.

இச் சமயத்தில் அந்த மாபெரும் ஜனக் கூட்டத்திலே ஓடாமல் பின் தங்கி நின்று கொண்டிருந்த மனிதன் ஒருவன் ராக்கம்மாளை அணுகிவந்தான். அவள் காதோடு ஏதோ சொன்னான். அவளுடைய கரத்தைப் பிடித்துக் கரகரவென்று இழுத்

தான். அவள் அவனுடன் வேண்டா வெறுப்புடன் போகத் தொடங்கினாள்.

"ஆகா! இந்த மனிதன் யார்? இவனுக்கும் இந்தப் பெண்ணுக்கும் என்ன உறவு?" என்று எண்ணிய வண்ணம் ஆச்சாரிய பிக்ஷு விஹாரத்துக்குள் சென்றார். பொன்னியின் செல்வர் இருந்த இடத்தை அணுகினார். முருகய்யன் இதற்குள் அதிசயமெல்லாம் நீங்கப் பெற்றவனாய் இளவரசர் கூறுவதைப் பக்தியுடன் கேட்டுக் கொண்டிருந்தான்.

"முருகா! இன்றிரவு நீ திரும்பி வந்து என்னைப் படகில் ஏற்றி ஆனைமங்கலத்துக்கு அழைத்துப் போக வேண்டும்" என்று இளவரசர் கூறினார்.

ஆச்சாரிய பிக்ஷு, "இளவரசே! இரவு வரையில் காத்திருக்க வேண்டியதில்லை. ஜனக்கூட்டம் கலைந்துவிட்டது. தாங்கள் இப்போதே புறப்பட்டுப் போகலாம்" என்று சொன்னார்.

பின்னர், வெளியில் நடந்தவற்றைச் சில வார்த்தைகளில் கூறினார்.

"சுவாமி! ஜனங்கள்தான் கலைந்து போய் விட்டார்களே? நான் எதற்காகப் போக வேண்டும்?" என்றார் இளவரசர்.

"அவர்கள் திரும்பி வரமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? மேலும், பிக்ஷுக்களாகிய எங்கள் வாக்கை மெய்யாக்குவதாகச் சற்று முன் சொன்னீர்கள் அல்லவா? அதை நிறைவேற்றி அருள வேண்டும்!" என்றார் பிக்ஷு.

**உ**ண்மை என்னவென்றால், பொங்கி வரும் கடல் அந்தச் சூடாமணி விஹாரத்தைச் சிறிது நேரத்துக் கெல்லாம் முழுக அடித்துவிடும் என்று பிக்ஷுவின் உள்ளத்தில் ஒரு பீதி உண்டாகியிருந்தது. ஆகையால் இளவரசரை அவசரமாக வெளியேற்ற விரும்பினார். ஆனைமங்கலம் கடற்கரையிலிருந்து கிழக்கே சற்றுத் தூரத்தில் இருந்தது. ஆகையினால் பொங்கி வரும் கடல் அவ்வளவு தூரம் போய் எட்ட முடியாது. எட்டினாலும் அங்குள்ள மிகப் பெரிய சோழ மாளிகை மூழ்கி விடாது.

இளவரசர் பிக்ஷுவின் கருத்தை ஏற்றுக் கொண்டார். உடனே படகு கொண்டு வருமாறு கட்டளை பிறந்தது.

இதற்கிடையில் அங்கே கூடியிருந்த புத்த பிக்ஷுக்களைப் பார்த்து ஆச்சாரிய பிக்ஷு "நாம் கருணையே வடிவமான புத்த பகவானைச் சேர்ந்தவர்கள். இப்போது நாகைப்பட்டினத்து மக்களுக்குப் பெரும் சோதனை நேரிட்டிருக்கிறது. கடல் பொங்கி நகரத்துக்குள் வேகமாகப் புகுவதைக் கண்டேன். புயலின் வேகத்தினால் வீடுகளின் கூரைகள் சிதறிப் பறக்கின்றன. மரங்கள் தட தட வென்று முறிந்து விழுகின்றன. நாகைப் பட்டினத்திலும் அக்கம் பக்கத்திலும் வசிக்கும் மக்களில் வயோதிகர்களும் குழந்தைகளும் எத்தனையோ பேர் தப்பிக்கும் வகை அறியாது தவித்துக்கொண்டிருப்பார்கள். நீங்கள் அனைவரும் நாலாபுறமும் சென்று உங்கள் கண் முன்னால் கஷ்டப்படுகிறவர்களுக்கு உங்களால் இயன்ற உதவிகளைச் செய்யுங்கள். குழந்தைகளையும் வயோதிகர்களையும் முதலில் கவனியுங்கள். சமுத்திர ராஜனின் கோபத்திலிருந்து எத்தனை பேரைக் காப்பாற்றலாமோ, காப்பாற்றுங்கள்! நான் வயதானவன். இங்கேயே இருந்து மாலை நேரத்துப் பூஜையைக் கவனித்துக்கொள்கிறேன்" என்றார்.

இதைக் கேட்டதும் பிக்ஷுக்கள் அங்கிருந்து அகன்று சென்றார்கள்.

கால்வாயில் படகு வந்து சேர்ந்தது. இளவரசர் ஆச்சாரிய பிக்ஷுவுக்கு வணக்கம் செலுத்தி விடைபெற்று அதில் ஏறிக் கொண்டார். முருகய்யனும் ஏறிப் படகு தள்ளத் தொடங்கினான்.

படகு கண்ணுக்கு மறையும் வரையில் பிக்ஷு அதையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தார். அவருடைய முகத்தைச் சுற்றி அபூர்வமான ஜோதி ஒன்று பிரகாசப் படுத்திக் கொண்டிருந்தது.

## நாலாம் அத்தியாயம்

# நந்தி முழுகியது

**ப**டகு கால்வாயில் போய்க் கொண்டிருந்தபோது இளவரசர் நிமிஷத்துக்கு நிமிஷம் கால்வாயின் நீர்மட்டம் அதிகமாகிக் கொண்டிருப்பதைக் கவனித்தார்.

படகு தத்தளித்துக் கொண்டிருந்தது. முருகய்யன் அதைச் செலுத்துவதற்கு வெகு பாடுபட்டுக் கொண்டிருந்தான்.

புயலின் வேகமும் வினாடிக்கு வினாடி அதிகமாகிக் கொண்டிருந்தது. இரு புறமும் மரங்கள் சட சடவென்று முறிந்து விழுந்து கொண்டிருந்தன.

நந்தி மண்டபத்தை நெருங்கிப் படகு வந்தது. இளவரசர் அந்த மண்டபத்தைப் பார்த்தார். நந்தியின் தலைக்கு

மேலே தண்ணீர் வந்திருந்தது. இதிலிருந்து நீர் மட்டம் எவ்வளவு உயர்ந்திருந்தது என்று நன்கு தெரிய வந்தது.

"முருகய்யா! படகைச் சிறிது நிறுத்து" என்று இளவரசர் கூறினார். முருகய்யன் படகை நிறுத்தினான். ஆனால் அதன் ஆட்டத்தை நிறுத்த முடியவில்லை.

இளவரசர் படகிலிருந்து தாவிக் குதித்து நந்தி மண்டபத்தில் இறங்கினார். பின்னர் அதன் அருகில் விழுந்திருந்த ஒரு மரத்தைப் பிடித்துக் கொண்டு மண்டபத்தின் மேல் சிகரத்தின் மீது ஏறினார். அங்கேயிருந்து சுற்று முற்றும் பார்த்தார். கால்வாய்க்குக் கீழ்ப்புறம் முழுதும் ஒரே ஜலப் பிரளயமாக இருந்தது. தென்னந் தோப்பில் பாதி மரங்களுக்கு மேல் அதற்குள் விழுந்துவிட்டிருந்தன. இடை வெளி வழியாகப் பார்த்தபோது கடல் பொங்கி அந்தத் தென்னந் தோப்பின் முனை வரையில் வந்து விட்டதாகத் தெரிந்தது.

வடக்கே, சூடாமணி விஹாரம் இருந்த திசையை அருள்மொழி வர்மர் நோக்கினார். விஹாரத்தின் வெளிப் படிக்கட்டுகள் வரையில் கடல் பொங்கிப் பரவியிருந்தது தெரிந்தது.

பொன்னியின் செல்வருடைய மனத்தில் அப்போது ஓர் எண்ணம் உதயமாயிற்று. அது அவருடைய உடல் முழுதும் சிலிர்க்கும்படி செய்தது.

"முருகய்யா! படகைத் திருப்பிக் கொண்டு போ! விஹாரத்தை நோக்கி விடு!" என்றார் இளவரசர்.

அதிகமாகப் பேசிப் பழக்கமில்லாதவனும் இளவரசரிடம் அளவிறந்த பக்தி கொண்டவனுமான தியாகவிடங்கரின் மகன், ஏன் என்று கூடக் கேளாமல் படகைத் திருப்பிச் சூடாமணி விஹாரத்தை நோக்கிச் செலுத்தினான்.

வரும்போது ஆனநேரத்தைக் காட்டிலும் போகும்போது சிறிது குறைவாகவே நேரமாயிற்று. ஆனால் இளவரசருக்கோ ஒவ்வொரு விநாடியும் ஒரு யுகமாக இருந்து கொண்டிருந்தது.

படகு விஹாரத்தை அடைந்தபோது பொங்கி வந்த கடல் ஏறக்குறைய விஹாரம் முழுவதையும் சூழ்ந்து கொண்டிருந்தது. நீர் மட்டம் மேலே மேலே ஏறிக் கொண்டு மிருந்தது.

ஈழ நாட்டிலுள்ள விஹாரங்களைப் போல் நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரம் அக் காலத்தில் அவ்வளவு கம்பீரமாகவோ உயரமாகவோ அமைந்திருக்கவில்லை. இன்னும் கொஞ்சம் தண்ணீர் மேலே ஏறினால் விஹாரத்தின் மண்டப சிகரம்கூட முழுகிவிடும் என்ற நிலைமை ஏற்பட்டிருந்தது.

இளவரசர் படகிலிருந்து தாவித் தண்ணீரில் முழுகாமலிருந்த ஒரு மண்டபத்தின் மேல் தளத்தில் குதித்தார். அங்குமிங்கும் பரபரப்புடன் ஓடினார். விஹாரத்தின் அடித்தளத்துக்கு அவர் போகாமல் மேல் மாடங்களில் ஒவ்வொரு பகுதியாகத் தேடிக் கொண்டு வந்தார். மேல் மாடங்களிலேயே சில இடங்களில் மார்பு அளவு தண்ணீரில் அவர் புகுந்து செல்ல வேண்டியதாயிருந்தது. மேலும் மேலும் ஏமாற்றம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. கடைசியில், கௌதம புத்தரின் கம்பீரமான உருவச் சிலை அமைந்திருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தார். அந்தச் சிலையின் மார்பு அளவுக்குத் தண்ணீர் ஏறியிருந்தது. அங்கே இளவரசர் நின்று நன்றாகச் சுற்று முற்றும் பார்த்தார். தண்ணீரில் குனிந்தும் பார்த்தார். அவருடைய வாயிலிருந்து எழுந்த மகிழ்ச்சியும் வியப்பும் கலந்த 'ஆஹா!' ஒலி அவர் தேடி வந்ததை அடைந்து விட்டார் என்பதற்கு அறிகுறியாக இருந்தது.

ஆம்; புத்தர் சிலையின் அடியில் தண்ணீருக்குள்ளே பகவானுடைய பத்ம சரணங்கள் இரண்டையும் இறுக்கிக் கட்டிக் கொண்டு ஆச்சாரிய பிக்ஷு உட்கார்ந்து கொண்டிருந்தார்.

பொன்னியின் செல்வர் தண்ணீரில் முழுகிப் பிக்ஷுவின் கரங்கள் இரண்டையும் சிலையிலிருந்து பலவந்தமாக விடுவித்து விட்டு அவரைத் தூக்கி எடுத்தார். தண்ணீருக்குள்ளே பிக்ஷுவைத் தூக்குவது இலேசாக இருந்தது. தண்ணீருக்கு வெளியே வந்த பிறகு அவ்வளவு இலேசாக இல்லை. ஆஜானுபாகுவும் நல்ல பலிஷ்டருமான அந்த பிக்ஷுவின் உடல் கனம் இளவரசரைத் திணறச் செய்தது.

"முருகய்யா! முருகய்யா!" என்று குரல் கொடுத்தார்.

"இதோ வந்தேன்!" என்று சொல்லிக் கொண்டே முருகய்யன் படகைக் கொண்டு வந்தான்.

பொன்னியின் செல்வர் ஆச்சார்ய பிக்ஷுவைத் தூக்கிக் கொண்டு படகை நோக்கி விரைந்து சென்றார். அவருடைய கால்கள் தடுமாறின. (தொடரும்)

பஸ் கம்பெனித் தலைவர் கூறுகிறார் :-

முச்செயல்-திறனுள்ள

# மோபிலாயில்

## உபயோகிப்பதனால் "என்ஜினின் காரியத் திறன் எவ்வளவோ அதிகரிக்கிறதென்று எமது 16 வருட அனுபவம் நிரூபிக்கிறது"

16 வருடங்களில் எமது கம்பெனி 2 பஸ்களிலிருந்து 29 பஸ்கள் வைத்து நடத்தும் அளவிற்கு வளர்ந்திருக்கிறது. மோபிலாயிலின் உதவியே இவ்வளர்ச்சிக்குக் காரணம்-மோட்டாரின் செலவினங்களை அது எவ்வளவோ மட்டுப்படுத்தி வந்துள்ளது. நாங்களும் எத்தனையோ வகை மோட்டார் ஆயில்களை உபயோகித்துப் பார்த்துவிட்டோம்-ஆனால் மோபிலாயில் உண்மையில் செலவைக் குறைக்கிறதென்பதை அறிகிறோம். இப்பொழுது நாங்கள் அதைத்தான் உபயோகித்து வருகிறோம்.



மானேஜிங் டைரக்டர்
ராமன் & ராமன் லிட்., கும்பகோணம்




ஸ்ரீ. பி. என். நாராயணன் ஓட்டச் சேவைகளைப்பற்றி உண்மையில் நன்கறிந்தவர். அவரது யோசனையை பின்பற்றுங்கள். முச்செயல் திறனுள்ள மோபிலாயிலையே வற்புறுத்திக் கேட்டு வாங்குங்கள். பழகும் சேர்வுநிலையின் மொபில்போயிட் உள்ள இடங்களில் மட்டுமே இந்த எண்ணெய் விற்கப்படுகிறது. மோபிலாயில் ஒரு ஹெவி டியூடி எண்ணெய்; ரேகுலர் அல்லது பிரிமியம் மோட்டார் எண்ணெய்களைவிட அதிகரித்த பாதுகாப்பு தருகிறது.

இன்றே இந்த எண்ணெயை நிரப்புங்கள்—வழித்தேவைக்காக ஒரு அதிகப்படி டின்னும் வாங்கி வைத்துக்கொள்ளுங்கள். மோபிலாயிலின் சிறந்த குணங்கள் உங்களுக்குத்தெரியவரும்:

தேய்மானத்தைக் குறைக்கிறது—ஏனெனில் அது என்ஜினில் ஹானிகரமான கரித்தூள் படிய விடுவதில்லை.

ரிப்பேர்ச் செலவுகளை குறைக்கிறது—ஏனெனில் அது எல்லா உஷ்ண நிலைமைகளிலும் ஒழுங்காக ஸ்டார்ட் செய்கிறது.

பெட்ரோல் செலவை குறைக்கிறது—ஏனெனில் அது உலோக பாகங்களை ஆஸிட்டுகள் அரித்து விடாமல் பாதுகாக்கிறது.

முச்செயல்-திறனுள்ள

## மோபிலாயில்

அதிகமான மோட்டாரக்காரர்கள் உலகில் வேறெந்த மோட்டார் ஆயிலையும்விட இதையே விசேஷமாக உபயோகித்து வருகின்றனர்

ஸ்டாண்டர்ட்-வாக்குவம் ஆயில் கம்பெனி (கம்பெனி அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)


# தி பாவுஸேரி பெனிபிட் சிட் பண்டு லிட்.

(இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டது)

3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி

தபால் பெட்டி நெ. 414 · மதராஸ்-5

தந்தி 'EVERMENS'.... போன்: 85834



| வகுப்பு | மாதச்சந்தா | சீட்டின் மதிப்பு |
|---|---|---|
| B | ரூ. 100/- | ரூ. 2500/- |
| C | ரூ. 50/- | ரூ. 1250/- |
| D | ரூ. 25/- | ரூ. 625/- |
| E | ரூ. 20/- | ரூ. 500/- |
| F | ரூ. 15/- | ரூ. 375/- |
| G | ரூ. 10/- | ரூ. 250/- |

25 மாதங்கள்—25 மெம்பர்கள்

வாழ்க்கையில் வதைக்கும் முட்டுகளைக் களைந்தெறிய நம் முன்னோர்கள் நமக்கு காட்டிச் சென்ற வழி — சீட்டு முறையே.

இருண்ட எதிர்கால சூழ்நிலை எதிர்த்து நிற்கையில் எண்ணிறந்த மக்களுக்கு உவகையூட்டி இன்பம் தந்து வரும்

## எங்கள் மாதாந்திர சீட்டு வகைகள்

எழில்மிகும் ஏப்ரல் மாத சீட்டு வரிசை

| சேரக் கடைசி தேதி | 3-வது வெள்ளி | முதல் ஏலத் தேதி |
|---|---|---|
| 15—4—53 | ஏலங்கள் | 17—4—53 |


ரூ. 25க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் இந்தியாவிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட பாங்குகளின் செக் பெற்றுக்கொள்ளப்படும். அதற்குக் குறைந்த தொகைகளை மணியார்டர் அல்லது இந்தியன் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பலாம். வேண்டுவோருக்கு இலவசமாக நிபந்தனைகளும் விண்ணப்ப பாரங்களும் அனுப்பப்படும். ஏஜண்டுகளாக சேர்ப்பதற்கு உங்களுக்குப் பயிற்சி அளிக்கிறோம்.

ஆபீஸ் நேரம்: காலை: 9-12 மணி. மாலை: 2-5 மணி.

(போர்டார் உத்திரவுப்படி) எம். வி. சுப்ரமணியம், மானேஜிங் டைரக்டர்



# B. I. S. N. கம்பெனி லிமிடெட்



# S. S. "ரஜுலா"

சென்னை - நாகப்பட்டினம் - பினாங்கு - சிங்கப்பூர்

சென்னையிலிருந்து 12 ஏப்ரல் 1953, 7 மே 1953 — நாகப்பட்டினத்திலிருந்து 13 ஏப்ரல் 1953, 8 மே 1953

தேதிகளில் மேற்கண்ட கப்பல் புறப்படலாமென எதிர்பார்க்கப் படுகிறது

மேற்கண்ட பிரயாணத்திற்கு ஸலூன் மற்றும் பர்த் வசதியற்ற டிக்கெட்டுகள் கம்பெனியாரால் வழங்கப்படும்.

பினாங்கு, போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூருக்கு கார்கோ சாமான்களை நேரடியாக ஏற்றிச் செல்லவும், பாங்காக், ஹாங்காங், ஜப்பான் மற்றும் தூரக் கிழக்கு திசையிலுள்ள இதர ஊர்களுக்குச் சிங்கப்பூரில் கப்பல் மாற்றி அனுப்பும்படியும் ஏற்றுக்கொள்ளப்படும்.

இதர விவரங்களுக்குத் தயவு செய்து விண்ணப்பிக்கவும்:

பின்னி & கோ. (மதராஸ்) லிமிடெட்
7, அரமனைக்காரத் தெரு, மதராஸ்

மதுரா கம்பெனி லிமிடெட்
முதல் லைன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

# கல்யாணக் கடிதம்

### எஸ். வைத்தியநாதன்

அம்மா கூடத்தில் உட்கார்ந்து அரிசியிலிருந்து கல் பொறுக்கிக் கொண்டிருந்தாள். நான் தாழ்வாரத்தில் பத்திரிகையொன்றைப் புரட்டிய வண்ணம் நாற்காலியில் அமர்ந்திருந்தேன். அப்பா எங்கோ வெளியில் போய் வந்தவர், வெகு வேகமாக அங்கு வந்தார். "ஏய்!" என்று கடுமையான குரலில் அழைத்தார். அப்பா அம்மாவை அழைக்கும் சொல் அது. நானும் அம்மாவும் ஏக காலத்தில் தலை நிமிர்ந்து அப்பாவை நோக்கினோம். அவர் முகத்தில் கோபக் கனல் பறந்தது.

"அந்தப் பயல் என்ன பண்ணியிருக்கிறான் தெரியுமா, உனக்கு?" என்றார் அப்பா இன்னும் உச்ச ஸ்தாயியில்.

"எவன், என்ன பண்ணிவிட்டான்?"

"அந்த நடேசன்தான்! நம்ப வஸுமதியின் தலையில் கல்லைப் போடத் துணிந்து விட்டான். அன்று வஸுமதியைப் பார்த்து விட்டுப் போனார்களே அவர்களுக்கு அதிகப் பணம் தருவதாக ஆசை காட்டி அந்தப் பட்டணத்து வரனைத் தன் பெண்ணுக்கு நிச்சயம் பண்ணி விட்டானாம்" என்றார்.

அதைக் கேட்டதும் என்னுடைய மண வாழ்க்கையைப் பற்றி நான் கட்டியிருந்த இன்பக் கோட்டைகள் அனைத்தும் 'பொல பொல'வென்று இடிந்து விழுந்து விட்டதான உணர்ச்சி ஏற்பட்டது. நெஞ்சைப் பிளக்கும் துயரத்துடன் அவ்விடமிருந்து எழுந்து வேகமாக அறைக்குப் போய்க் கட்டிலில் சாய்ந்தேன்.

* * *

அந்தப் பட்டணத்து வரனும், அவர் பெற்றோர்களும் பதினைந்து நாட்களுக்கு முன் என்னைப் பார்ப்பதற்கு வந்திருந்தார்கள். அந்தப் பிள்ளை சட்டக் கலாசாலையில் படித்துக் கொண்டிருந்தார்.

என்னை அவர்களுக்குப் பிடித்து விட்டது. என் தகப்பனார் செய்யத் தயாராயிருந்த லௌகிக விஷயங்களும் அவர்களுக்குத் திருப்தியாகப் பட்டது. இரண்டாயிர ரூபாய் ரொக்கமும், மூவாயிரத்துக்குச் சீர் வகைகளும் ஆக ஐயாயிரம் ரூபாய்க்குச் செய்வதாக ஏற்பாடு. ஆயினும் உடனே முகூர்த்தம் வைத்துக் கொள்ள அவர்களுக்கு ஒரு தடையிருந்தது. அவர்களது மூத்த மாட்டுப் பெண் கர்ப்பமாயிருந்தாளாம். அவளுக்குப் பிரஸவ மாதமாம் அது. ஆகவே இரண்டு மாதங்கள் கழித்து முகூர்த்தம் வைத்துக் கொண்டால்தான் தங்களுக்குச் சௌகரியம் என்று கூறினார்கள். ஒரு மாதம் கழித்துத் தாங்கள் கடிதம் போடுவதாகவும், அதன் பின்னர் தாம்பூலம் மாற்றிக் கொள்ளலாம் என்றும் முகூர்த்தத் தேதியையும் அப்போது நிச்சயப்படுத்திக் கொள்ளலாம் என்றும் கூறி விட்டுப் போனார்கள்.

நான் ஆனந்தத்தால் ஒரு சுற்றுப் பருத்தேன். இன்னதென்று விவரிக்க இயலாத ஒரு இன்ப உணர்ச்சி என் உடல் முழுதும் பரவியது. எப்போது அவர்களிடமிருந்து கடிதம் வரும் என்று ஆவலுடன் நாட்களை எண்ணிக் கொண்டிருந்தேன். இத்தகைய பேரிடி விழப் போகிறது என் தலையில் என்று கண்டேனா நான்?

அந்த நடேசன் என்பவர் என் தந்தையின் ஒன்றுவிட்ட அம்மாஞ்சி. அவர்களுக்கும் எங்களுக்கும் பல வருஷங்களாக ஏதோ குடும்ப மனஸ்தாபம் காரணமாகப் பேச்சு வார்த்தை கிடையாது; போக்குவரத்தும் கிடையாது. அவர் வீடு எங்கள் ஊரின் இன்னொரு கோடியிலிருந்தது.

அவருடைய பெண் நீலா என் வயதினள். என்னைப் போலவே நல்ல அழகி. என்னோடு முதல் வகுப்பிலிருந்து ஒன்றாகப் படித்தவள். என் ஆருயிர்த் தோழி! எங்கள் குடும்ப மனஸ்தாபம் எங்கள் இருவருடைய நட்பைச் சற்றும் பாதிக்கவில்லை.

நாங்கள் அன்யோன்னியமாகப் பழகி வந்தோம். எங்கள் பெற்றோர்களுக்குத் தெரியாமல் பள்ளிக்கூடத்திலும், தோழிகளின் வீடுகளிலும், கடற்கரையிலும் சந்தித்து அடிக்கடி அளவளாவுவோம்.

ஏழெட்டு மாதங்களுக்கு முன்னால்தான் எங்கள் படிப்பு முற்றுப் பெற்றது. பள்ளிக்கூடம் இல்லாததால் முன்போல் தினமும் எங்களால் சந்திக்க முடியவில்லை. ஆயினும் மாதம் இரண்டொரு தடவையாவது நாங்கள் முன்னேற்பாடு செய்து கொண்டு எங்காவது சந்தித்து அளவளாவிக் கொண்டுதானிருந்தோம். கடைசியாக நான் நீலாவைச் சந்தித்தது என்னை அப் பட்டணத்துக்காரர்கள் பார்க்க வந்ததற்கு ஒரு வாரத்துக்கு முன்னால், கடற்கரையில்.

இப்பேர்ப்பட்ட என் ஆருயிர்த் தோழி நீலாதான் எனக்குப் போட்டியாகக் கிளம்பி, எனக்கு நிச்சயிக்கப்பட்டிருந்தவரைத் தட்டிக் கொண்டு போகப் போகிறாள் என்னும் செய்தி எனக்கு எத்தகைய வேதனையைக் கொடுத்திருக்கும்? நீலாவா இப்படிப் பண்ணினாள்? என்னோடு அவ்வளவு தோழமை பாராட்டியதெல்லாம் வெறும் வேஷமா? அவளுடைய பெற்றோர்கள் தான் இக்காரியத்தைச்செய்ய முனைந்திருக்கிறார்கள். ஆனால் நீலாவும் இதற்கு எப்படி உடன்பட்டாள்? ஒரு வேளை இந்த வரன் என்னை வந்து பார்த்தது, சம்மதம் தெரிவித்தது முதலிய விஷயங்களெல்லாம் அவளுக்குத் தெரியாதோ? எப்படித் தெரியாமலிருக்கும்? ஊர்

முழுதும் தெரிந்த விஷயமாயிற்றே! அவன் காதுக்கு மட்டும் எட்டாமலிருக்குமா? தெரிந்துதான் செய்திருப்பான். சுயநலம் குறுக்கிடும் போது சிநேகம் மறக்காமல் என்ன செய்யும்? அவனுடைய பெற்றோர்களின் துர்க்குணம் அவனை மட்டும் விட்டுவிடுமா, என்ன?

அன்றிலிருந்து வெளியில் எங்கும் கிளம்பவே எனக்குப் பிடிக்கவில்லை. வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடந்தேன். எவ்வளவோ சமாதானப் படுத்திக் கொண்டாலும் நீலாவின் மேல் கடுந் துவேஷம் என்னுள்ளத்தில் வளர்ந்து கொண்டுதான் வந்தது.



பட்டணத்துக் காரர்களிடமிருந்து எங்களுக்கு யாதொரு கடிதமும் வரவில்லை.

நீலாவின் கல்யாணத்துக்கு முகூர்த்தத் தேதி குறித்தாய் விட்டது என்ற செய்தியை ஒரு நாள் என் தகப்பனார் கொண்டு வந்தார். ஒரே குதியாய்க் குதித்தார்:— "நடேசன் கல்யாணம் செய்து விடுவதைப் பார்த்து விடுகிறேன். அந்தப் பட்டணத்தானைச் சந்தி சிரிக்க வைத்து விடுகிறேன். என்னை யார் என்று எண்ணினான்?" என்று மனம் ஆறாமல் கூச்சல் போட்டார்.

"கலாட்டா வெல்லாம் வேண்டாம், விட்டு விடுங்கள். என்னவோ நம்ப வஸுமதிக்கு அந்த இடம் பிராப்தமில்லை. நீங்கள் கலாட்டா பண்ணுவதினால் கல்யாணம் நின்று விடுமா? கலாட்டா பண்ணினால் உங்கள் பேர்தான் கெடும். பெண் பிடிக்கவில்லை என்று சொல்லி அவர்கள் ஒரேயடியாய் அடித்துத் தப்பித்துக் கொண்டு விடுவார்கள். அப்புறம் நாம் சண்டைக்காரர்கள் என்ற அபவாதம் கிளம்பி, நம் பெண்ணுக்குக் கல்யாணம் ஆவதே கஷ்டமாய்ப் போய் விடும். வேண்டாம், விடுங்கள்" என்று அம்மா அவரைச் சமாதானப்படுத்தினாள்.

"ஆமாம், அப்பா! அம்மா சொல்வது வாஸ்தவம். அதுவுந் தவிர நீங்கள் அப்படிக் கலாட்டா பண்ணி, அவர்கள் என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சம்மதித்து விட்டால் அந்தக் கல்யாணத்தினால் என் மணவாழ்க்கை மகிழ்ச்சிகரமாய் இருக்குமா? அவர்கள் என்னைக் கொடுமைப்படுத்தி வஞ்சம் தீர்த்துக் கொள்ளத்தான் முயலுவார்கள். நீங்கள் பேசாமலிருங்கள். நடப்பது நடக்கட்டும்" என்றேன் நான்.

எங்களிருவருடைய பேச்சிலிருந்த நியாயத்தை அப்பா உணர்ந்ததாகத் தோன்றியது. "சரி, நீங்கள் சொல்வதும் வாஸ்தவம், கடவுள் இருக்கிறார். இந்த அக்கிரமத்துக்குச் சரியான கூலி கொடுப்பார்" என்று கூறிவிட்டு அவ் விஷயத்தை அத்துடன் விட்டு விட்டார். வேறு இடங்களில் எனக்காக வரன் பார்க்கத் தீவிரமாக முனைந்தார்.

பத்து நாள் கழித்து, நீலா எனக்குக் கல்யாணப் பத்திரிகை அனுப்பியிருந்தாள்! அதுவுந் தவிர என் பெற்றோர்கள் தடை செய்தாலும் எப்படியாவது தன் கல்யாணத்துக்கு நான் வந்துதான் ஆகவேண்டும் என்று வற்புறுத்திக் கடிதமொன்றும் எழுதியிருந்

தான்! எப்படியிருக்கும் எனக்கு? சொல்லிக் கொள்ள முடியாத அவமானத்தினாலும் ஆற்றாமையினாலும் மனம் குமுறினேன்.

• • •

மறு நாள் பொழுது விடிந்தால் நீலாவுக்குக் கல்யாணம். அன்று மத்தியானம் பன்னிரண்டு மணி இருக்கும். நான் தாழ்வாரத்தில் அமர்ந்து 'எம்பிராய்டரி' வேலை செய்து கொண்டிருந்தேன். சற்றுத் தூரத்தில் அப்பா சாய்வு நாற்காலியில் படுத்துக் கொண்டு புஸ்தகம் படித்துக் கொண்டிருந்தார். வாசலில் வண்டி வந்து நின்ற சத்தம் கேட்டது. அப்பாவின் காதிலும் அது விழுந்திருக்க வேண்டும். சாய்வு நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு, இரேழி வாசற்படியை நோக்கினார். நானும் கண்களை அந்தப் பக்கம் செலுத்தினேன்.




முதலில் நீலாவின் அப்பா நடேசனும், அவருக்குப் பின்னால் அன்று என்னை வந்து பார்த்த பட்டணத்து வரனும்—இப்பொழுது நீலாவை மணக்கப் போகிறவர்—இரேழி வாசற்படியைத் தாண்டி உள்ளே நுழைந்து தயக்கத்துடன் அங்கேயே நின்றார்கள். அப்பாவும் நானும் வியந்து அவர்களையே ஒரு கணம் வெறித்துப் பார்த்தோம். அடுத்த கணம் நான் எதிரேயிருந்த தாழ்வாரத்து அறையில் புகுந்து கொண்டேன்.

அப்பா திகைப்பை உதறி விட்டு "வா நடேசா! வாங்கோ, ஸார்!" என்று அவ்விருவரையும் வரவேற்று நாற்காலிகளில் அமரும்படி சொன்னார். அப்பா சிறந்த பண்பாடு உடையவராதலால் தன் விட்டு வாசற்படி ஏறி வந்துவிட்ட கொடிய எதிரியையும் 'வா' என்று வரவேற்காமலிருக்க மாட்டார்.

ஒரு நிமிஷம் அங்கே மௌனம் நிலவியது. அப்பாதான் மௌனத்தைக் கலைத்தார்: "உனக்கு ஏகப்பட்ட வேலையிருக்குமே, நடேசா? முகூர்த்தம் நாளைக்குத் தானே? எங்கே வந்தாய் இப்படி?"

"அத்தான்! நான் உங்களுக்குப் பெரிய துரோகம் இழைத்து விட்டேன்! உங்களுக்குப் போட்டியாக இந்தப் பிள்ளையாண்டானை நிச்சயம் செய்தேன் நீலாவுக்கு. ஓசத்தியான



"ராமு தன் பணக்கார மாமாவினிடம் எவ்வளவு பிரியமா யிருந்தான்! அவர் வளர்த்து வந்த நாய்களிடம் கூட அளவு கடந்த அன்பு காட்டினானே! மாமா அவனுக்குத் தம் சொத்தில் என்ன கொடுத்தார்?"

"ஏன்? அந்த நாய்களை அவனுக்குக் கொடுத்து விட்டார்!"

வரன் என்று இதை விடக் கூடாதென்று முட்டாள்தனமாக இந்தக் காரியத்தில் ஈடு பட்டேன். என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும்" என்று நடேசன் கூறினார்.

"பரவாயில்லை! என்னமோ என் பெண்ணுக்கு இந்த இடம் பிராப்தமில்லை, அவ்வளவுதான். அதற்காக உன்மீது எனக்கு என்னளவும் வருத்தம் கிடையாது" என்று என் தந்தை கூறியது எனக்கு வியப்பை யளித்தது! 'விட்டேனா பார்!' என்று ஒரேயடியாய்க் குதித்தவர்தானா இன்று இப்படி அமைதியாகப் பேசினார்!

"அத்தான், நீங்கள் தருமபுத்திரர்! வேறு யாராலும் இப்படிப் பேச முடியாது! நான் வந்த காரியத்தைச் சொல்லுகிறேன், கேளுங்கள்! நீலாவுக்கு இந்த வரன் வஸுமதிக்கு நிச்சயிக்கப்பட்டிருப்பவர் என்று தெரியாது. ரொம்ப சாமர்த்தியமாக நானும் என் அகமுடையாளும் அவளிடமிருந்து அதை மறைத்து விட்டோம்.

"ஆயினும் நேற்று ராத்திரி யாரோ ஸ்திரீகள் பேசிக் கொண்டிருந்தார்களாம். இதைப் பற்றி நீலாவின் காதில் அது விழுந்து விட்டது. இன்னும் இரண்டு பெண்மணிகளைக் கேட்டு அது வாஸ்தவந்தான் என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டு, என்னிடமும் அவள் தாயாரிடமும் ரௌத்ராகாரமாகச் சண்டை யிட்டாள். தான் இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதிக்க முடியாது என்றும் கல்யாணத்தை நிறுத்தி விடும்படியும் கூறினாள். நாங்கள் முதலில் அச் செய்தியே தவறு என்று சாதித்தோம். உண்மை என்று அவள் ருசுவுடன் நிரூபித்து விடுவாள் போலிருந்தது. உண்மையை ஒப்புக் கொண்டு அவளுடைய நன்மைக்காகத்தான் இதைச் செய்தோமென்றும், வஸுமதிக்கு இந்தப் பிள்ளை பிராப்தமில்லாததால் இப்படி நேர்ந்திருக்கிறதென்றும், இல்லாவிட்டால் இப்படி நேர்ந்திராது என்றும், நாளை மறுநாள் கல்யாணம் என்று எல்லா முஸ்தீபுகளும் செய்து விட்ட பிறகு அவள் கல்யாணத்தை நிறுத்தி விடும்படி அடம் பண்ணுவது சரியில்லை யென்றும் எவ்வளவோ சமாதானங்கள் கூறி அவளைச் சாந்தப்படுத்த முயன்றோம். அவள் சாந்தமடைய வில்லை......" என்று கூறிக் கொண்டே வந்தார். இந்த இடத்தில் வந்ததும் அவர் தொண்டை அடைத்தது.

எனக்கு மயிர்க்கூச்செறிந்தது. 'நீலா! உன்னைப் பற்றி எவ்வளவு தவறாக எண்ணி விட்டேன்? நீலாவின் நேர்மையைச் சந்தேகித்தோமே' என்று பச்சாத்தாபத்தால் நான் துடித்தேன்.

"மீதிக் கதையை நான் சொல்கிறேன்" என்று ஆரம்பித்தார் அந்தப் பட்டணத்துப் பிள்ளையாண்டான்: "எனக்கு உங்களுக்குக் கொடுத்த வாக்கை மீறுவதில் இஷ்டமில்லை. ஆயிரம் ரூபாய் கூட வருவதற்காக ஆசைப் பட்டுக் கொண்டு நேர்மை தவறுவதில் கொஞ்சமும் சம்மதமில்லை. நீலாவைப் போய்ப் பார்க்கவே நான் மறுத்தேன். ஆனால் என் பெற்றோர்கள் கோபங்கொண்டு கத்தினார்கள். அப்பா சன்னியாசியாகி விடுவதாக மிரட்டினார். அம்மா காசிக்குக் கிளம்பி விடுவதாகப் புலம்பினாள். நான் குழந்தை முதலே அப்பா அம்மாவுக்கு அடங்கின பிள்ளை. அவர்கள் பேச்சை மீறி யறியாதவன். எந்த விஷயத்திலும் என் பெற்றோர்களுக்கு ஆயாசத்தைக் கொடுக்க விரும்பாதவன். எனவே அவர்கள் கட்சிதான் வெற்றி பெற்றது. என் இஷ்டத்துக்கு விரோதமாகவே எல்லாவற்றுக்கும் உடன் பட்டேன். என்றாலும் என் மனச் சாட்சி குத்திக்கொண்டேதா னிருந்தது.

"இன்று காலை நாங்கள் பிள்ளை வீட்டுக் காரர்களெல்லாரும் வந்து இறங்கினோம். சற்று நேரங் கழித்து ஒரு சிறு பையன் எங்கள் ஜாகைக்கு வந்து 'நீங்கள்தானே மாப்பிள்ளை' என்றான். 'ஆம்' என்றேன். என்னைத் தனியாக அழைத்துக் கொண்டு போய், நீலா கொடுக்கச் சொன்னதாக ஓர் கடிதத்தைக் கொடுத்து விட்டுப் போய் விட்டான். அந்தக் கடிதத்தை இதோ படிக்கிறேன், கேளுங்கள்: 'நீங்கள் மெத்தப் படித்த மேதை யல்லவா? ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளுவதாக வாக்களித்து விட்டு மேலும் ஆயிரம் ரூபாய் வருகிறதென்று இப்படிக் கேவலமாய் நடந்து கொள்ளலாமா? வேண்டாம் இந்தக் கேவலம்! உங்களை மணக்க எனக்குக் கொஞ்சங்கூட இஷ்ட மில்லை. முதலில் நீங்கள் பார்த்த வஸுமதியையே கல்யாணம் செய்து

கொள்ளுங்கள். அவள் என் உயிர்த்தோழி. அவளுக்குத் துரோகம் செய்ய மாட்டேன் நான். இந்தக் கல்யாணத்தை நிறுத்துவது உங்கள் கையில் தானிருக்கிறது.

இப்படிக்கு, நீலா.''

எனக்கு மூர்ச்சை போட்டு விழுந்து விடுவேன் போலிருந்தது, உத்தமி நீலாவின் உள்ளத்தை யறிந்த போது. அவர் மேலும் சொன்னார்: ''இக் கடிதத்தைப் பார்த்ததும் என் கண் திறந்தது. அறியாமை விலகியது. நேரே என் தாய்தந்தையரிடம் போய் விஷயத்தைக் கூறி இவ் விவாகத்தை நிறுத்தி விடும்படி சொல்லி விட்டேன்.''

இப்போது நடேசன் பேசினார்: ''விஷயம் என் கையை மீறிப் போய் விட்டது. இனிமேல் நான் தயாராயிருந்தால்கூடப் பிள்ளை வீட்டார் இந்த விவாகத்துக்கு இணங்க மாட்டார்கள். உங்களுக்குப் போட்டியாக முட்டாள்தனமாய் நடந்து கொண்டதற்கு நல்ல தண்டனை அனுபவித்து விட்டேன். இப்பொழுது அவ்வளவு கல்யாண ஏற்பாடுகளும் வீணாய்ப் போய் கஷ்டமும், அவமானமும் ஏற்பட்டு விடுமே என்றுதான் வருந்துகிறேன். ஆகவே, நானும் சம்பந்தி வீட்டார்களும் கலந்து யோசனை செய்து ஓர் ஏற்பாடு செய்தோம். அதன் பிரகாரந்தான் இங்கு வந்தோம். உங்களால்தான் என்னைக் காப்பாற்ற முடியும் இப்போது. எல்லாவற்றையும் மறந்து, பழைய விரோதத்தையும் மனத்தில் கொள்ளாமல். நீங்கள் என்னை இந்த அவமானத்திலிருந்து மீட்கவேண்டும்.''

''நான் என்ன செய்ய முடியும்? நீலாவிடம் வேணுமானால் வந்து இவ்வரனையே அவள் கல்யாணம் செய்து கொள்வதில் எனக்கு வருத்தமில்லை யென்று சொல்லட்டுமா?'' என்றார் அப்பா.

''இனி நீலாவை மாற்றக் கடவுளாலும் முடியாது. நாங்கள் வேறு ஏற்பாடு ஒன்று செய்திருக்கிறோம். அதாவது இந்தப் பிள்ளையாண்டானின் அத்தை பிள்ளை ஒருவன் கல்யாணத்துக்கு வந்திருக்கிறான் இவர்களோடு. அவன் இன்ஜினீயரிங் காலேஜில் கடைசி வருஷம் படிக்கிறான். தாய் தகப்பனார் இல்லாதவன். அவனுடைய மாமா (இந்தப் பிள்ளையின் அப்பா) தான் அவனுக்குப் பெரியவர் என்றுசொல்வதற்கு இருக்கிறார். அந்தப் பையனுக்கு நீலாவை நாளை முகூர்த்தத்தில் கல்யாணம் செய்து கொடுப்பதாய் முடிவு செய்து விட்டோம். பெண்ணும் பிள்ளையும் ஒருவரை யொருவர் பார்த்துச் சம்மதித்தாய் விட்டது. ஆனால் இக் கல்யாணத்துக்கு நீலா ஒரு நிபந்தனை போடுகிறாள். நான் உங்களிடம் வந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டு 'இந்தப் பிள்ளையாண்டானுக்குவஸந்தியைக் கொடுக்கிறேன்' என்று நீங்கள் ஒப்புக் கொள்ள என்னைக் கேட்டுக் கொள்ள வேணும் என்று கூறி விட்டாள். நீங்கள் அதற்குச் சம்மதித்தால்தான் நீலா கல்யாணம் பண்ணிக் கொள்வாளாம்'' என்று கூறினார் நடேசன்.



பணக்காரர் (தம் மகனைப் பார்த்து):—நீ எப்போதும் ஏழைகளிடம் அன்பாயிருக்க வேண்டும்.

மகன்:—ஏன் அப்பா?

பணக்காரர்:—யார் கண்டது? அவர்களும் ஒரு நாளைக்குப் பணக்காரர்களாகலா மல்லவா?

''நானும் நடந்துபோன முட்டாள்தனமான காரியத்துக்கு வருத்தம் தெரிவித்துக் கொள்ளவே வந்தேன். நீலாவின் கல்யாணம் நாளை நடப்பது உங்கள் கையிலிருக்கிறது. நாங்கள் நம்பத் தகாத மனிதர்களாயிற்றே என்று கொஞ்சமும் யோசனை செய்யாதீர்கள். ஒருதரம் பட்டு விட்டோம். புத்தி வந்து விட்டது. அப்பா அம்மாவின் சம்மதத்துடன் அவர்கள் சார்பிலேயே நான் இங்கு வந்திருக்கிறேன்'' என்றார் பட்டணத்து வரன்.

அப்பா எழுந்து சமையலறைக் கதவின் பின்னால் மறைந்து எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த அம்மாவிடம் சென்று ஏதோ 'குசுகுசு' வென்று பேசினார். பிறகு என் பொருட்டு வீராங்கனையாக மாறிப் போரிட்ட நீலாவின் உன்னத இருதயத்தை எண்ணி ஆனந்த பாஷ்பம் சொரிந்துகொண்டிருந்த என்னிடம் வந்து ''வஸந்தி! எல்லாவற்றையும் கேட்டாயல்லவா? உன் அபிப்பிராயம் என்ன?'' என்றார்.

''வேறொன்றுக்காகவும் இல்லாவிட்டாலும் நாளைக்கு நீலாவின் கல்யாணம் நடக்கணுமே! அதற்காகவாவது நாம் சம்மதித்துத்தான் ஆக வேண்டும்'' என்றேன் நான்.

நடேசன் வேண்டுகோளுக்கிணங்கி, பழைய மனஸ்தாபங்களை மறந்து எல்லோரும் நீலாவின் கல்யாணத்துக்குக் கிளம்பினோம்.

அடுத்த பதினைந்தாம் தேதி எனக்கும் அப் பட்டணத்து வரனுக்கும் வெகு விமரிசையாகக் கல்யாணம் நடந்தது!

# அகில உலகச் சிறுகதைப் போட்டி

- ஏற்கெனவே முதல் தடவையாக அகில உலகச் சிறுகதைப் போட்டி நடந்தது அல்லவா! அதில் இந்தியா உள்பட உலகத்தில் உள்ள இருபத்து மூன்று நாடுகள் கலந்து கொண்டன.
- அந்தப் போட்டியில் உலகத்திலேயே முதல், இரண்டாவது பரிசு பெற்ற கதைகள் "கல்கி"யில் தொடர்ச்சியாக வெளியாகி வந்தது வாசக நேயர்கள் அறிந்த விஷயம். அவற்றைத் தவிர அந்தந்த நாடுகளில், அந்தந்த பாஷைகளில் பரிசு பெற்ற சுமார் நூறு சிறந்த கதைகளும் மொழிபெயர்க்கப்பட்டு, "கல்கி"யில் பிரசுரமாயின.
- மேற்படி போட்டி மிகவும் வெற்றிகரமாக நடந்ததால், இப்போது இரண்டாவது தடவை யாக, அகில உலகச் சிறுகதைப் போட்டி நடத்த உத்தேசித்திருக்கிறார்கள்.
- இம்முறையும் அமெரிக்காவில் உள்ள பிரபல நியூ யார்க் ஹெரால்டு டிரிப்யூன் பத்திரிகையின் மேற் பார்வையிலேயே அந்தப் போட்டி நடைபெறுகிறது.
- இந்தியா தேசத்தில் மேற்படி சிறுகதைப் போட்டியை நடத்தும் பொறுப்பைப் புது டில்லி "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" பத்திரிகை ஏற்றுக் கொண்டிருக்கிறது.
- இந்தியாவில் உள்ள முக்கியமான பன்னிரண்டு பாஷைகளிலாவது, ஆங்கிலத்திலாவது மேற்படி போட்டிக்குச் சிறுகதை எழுதலாம்.
- இந்தியாவின் முக்கிய பாஷைகளில் தமிழ் மொழி ஒன்று என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. எனவே, தமிழ் எழுத்தாளர்கள் அகில உலகச் சிறுகதைப் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- இந்தியாவில் எழுதப்படும் சிறந்த எட்டுக் கதைகளுக்கு "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" பத்திரிகை மொத்தம் ரூ. 5,250 பரிசு அளிக்கும். அதில் முதல் பரிசு ரூ. 1500.
- அந்த எட்டுக் கதைகளிலிருந்து அகில உலகப் போட்டிக்கு முதல் நாலு கதைகள் அனுப்பப்படும்.
- இதில் கலந்து கொள்ளும் பத்திரிகைகள் தங்கள் தங்கள் பாஷைக் கதைகளுக்குப் பரிசு அளிக்கும். பரிசு பெறும் சகல கதைகளும் போட்டியை நடத்தும் பத்திரிகைகளில் வெளிவரும்.
- கதைகள் பிரசுரமாகி முடிந்த பின், அந்தக் கதைகளில் எது சிறந்தது என்பதை, போட்டியை நடத்தும் பத்திரிகைகளிடையே வோட்டு எடுத்து முடிவு செய்வார்கள்.
- அந்தக் கதைக்கே அகில உலகப் போட்டியின் முதல் பரிசான ஐயாயிரம் டாலர் (ரூ. 23,750) கொடுக்கப்படும்.
- பஞ்சாயத்தார்களிடம் சமர்ப்பிக்கும் கதைகளுக்கு இலக்கங்களே கொடுக்கப்படுமாதலால், எழுத் தாளர்கள் தங்கள் பெயரையோ, விலாசத்தையோ அதில் குறிப்பிடக் கூடாது.
- எனவே ஒவ்வொருவரும் தாங்கள் எழுதும் கதையில் இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டும். அவற்றில் பெயரோ, விலாசமோ குறிப்பிடாமல் ஒரு பிரதி இருக்க வேண்டும்.
- அடுத்த ஜூன் மாதம் முப்பதாம் தேதிக்குள் கதைகள் அனுப்பப்பட வேண்டும்.
- பரிசு பெறாத, பிரசுரிக்கப்படாத கதைகளைத் திரும்பிப் பெற விரும்புவோர் கையெழுத்துப் பிரதி யுடன் போதிய தபால் தலைகள் அனுப்ப வேண்டும். திருப்பி அனுப்புவதாக உத்தரவாதம் செய்ய முடியாது.
- தமிழ்க் கதைகளை ஆசிரியர், "கல்கி", கீழ்ப்பாக்கம், சென்னை என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.
- அனுப்பப்படும் சிறுகதைகள் அதிகபட்சம் நாலாயிரம் வார்த்தைகளுக்குமேல் இருக்கக் கூடாது. குறைந்தபட்சம் ஆயிரத்து இருநூற்றைம்பது வார்த்தைகள் உள்ளதாக இருக்க வேண்டும்.
- சிறுகதை அனுப்புவோர் தங்களுடைய சொந்தக் கற்பனையைக் கொண்டு எழுதப்பட்டது என்று உறுதி கூறவேண்டும். ஏற்கெனவே எந்த இடத்திலும் பிரசுரிக்கப்பட்டதல்ல என்று உத்தரவாதம் அளிக்க வேண்டும்.
- கதைகள் எவ்விஷயத்தை வேண்டுமாயினும் அடிப்படையாகக் கொண்டிருக்கலாம். காதல், குரோதம், நன்றி, வாஞ்சை, தேசபக்தி, தியாகம், லோபம், யுத்தம், துணிகரச் செய்கை, சிறப் போர், துரோகம், கலியாணம், மரணம் ஆகிய எந்த விஷயமாயினும் சரி; உணர்ச்சிப் பெருக்கு, அமைப்புத் திறன், வாழ்க்கைப் பண்பு, நடையின் சிறப்பு, கதையின் ஓட்டம்—ஆகிய சிறு கதை யின் அம்சங்களே முக்கியமாகக் கருதப்படும்.
- அகில உலகச் சிறுகதைப் போட்டிக்குப் பொறுக்கி எடுக்கப்படும் நாலு தமிழ்க் கதைகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 125 வீதம் சன்மானம் அளிக்கப்படும்.
- முதலாவது அகில உலகச் சிறு கதைப் போட்டியில் இரண்டாவது பரிசு பெற்றவர் இந்தியர்தான்.
- இம்முறை மற்ற நாட்டினரைப்போல் இந்தியரும் முதற் பரிசு பெறுவதற்குச் சந்தர்ப்பம் இருக் கிறது. அவ்விதம் பரிசு பெற்று, உலகப் புகழை அடைவது இந்திய எழுத்தாளர்களின் பெரு முயற்சியையே பொறுத்திருக்கிறது.
- தயவு செய்து உறையின்மேல் "அகில உலகச் சிறுகதைப் போட்டி" என்று குறிப்பிட வேண்டுகிறோம்.
- அகில இந்தியப் போட்டிக்காகப் பஞ்சாயத்தார் தேர்ந்தெடுக்கும் நாலு கதைகளையும் அவற்றின் ஆசிரியர்கள் தாங்களாகவோ, பிறரைக் கொண்டோ ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தர வேண்டும்.
- பரிசுக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் கதைகளைத் தவிர மற்றக் கதைகளில் பிரசுரிப்பதற்குத் தகுதியானவை "கல்கி" யில் பிரசுரிக்கப்படும். அவற்றிற்குரிய சன்மானமும் அளிக்கப்படும்.
- இந்தப் போட்டி சம்பந்தமாக ஏற்படும் சந்தேகங்களில் "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" நிர்வாக ஆசிரியர் ஸ்ரீ தேவதாஸ் காந்தி கூறும் தீர்ப்பே முடிவானது.


எப்ரல் 3உ முதல்
குப்பி கர்ணாடகா புரொடக்ஷன்ஸ்
சத்தியசோதனை
(தமிழ்)
பாலையா, ஹொன்னப்ப பாகவதர்,
பண்டரிபாய், ஜெயம்மா,
கிருஷ்ணகுமாரி, குமாரி கமலா நடித்தது
ஸ்டுடியோ: ஏவிஎம்

இந்த மார்ச்சு மாதம் நாலாம் தேதி, ஜைன மதத்தைச் சேர்ந்த என் தோழி அவளுடைய குடும்பத்துடன் சிரவண பெளகுளாவுக்குப் போவதாகவும், என்னையும் தன்னுடன் வரும்படியும் அழைத்தாள். பதினேந்து வருஷங்களுக்கு ஒரு தடவை அங்கே நடைபெறும் அற்புதமான உற்சவத்தைக் கண்டு களிப்பதற்காக நான் அவளுடன் புறப்பட்டுச் சென்றேன்.

சிரவண பெளகுளா என்ற கிராமம் பெங்களூரிலிருந்து சுமார் 95 மைல் தூரத்தில் இருக்கிறது. கிறிஸ்து சகாப்தத்திற்குச் சுமார் மூன்னூறு வருடங்களுக்கு முன், அதாவது சந்திரகுப்த மௌரியன் வட இந்தியாவை ஆண்டு கொண்டிருந்த காலத்தில், வடநாட்டிலே கொடிய பஞ்சம் ஏற்பட்டது. அப்போது பாத்ர பரு என்னும் ஜைன குரு, பன்னிரண்டாயிரம் சிஷ்யர்கள் குழாம் சூழ, தெற்கே பிரயாணம் செய்து சிரவண பெளகுளாவிற்கு வந்தார். அவ்வமயம் சந்திரகுப்த மௌரியனும் மேற்படி ஜைன குருவின் பிரதான சிஷ்யரானார்.

பாத்ர பரு முக்தியடைந்தபின், சந்திரகுப்த முனி ஜைன மதத்தைப் பிரசாரம் செய்ய முற்பட்டார். இவை யெல்லாம், அங்கே சம்ஸ்கிருதம், மராத்தி, கன்னடம், தமிழ் முதலிய பாஷைகளில் சிலா சாஸனம் செய்யப்பட்டிருக்கின்றன.

அந்தச் சிறிய ஊரில் சுமார் முப்பத்து மூன்று கோயில்கள் இருக்கின்றன. சந்திரகுப்தன் ஞாபகார்த்தமாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் கோவிலில் அவருடைய வாழ்க்கை வரலாறும், பாத்ரபருவின் வாழ்க்கை வரலாறும் செதுக்கப் பட்டிருக்கின்றன.

கோமடேசுவரன் அல்லது பாகுபலி என்பவர் பூர்வாசிரமத்தில் புருதேவர் என்னும் அரசரின் இரண்டாவது புத்திரராக இருந்தார். புருதேவர், மூத்த மகன் பரதனிடம் அயோத்தியையும், பாகுபலியிடம் பௌதான புரத்தையும் ஒப்புவித்து விட்டு, தவம் செய்யச் சென்றார். அவர் சென்ற பின், மேற்படி சகோதரர்களிடையே ராஜ்யத்திற்காகச் சண்டை மூண்டது. பரதன் பேராசை கொண்டு பௌதான புரத்தின் மீது படையெடுத்து வந்தான்.

உக்கிரமான யுத்தத்தின் இறுதியில், அஸ்திர வித்தையில் தேர்ந்த பரத சக்கரவர்த்தி சக்கராயுதத்தைப் பாகுபலியின் மீது பிரயோகித்தபோது, அந்த ஆயுதம் அவரைத் தாக்காமல் பக்கத்தில் வணங்கி நின்றது. இதைக் கண்டதும் பரதன் தன் தோல்வியை ஒப்புக் கொண்டான்.

வெற்றி யடைந்த பாகுபலிக்கு ராஜ்யத்தில் மனம் செல்லவில்லை. சகோதரனை பரதனுக்கே ராஜ்யத்தைக் கொடுத்து விட்டு, விந்தியகிரி என்னும் மலைமீதுள்ள சிரவண பெளகுளாவில் கடுமையான தவம் செய்து அங்கேயே முக்தி அடைந்தார்.

பரத சக்கரவர்த்தி சகோதரனுடைய ஒப்புயர்வற்ற பக்தியின் பெருமையை நிலை நாட்ட, ஒரு பிரும்மாண்டமான தங்கச் சிலையை நிர்மாணித்தார். நாளடைவில் அந்தச் சிலையைச் சுற்றி ஒரு அடர்ந்த காடு மண்டி, குக்குட ஸர்ப்பம் என்ற ஒருவிதமான பாம்புகள் சூழ்ந்து கொண்டதால் சிலை மறைந்து விட்டது.

கி. பி. 974–984 வருடங்களில் மைசூரை ஆண்டு வந்த கங்க வம்சத்தைச் சேர்ந்த அரசரான ராசமல்லனின் பிரதம அமைச்சர் சாமுண்டராயர் என்பவரின் விடா முயற்சியும் பக்தியும் காரணமாக நமக்கு இன்று பல யுகங்களாக மறைந்து கிடந்த கோமடேசுவரரைத் தரிசிக்கும் அரிய பாக்கியம் கிடைத்திருக்கின்றது.

கோமடேசுவரர், சுமார் 500 அடி உயரமுள்ள விந்திய கிரி மலையின் உச்சியில் வடக்குத் திக்கை நோக்கிக் கம்பீர புருஷராக நிற்கிறார். முழங்கால்களுக்கு மேல் எவ்வித ஆதாரமுமில்லாமல் அறுபது அடி உயரத்



திற்கு சிற்றும் இந்த அற்புதமான சிற்ப ஜாலத்தைக் கண்டு வியக்காதவர் இல்லை.

மலர்ந்த தாமரை புஷ்பத்தின் மேல் நிற்கிறார் பகவான். அவர் மெய்மறந்து தவத்தில் இருக்கும் நிலையைக் காண்பிக்கும் பொருட்டு, காலடிகளில் பாம்புப் புற்றுகளும், கை, கால்களின் மீது செடி கொடிகளும் செதுக்கப்பட்டிருக்கின்றன. அவை இப்போதுதான் செதுக்கப்பட்டனவோ என்று நினைக்கும்படியாகப் பளபள வென்றிருக்கின்றன. முக மண்டலத்தில் பிரபுவின் மௌனப் பாவமும், கம்பீர பாவமும் நம்மைப் பக்தி பரவசத்தில் ஆழ்த்துகின்றன. உலகத்தைத் துறந்த மகானின் முகத்தில் பிரகாசிக்கும் ஒளி, பார்ப்பவர்களின் உள்ளத்தை உருக்குகின்றது.

இவர் பதினேந்து ஆண்டு தவம் புரிந்து முக்தியடைந்ததால், பதினேந்து வருடங்களுக்கு ஒரு முறை அபிஷேகம் செய்யப்படுவதாக ஐதீகம். ஆனால் தினந்தோறும் பாத பூஜை மட்டும் நடைபெற்று வருகிறது.

* * *

அந்தக் கிராமத்தில் உள்ள மடங்களும் கோவில்களும் மிகவும் அழகாக இருக்கின்றன. அன்று பிரதான மடத்தின் முன் பாகத்தில் பெரும் கூட்டமும் ஆரவாரமுமாக இருந்தது. என்ன விசேஷம் என்று விசாரித்ததில், மறுதினம் பகவானுக்கு அபிஷேகத்திற்கென வைத்திருந்த திருமஞ்சனக் கலசங்களை ஏலத்திற்கு விட்டுக் கொண்டிருந்தார்கள் என்று தெரிந்தது. மொத்தம் 1008 கலசங்கள் விற்பனைக்கு வைக்கப் பட்டிருந்தன. 108 கலசங்கள் ஏலத்திலும், மற்றவைகள் கலசம் ஒன்றுக்கு 101 ரூபாய் வீதமும் விற்கப்பட்டன.

முதல் தங்கக் கலசத்தைப் பதினெட்டாயிரத்து ஒரு ரூபாய் விலைக்கு, ராஜஸ்தான் கோடீசுவரர் ஒருவர் எடுத்தார். அநேகமாக அந்த 108 கலசங்களையும் வட இந்தியர்கள்தான் ஏலத்தில் எடுத்தார்கள். தங்கக் கலசம் எடுத்தவரை, மறு நாள் காலை யானையில் ஏற்றி மலையடிவாரத்திற்கு அழைத்து வந்தார்கள்.

டில்லி, காஷ்மீர், பம்பாய், கல்கத்தா, ராஜஸ்தான், அஸ்ஸாம் முதலிய தூர தேசங்களிலிருந்து லக்ஷப் பிரபுக்களான ஜைனர்கள், சொந்த மோட்டார்களில் வந்திருந்தார்கள். மற்றும் லக்ஷக்கணக்கான ஜனங்கள் பஸ்களிலும், லாரிகளிலும் வந்திருந்தார்கள். தமிழ் நாட்டிலிருந்தும் இலங்கையிலிருந்தும் கூட ஏராளமான பக்த ஜனங்கள் வந்திருந்தனர்.

ஊருக்குள் வீதிகளிலெல்லாம் தண்ணீர் தெளித்து, செப்பனிட்டிருந்தார்கள். தோரணங்களினாலும், கொடிகளாலும் ஊரை அலங்கரித்திருந்தார்கள். சுமார் இருபத்தைந்தாயிரம் ஜனத்தொகை கொண்ட அந்தச் சிற்றூரில் அன்று இரண்டரை, மூன்று லக்ஷம் ஜனங்களுக்கு மேல் கூடியிருந்தார்கள்.

மைசூர் சமஸ்தானம்தான் மின்சார விளக்குகளால் அலங்காரம் செய்வதில் பிரக்யாதி பெற்றதாயிற்றே! மின்சார இலாக்கா, தங்கள் திறமை பூராவையும், அந்தச் சிறிய கிராமத்தில் காண்பித்திருந்தது, பார்க்கப் பார்க்கத் திகட்டாத காட்சியாக இருந்தது. மலையின் மேலிருந்த கோமடேசுவரர் கோயிலைத் தேவலோகமோ வென்று பிரமிக்கும்படி மாற்றி யிருந்தார்கள். அடிவாரத்திலிருந்து உச்சி மட்டும் மின்சார விளக்குகளினால் தோரணம் அமைத்திருந்தனர். பகவானைச் சுற்றி அமைத்திருந்த மூங்கில் சாரத்தில் ஒவ்வொரு மூங்கில் கழியிலும் விளக்குகள் பொருத்தி யிருந்தது. ஆகாயத்திலிருந்து பகவானே நமக்குக் காட்சியளிப்பது போன்ற பிரமையை உண்டாக்கியது.

# மாமுனிவர்

## பத்மா சீனிவாசன்

* * *

மறுநாள் அதிகாலையில் எழுந்திருந்து, ஸ்னானம் செய்துவிட்டு, மலைக்குக் கிளம்பினோம். அபிஷேகத்தைத் தரிசிக்க சுமார் நாலாயிரம் ஜனங்களுக்குத்தான் மலைமேல் போக அனுமதிச் சீட்டு கொடுத்திருந்தார்கள். அனுமதிச் சீட்டு இல்லாதவர்கள் எதிரில் உள்ள சந்திரகிரி பர்வதத்தில் ஏறிச் சென்று தரிசித்தார்கள்.

ஐம்பத்தெட்டு அடி உயரமுள்ள கோமடேசுவரரின் உயரத்திற்குச் சமமாக மூன்று பக்கங்களிலும் பிரும்மாண்டமான சாரங்களை அமைத்திருந்தார்கள். கலசம் எடுத்தவர்களும், அர்ச்சகர்களும் அபிஷேகம் செய்வதற்காக அதில் ஏறிச் சென்றார்கள். பகவானுடைய காலடியில் இருபது அடி அகலத்திற்கு நெல்லைப் பரப்பி, அபிஷேகக் கலசங்கள் வைக்கப்பட்டிருந்தன. மேளதாளங்கள் முழங்கிக் கொண்டிருந்தன. பெண்கள் புத்தம் புதிய ஆடைகளையும், விலையுயர்ந்த நகைகளையும் அணிந்து கொண்டு வந்திருந்தனர். ஆண், பெண் குழந்தைகள் எல்லோரும் ஒரே குதூகலத்துடனும் ஆர்வத்துடனும் அபிஷேக நேரத்தை எதிர் நோக்கிக் கொண்டிருந்தனர்.

ராஜப் பிரமுகர் அவருடைய தாயாருடனும், பெரியம்மாவுடனும் பத்து மணிக்கு வந்து சேர்ந்தார். அவருடைய அபிஷேகம், ஜனங்களின் சந்தோஷ ஆரவாரத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. இருநூறு குடம் பால், இருநூறு குடம் தயிர், நெய், தேன், மூட்டை மூட்டையாகச் சர்க்கரை, பருப்பு வகைகள், கசகசா, ரவை, சந்தனப்பொடி, மஞ்சள் பொடி, குலைக் கணக்காக உரித்த வாழைப் பழங்கள், ஆயிரம் தேங்காய்களின் துருவல், பாதாமி, முந்திரிப் பருப்பு, திராட்சை, குங்குமப்பூ கரைத்த பால், மலையடிவாரத்தில் உள்ள கல்யாணியிலிருந்து கொண்டுவந்த புண்ணிய தீர்த்தம் முதலியவைகளுடன் அபிஷேகம் நடந்தது. ஆயிரத்தெட்டு ரூபாய்களும், நவரத்தினங்களும்கூட அபிஷேகம் செய்தார்கள். கடைசியில் கூடை கூடையாகப் புஷ்ப அர்ச்சனை செய்தது தேவலோகத்திலிருந்து தேவர்கள்தான் புஷ்பமாரி பொழிகிறார்களோ வென்று தோன்றியது. ஜனங்கள் வெய்யிலைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் பிற்பகல் மூன்று மணி வரையில் அபிஷேகத்தைத் தரிசித்து, ஆனந்த பாஷ்பம் பெருக, உணர்ச்சி வெள்ளத்தில் மூழ்கி யிருந்தார்கள்.

ராஜப் பிரமுகர் அரை மணி நேரம் இருந்துவிட்டுப் புறப்பட்டுச் சென்றார். உடனே மலையடிவாரத்திலிருந்த பக்த கோடிகளையும் மேலே வர அனுமதித்து விட்டார்கள். அவ்வளவுதான்! மடைதிறந்த வெள்ளம்போல லக்ஷோப லக்ஷம் ஜனங்கள், பகவானைத் தரிசித்த காட்சி என் கண்முன் இன்னும் தாண்டவ மாடுகிறது.



## மிகக் குறைந்த நேரத்தில்

(100 மீட்டர் ஓட்டம்)

அவனுடைய வெற்றிக்குக் காரணம் திடமான பயிற்சியே. அதுபோலவே அவன் வெற்றிக்குக் காரணமாயிருந்ததில் முக்கியமானது அவனுடைய உணவு உண்மையாகவே இந்த வெற்றிக்கு வேண்டிய அளவு ஊக்கமும் பலமும் அவனுக்குக் கொடுத்தது அவனது உணவுதான். அவனுடைய உணவில் எப்பொழுதும் அதிக பலம் இருந்தது.


அவனுடைய உணவு சமைக்கப்பட்டிருந்தது




## துஷார் வனஸ்பதியில்

இரட்டிப்பாக சுத்தப்படுத்தி கை படாமல் செய்யப்பட்ட வனஸ்பதி ஆரோக்யமான முறையில் பாக் செய்யப்பட்டது.

துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், கர்னூல்.




## 10. அதிசய உண்மைகள்

அந்தக் கல் மண்டபத்துப் பிரம்மாண்டமான கதவுகள் மூடிக் கொண்டதும், உள்ளே 'கருகும்' என்ற இருட் படலம் சூழ்ந்தது. ராஜாவுக்கு ஒன்றும் விளங்கவில்லை. சிறிது நேரம் கழித்துக் கண்கள் இருட்டுக்குக் கொஞ்சம் பழக்கப் பட்ட பின்பு மேலே உயரத்தில் இருந்த சிறு ஜன்னல் வழியாகக் கொஞ்சம் வெளிச்சம் வந்தது தெரிந்தது.

"அரசாங்கத்து முத்திரை மோதிரத்தைக் கொண்டு வந்து காட்டினால் அரண்மனையில் உத்தியோகம் கிடைக்கும் என்று எதிர்பார்த்து வந்ததற்குச் சிறைவாசம் கிடைத்ததே! ஐயோ! இதென்ன அநீதி! இந்த அரசாங்கத்தில் நியாயமான விசாரணையே கிடையாதா?" என்று நினைந்து வருந்தினான் ராஜா.

கௌசல்யாவுக்கு வன வாசத்திலிருந்து விடுதலை அளிப்பதாகக் கூறி விட்டு, இப்பொழுது தானே சிறையில் அகப்பட்டுத் தவிப்பதை நினைக்க ராஜாவின் மனம் பட்ட வேதனையைச் சொல்லி முடியாது.

இத்தகைய வேதனையில் ஒரு வாரம் கழிந்தது. தினம் இரண்டு வேளை சாப்பாடும் குடிக்க ஜலமும் ஒழுங்காகக் கிடைத்து வந்தன.

அன்றைய தினம் சாப்பிட்டு விட்டுக் கல் மேடை மீது உட்கார்ந்து ராஜா வழக்கம் போல் சிந்தனையில் ஆழ்ந்தான்.

'தடக், தடக்' என்று கதவு திறக்கப் படும் ஓசை ராஜாவின் சிந்தனையைக் கலைத்தது. பகல் ஒரு தடவை, இரவு ஒரு தடவை ஆக இரண்டு தடவைகள் தான் அந்தமா பெரும் கதவுகள் அவனுக்கு உணவு அளிப்பதற்காகத் திறந்து கொள்ளும். இடையில் எந்தக் காரணத்தைக் கொண்டும் கதவுகள் திறப்பதில்லை. கல் கோட்டைக் குள்ளே ஸ்நானம் செய்ய, உலாவ இதற்கெல்லாம் வசதிகள் இருந்தன. ஆனால் அந்தக் காரியங்களெல்லாம் சிறைக் காவலன் முன்னிலையில் அவன் உத்தரவின் மேல்தான் செய்ய முடியும்.

இன்று அதிகாலையில் சிறைக் கதவுகள் திறந்து கொண்டதைப் பார்க்க ராஜாவுக்கு அதிசயமா யிருந்தது. ஏதாவது இந்திர ஜால மகேந்திர ஜாலமோ என்று கூடத் தோன்றியது.

கதவு திறந்ததும், நெடிதுயர்ந்த கம்பீரமான ஓர் உருவம் சால்வையால் தன்னை மறைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தது. நுழைந்த கையோடு கதவையும் சாத்தியது. ராஜா ஆச்சரியத்தோடும் குழப்பத்தோடும் பிரமை பிடித்து நின்றான்.

"ராஜா, இங்கே வா! இப்படி உட்கார், பயப்படாதே!" என்று கூறிய அந்த உருவம் சால்வையை நகர்த்தி விட்டு அவனைப் பார்த்தது.

"ராஜா, கொஞ்சம் பொறுமையோடு நான் சொல்லப் போவதைக் கேள். உன் பிறப்பின் ரகசியம், உன் தாய் தந்தையர் யார், உன்னைப் பெட்டியில் வைத்துக் காட்டாற்று வெள்ளத்தில் விட்ட காரணம் எல்லாம் எனக்கு விவரமாகத் தெரியும். உங்கள் வீட்டுக்கு அன்றைக்கு ஒரு நாள் கடும் மழை அடித்த போது நானும் இன்னொருவரும் வந்திருந்தோம் அல்லவா?



அவர்தான் ராஜா வீரவர்மர். அன்று இரவு நித்தியானந்தத்துடன் நாங்கள் பேசியது முழுவதையும் நீ கேட்டுக் கொண்டிருந்தாய் என்பது எனக்குத் தெரியும். அந்தப் பாதகச் செயலில் எனக்கும் பங்கு உண்டு. அதையெல்லாம் உன்னிடம் சொல்லி விட ஆவல் கொண்டுதான் உன்னைத் தேடிச் சிறைச்சாலைக்கு வந்தேன். என் மனச்சாட்சி இருபத்திரண்டு வருஷங்களாக என்னை நிம்மதியோடு தூங்கவிடவில்லை. நான் செய்த தவறுக்குப் பிராயச்சித்தமாக உனக்கு வேண்டிய உதவிகள் செய்வது என்ற தீர்மானத்தோடு இங்கு வந்திருக்கிறேன். நான் ராஜா வீரவர்மரின் முதல் மந்திரி!'' என்றான் வந்த மனிதன்.

''சொல்லுங்கள், தயவு செய்து எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லுங்கள்!'' என்று துடித்தான் ராஜா.

பிறகு மந்திரி, ஆதியோடு அந்தமாகக் கிராமத்துக் குடியானவன் வீட்டில் அதிர்ஷ்டக் குழந்தை பிறந்ததிலிருந்து ஆரம்பித்து, தானும் அரசனும் அந்தக் குழந்தையைப் பெட்டியில் வைத்துக் காட்டாற்றில் மிதக்க விட்டது வரையில் விவரமாகச் சொன்னான்.

ராஜாவுக்குத் தன்னைப் பற்றிய கதை கேட்பதற்கு ரொம்ப ரொம்பச் சுவாரஸ்யமாயிருந்தது. தான் சிறைச்சாலையில் இருப்பதைக் கூட மறந்து அழகிய கன்னங்கள் குழியச் சிரித்த வண்ணமாயிருந்தான்.

''ராஜா, குழந்தைப் பருவத்தில் உனக்கு வைத்த பெயர் தேவசேனாபதி. நீ இந்த ராஜ்யத்தை ஆளும்போது அந்தப் பெயரையே சூட்டிக் கொள்! நாளைய தினம் அரசர் உன்னைச் சபா மண்டபத்துக்கு அழைப்பார். அப்போது ராணி மல்லிகாவைப் பற்றியும் அவள் குமாரியைப் பற்றியும் சாமர்த்தியமாகச் சொல்ல வேண்டும். நீ என்னைப் பரிபூரணமாக நம்ப வேண்டும். நான் உனக்கு நன்மையே சொல்வேன்!'' என்று மந்திரி மிகவும் உருக்கமாகச் சொன்னான். ராஜாவும் சம்மதித்தான்.

மறுநாள் ராஜா சிறைச்சாலையில் மிகவும் உற்சாகமாயிருந்தான். மந்திரி சொன்னபடி குறிப்பிட்ட வேளையில் சிறைக் கதவுகள் திறந்து கொண்டன. இரண்டு சேவகர்கள் ராஜாவை அங்கிருந்து அரண்மனைச் சபா மண்டபத்துக்கு அழைத்துச் சென்றார்கள். சபா மண்டபத்துக்குப் போகும் வழியெல்லாம் சௌந்தரிய லோகமாகக் காட்சியளித்தது. வான முகட்டை இடிக்கும் பிரம்மாண்டமான அரண்மனை மாடங்கள் கனவு உலகத்தில் காண்பதுபோன்ற பிரமையை அவனுக்கு உண்டாக்கின.

சபா மண்டபத்தில் அரசாங்கத்து உயர்தர அதிகாரிகளும் நகரத்துப் பிரமுகர்களும் அவரவர்கள் அமரும் ஆசனங்களில் அமர்ந்திருந்தனர். உயர்ந்த வேலைப்பாடுகள் அமைந்த, யானைத் தந்தங்களினாலான, நவரத்ன கசிதமான சிம்மாசனத்தில் வீரவர்மன் அமர்ந்திருந்தான். சேவகர்கள் ராஜாவை அரசனுக்கு எதிரில் அழைத்துச் சென்று நிறுத்தினார்கள்.

வீரவர்மனைப் பார்த்ததும் ராஜாவுக்குச் சிரிப்பு வந்து விட்டது. 'குப்'பென்று உடனே சிரித்து விட்டான்.

''என்னத்துக்காக இப்பொழுது சிரித்தாய்? இது ராஜகிருகம், தெரியுமா?'' என்று கடுமையாகக் கேட்டான் வீரவர்மன்.

''மகாராஜாவே, நன்றாய்த் தெரியும். நான் பெயருக்கு ராஜா. நீங்கள் உண்மையிலேயே இந்தத் தேசத்துக்கு ராஜா. ஒரு ராஜா சிறையிலிருந்து இப்பொழுது சபா மண்டபத்துக்கு வந்திருக்கிறார். தாங்கள் அரண்மனையிலிருந்து சபா மண்டபத்துக்கு வந்திருக்கிறீர்கள். இந்த வித்தியாசத்தை நினைத்துப் பார்த்ததும் எனக்குச் சிரிப்பு தாங்கவில்லை. சிரித்து விட்டேன். மன்னித்துக் கொள்ளுங்கள். குழந்தை இல்லை என்ற காரணத்தால் மூத்த ராணியை, அரண்மனையை விட்டுக் கானகத்துக்கு அனுப்பி வைத்தவரல்லவா தாங்கள்? அந்த மகாராணியை ஏமாற்றி விட்டுச் சொல்லிக் கொள்ளாமல் அரண்மனைக்கு வந்தவரல்லவா தாங்கள்? அந்த ராணியின் வயிற்றில் பட்டத்துக்குரிய சிசு வளர்ந்து வருவதைக் கூட அறிந்து கொள்ள அவகாசமில்லாமல், அவளைத் தவிக்க விட்டு, அரண்மனைக்கு ஓடி வந்தவரல்லவா தாங்கள்? ஆதலால் தங்களிடம் எனக்குப் பயந்தான். வேலை தருவதாகச் சொல்லி என்னை வரவழைத்துச் சிறையில் தள்ளினீர்களே! மகாராஜா, நான் செய்த குற்றம் என்ன?'' என்று ராஜா உணர்ச்சியோடு ராஜ கம்பீரமாகக் கேட்டான்.

பழைய வரலாற்றைக் கேட்டதும் வீரவர்மனின் உடம்பு நடுங்கியது. (தொடரும்)

BSY-617-TAM

# வங்காளி பத்ரலோக்

படிப்பிலும், கலைகளிலும் பலர் மேதைகளாகத்திகழும் ஒரு வகுப்பைச் சேர்ந்தவர் இவ்வங்காளி. கஷ்டங்களினால் மனிதனின் இயல்பும், மனோநிலையும் சீரடைகிறதென்பது உண்மையெனலாம். பல நூற்றாண்டுகளாக அதிக ஜனசங்கியையுள்ள இவரது நாடு படையெடுப்பு, வெள்ளம், பஞ்சம், கொடியநோய் முதலிய கஷ்டங்களுக்குள்ளாக்கப்பட்டது. ஏதாவதொரு விபத்துக்குள்ளாகாமல் ஒரு வருடமாவது சென்றதில்லை. 1769-ம் ஆண்டு பெரிய பஞ்சத்தில் ஒருகோடி ஜனங்களுக்கு மேல் மாண்டதாகச்சொல்லப்படுகிறது. அதன் பிறகு அமைந்த நிலையான அரசாங்கம், அத்தகைய ஆபத்துகளைத்தடுக்க எவ்வளவோ செய்திருக்கிறது; ஆனாலும் இயற்கையின் கொடுமையை கட்டுப்படுத்த முடியவில்லை. இது சமீபகால சரித்திரத்திலிருந்து நன்கு விளங்கும். இக்கொடிய கஷ்டங்களைச் சமாளிப்பதனாலேயே இவர்கள் நுண்ணறிவின் உச்ச நிலையை அடைந்தார்கள் என்பது மிகையாகுமா?



நாங்கள் இந்தியாவின் மூலை முடுக்குகளிலுள்ள அநேகம் சமூகங்களோடு உறவு கொண்டிருக்கிறோம். அவர்கள் எங்களை நம்பி இருக்கிறார்கள். நாங்களும் அவர்களுக்கு பணி செய்வதில் பெருமை அடைகிறோம்.

**பர்மா-ஷெல்...**

**பாரத நாட்டின் வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறது**

# கள்ளிக்கோட்டை பண்ட்ஸ் லிமிடெட்

(இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டது)

| தலைமை ஆபீஸ்: | கிளை ஆபீஸ்: |
|---|---|
| கள்ளிக்கோட்டை | 9, செம்புதாஸ் தெரு, மதராஸ்-1 |

Phone: 85596

## எங்கள் மாதாந்திரக் குறுகிய கால தவணைச் சீட்டுகள்

### கவர்ச்சிகரமான ஏப்ரல் மாதச் சீட்டு வரிசை

உங்கள் இருண்ட எதிர்கால வாழ்வைப் பற்றி நீங்கள் பயந்தால், எங்களுடைய மகிழ்ச்சிதரும் சீட்டுகள் உங்களை உற்சாகப்படுத்தி, நம்பிக்கையோடும் தைரியத்தோடும் அந்தப் பயத்தை விரட்டியடிக்க உதவுகிறது. நூற்றுக்கணக்கானவர் சந்தோஷமடைந்துள்ளனர். நீங்களும் ஏன் அவ்விதம் சந்தோஷம் அடையக் கூடாது?

*விரைவில் மனுச் செய்து கொண்டு ஏமாற்றத்தைத் தவிருங்கள்*

20 மாதங்கள் | 4-வது ஞாயிற்றுக்கிழமை ஏல வரிசை | 20 சந்தாதாரர்கள்

| வகுப்பு | மாதச் சந்தா | சீட்டுத் தொகை |
|---|---|---|
| C | ரூ. 100/- | ரூ. 2000/- |
| D | ரூ. 50/- | ரூ. 1000/- |
| E | ரூ. 25/- | ரூ. 500/- |
| F | ரூ. 20/- | ரூ. 400/- |
| G | ரூ. 15/- | ரூ. 300/- |
| H | ரூ. 10/- | ரூ. 200/- |

சந்தா செலுத்தும் கடைசி தேதி 17-4-53


முதல் ஏலத் தேதி 26-4-53

விபரங்களைத் தெளிவாக எழுதி மனுச் செய்து கொள்பவர்களுக்கு விதிகளும், நிபந்தனைகளும் இலவசமாக அனுப்பப்படும். மற்ற விதிகள் வழக்கம்போல். சீட்டுச் சேர்த்துக் கொள்ளும் உரிமை கம்பெனியைச் சேர்ந்தது. (போர்டார் உத்திரவுப்படி)

எம். வி. விஸ்வநாதன், மானேஜிங் டைரக்டர்

தந்தி : 'KALLIFUNDS'





# LOWER COSTS with FARGO TRUCKS

You can depend on Fargo Trucks to do your hauling job faster, better and at less cost!

New Fargo Truck engines are more powerful than ever before. The power they deliver is economical and dependable. Add to this more than 50 new improvements!

You will find that lower operating costs add up to big savings ...with Fargo Trucks! See us today.

THE PREMIER AUTOMOBILES LTD.

*Factory: Agra Road, Kurla.*

*H. O: Construction House: Ballard Estate, Bombay*

Dealers: SOUTHERN MOTORS, MOUNT ROAD, MADRAS

# மறு பிறவி

சரசன்

டெலிபோன் ஒலித்தது. டாக்டர் மூர்த்தி ரிசீவரைக் கையில் எடுத்தார். "ஹல்லோ! என்ன? அவசரக் கேஸா? என் கார் ரிப்பேரில் இருக்கிறதே! ஓ! அப்படியானால் சரி. உடனே உங்கள் காரை அனுப்புங்கள். நான் தயாராய் இருக்கிறேன்."

அடுத்த பத்து நிமிஷத்திற்கெல்லாம் ஒரு கார் டாக்டர் மூர்த்தியின் வீட்டு வாசலில் வந்து நின்றது. அதிலிருந்து ஒரு வயது முதிர்ந்த மனிதர் இறங்கி உள்ளே வந்தார்.

"வாருங்கள்! நீங்கள்தானே சற்று முன்பு டெலிபோன் செய்தது?" என்று வரவேற்று விசாரித்தார் டாக்டர்.

"ஆமாம். என் மருமான் ரொம்பவும் ஆபத்தான நிலையில் இருக்கிறான். எத்தனையோ டாக்டர்கள் பார்த்துக் கை விட்டு விட்டார்கள். இன்று காலை திடீரென்று பேச்சு மூச்சற்றுப் போய்விட்டது. சட்டென்று உங்கள் ஞாபகம் வந்தது. சீக்கிரம் கிளம்புங்கள்!" என்று கூறி டாக்டரை அழைத்துக் கொண்டு கிளம்பினார் வந்த மனிதர்.

ஓர் அழகிய சிறு பங்களாவின் முன் கார் நின்றது. அந்த மனிதர் உள்ளே முன்னால் செல்ல, அவரைத் தொடர்ந்து டாக்டர் மூர்த்தி சென்றார்.

டாக்டர் மூர்த்தி நோயாளியின் மீது தன் பார்வையைச் செலுத்தினார். ஒரே கணந்தான். தணலை மிதித்து விட்டதுபோல் அவர் முகம் மாறிவிட்டது. தம்மையுமறியாமல் அவர் கால்கள் பின்னுக்கு இழுத்தன. அந்த ஒரே கணத்தில் ஆயிரம் எண்ணங்கள் அவர் மனத்திலே தோன்றி மறைந்தன.

"என்ன, டாக்டர்! ஒரு மாதிரி இருக்கிறீர்களே! என்ன விஷயம்? நோயாளியின் நிலைமையைப் பார்த்ததும் உங்களுக்குச் சந்தேகமாய் இருக்கிறதா, என்ன? எதுவாய் இருந்தாலும் சொல்லுங்கள்?" என்று பரபரப்புடன் கேட்டார் அந்த நபர்.

உடனே ஒரு தினுசாய்ச் சமாளித்துக் கொண்ட டாக்டர் மூர்த்தி "ஒன்றுமில்லை" என்று கூறி, தம் கடமையை உணர்ந்து, நோயாளியைப் பரிசோதனை செய்தார். நோயாளி ஸ்மரணை யற்றுத்தான் கிடந்தான்.

சுமார் பத்து நிமிஷம் பரிசோதித்த பின்பு, ஏதோ மருந்துகள் எழுதிக் கொடுத்து விட்டு, "நிலைமை மோசமாகத்தான் இருக்கிறது. என்றாலும் இந்த மருந்தைக் கொடுங்கள். இப்போது ஒன்றும் சொல்லுவதற்கில்லை. மறுபடியும் நாளைக்காலை வந்து பார்க்கிறேன்" என்று கூறிவிட்டு, அந்த விநாடியே கிளம்பினார் டாக்டர் மூர்த்தி.

வீடு திரும்பிய டாக்டர் மூர்த்திக்கு, மனத்திலே பெரும் போராட்டம் ஏற்பட்டது. யாரை அவர் அடியோடு வெறுத்தாரோ, யாருடைய முகாலோபம் இனி செய்வதில்லை என்று திட வைராக்கியத்துடன் முன்பு கிளம்பினாரோ, அதே நபரை இன்று எதிர் பாராத வரையில் கண்டது குறித்து, அவர் மனம் குழம்பிக் கலங்கியது. எண்ண அலைகளிலே மிதந்து, அவர் வெகு தூரம் பின்னுக்குச் சென்றுவிட்டார் தம் வாழ்க்கைப் பாதையிலே.

மூர்த்தி ஓர் எளிய குடும்பத்துப் பையன். அவன் தந்தை ஒரு ஜவுளிக் கடையில் குமாஸ்தாவாக இருந்தவர். தம் ஒரே பையனை மூர்த்தியை ஸ்கூல் பைனல்வரை படிக்க வைத்தார். பையன் படிப்பிலே துடியாய் இருந்து தேறினான். கலாசாலை மேல்படிப்புக்கும் அவனுக்கு ஸ்காலர்ஷிப் கிடைத்தது. மேற்கொண்டு டாக்டருக்குப் படிக்க விரும்பினான். 'சரி' என்று தன் கஷ்டத்தையும் பாராமல் ஒப்புக் கொண்டார் தந்தை. வைத்தியக் கல்லூரியில் சேர்ந்து மிகக் கஷ்டப்பட்டுப் படித்துத் தேறினான்.

பின்னர் அவ்வூரிலே இருந்த பெரிய டாக்டரான ரகுராமனிடம் தொழில் முறை கற்க வேண்டி ஜூனியராக அமர்ந்தான். அந்த டாக்டர் நல்ல வருமானம் உள்ளவர். மூர்த்தியைப் போன்ற ஓர் இளைஞன் தமக்கு உதவியாகக் கிடைத்தது கண்டு அவர் மகிழ்ந்தார். சுமார் இரண்டு வருஷங்கள் அவரிடம் வைத்தியத் தொழிலின் நுணுக்கங்களை எல்லாம் தெரிந்து கொண்டான்.

பின்னர், தானே தனிமையில் தொழில் புரிய வேண்டும் என்று அவா ஏற்பட்டது. அதை டாக்டர் ரகுராமனிடம் தெரிவித்தான்.

அவர், "என்ன மூர்த்தி, அவசரம்? இன்னும் ஓர் இரண்டு மூன்று வருஷங்கள் என்னிடமே இருந்து, இன்னும் பெரிய பெரிய கேஸ்களெல்லாம் எப்படிக் கவனிக்க வேண்டும் என்று கற்றுக்கொண்டு பிறகு நீ தனிமையில் தொழில் ஆரம்பிப்பதில் எனக்கு ஆட்சேபமில்லை. தவிர, நீ இப்போது, தனிமையில் தொழில் புரிவதாகவே எண்ணிக் கொள்ளேன். நான்தான் உனக்குப் பூரண உரிமை கொடுத்திருக்கிறேனே! வித்தியாசமாக நினைக்காதே. உனக்குப்பணம் போதவில்லை என்றால், இன்னும் நூறு ரூபாய் போட்டுத் தருகிறேன்" என்று சொன்னார்.

டாக்டர் ரகுராமனுக்கு ஓர் எண்ணமிருந்தது. தம் ஒரே பெண்ணான கமலாவை, மூர்த்திக்குக் கல்யாணம் செய்து வைத்து, இருவரையும் தம்முடனேயே வைத்துக் கொள்ள வேண்டும் என்னும் ஆசை அவருக்குஉண்டு.

மூர்த்தியிடம் கமலாவுக்கு அத்யந்த அன்பு நிறைய இருந்தது. ஆஸ்பத்திரி நேரம் போகப் பாக்கி நேரங்களை அவனுடன் இன்பமாகக் கழிக்க விரும்புவாள். மூர்த்திக்கும் கமலாவிடம் அன்பு உண்டு. சரளமாகத்தான் பழகுவான். எனினும், தன்னைப் பற்றிய

தாழ்வு மனப்பான்மை அடிக்கடி அவன் மனதில் தோன்றி 'என்னதான் நாம் அவளுடன் அன்புடன் பழகினாலும், அவளுடைய அந்தஸ்துக்கும் நம் அந்தஸ்துக்கும் ஏணி போட்டால் கூட எட்டாது. அவள் ஒரு பிரபல டாக்டரின் செல்வப் பெண். நான் அவரிடம் ஊழியம் செய்யும் அநுபவமில்லாத இளம் டாக்டர். நான் எங்கே? அவர் எங்கே?' என்று எச்சரிக்கை செய்து கொண்டே இருந்தது.

மூர்த்தியின் தந்தைக்கு மட்டும் ஒரு சபலம் உண்டு. ஒருவேளை மூர்த்தி, டாக்டர் ரகுராமனின் மாப்பிள்ளை ஆனாலும் ஆகிவிடலாம் என்று. அதைப்பற்றி ஓர் நாள் அவனிடம் சொன்னபோது மூர்த்தி சொன்னான் :

"அப்பா! நீங்கள் பழங்காலப் பேர்வழி. இக்காலப் பழக்க வழக்கங்கள் உங்களுக்குத் தெரியாது. ஒரு பிரபல டாக்டர் கேவலம் ஒரு ஜவுளிக்கடை குமாஸ்தாவின் பிள்ளைக்குத் தம் பெண்ணைக் கல்யாணம் செய்து வைப்பார் என்று கனவு காண்கிறீர்களா? வேடிக்கைதான்!"

ஆனால் ஒரு நாள் டாக்டர் ரகுராமன் இதைப் பற்றிப் பிரஸ்தாபித்தபோது, மூர்த்திக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. "ஆ! நமக்கா இந்த பாக்கியம்?" என்று வியந்தான்.

அன்று தனிமையில், கமலாவைச் சந்திக்கையில் இதைப் பற்றிக் கேட்டான்.

"கமலா! உன் தந்தை இன்று ஒரு விசேஷம் என்னிடம் சொன்னார். உண்மையாக நான் நம்பவே யில்லை. நான் 'எட்டாத கனி' என்று எண்ணி இருந்த உன்னை எனக்கு..." என்று இழுத்தான்.

கமலா, நாணத்துடன் சிரித்துக் கொண்டே உள்ளே ஓடி விட்டாள்.

ஓர் நல்ல சுபதினத்திலே டாக்டர் மூர்த்தியும் கமலாவும் முறைப்படி தம்பதிகளாயினர். எட்டாத கனி எட்டிய கனியாக ஆனது மட்டு மின்றி, தன் கைக்கும் கிடைத்தது பற்றி ஏற்பட்ட சந்தோஷம் கொஞ்சமா என்ன மூர்த்திக்கு? தன் சம்பந்தியின் பெரிய மனதைக் கண்டு மகிழ்ச்சியால் துள்ளினார் டாக்டர் மூர்த்தியின் தந்தை.

டாக்டர் ரகுராமன் தம் எண்ணம் கைகூடியது குறித்து, ஆனந்தம் அடைந்தார். முன்பை விட இப்போது, அதிக அக்கறையுடன் மாப்பிள்ளைக்குத் தொழிலின் நுட்பங்களை விளக்கி வந்தார். கூடிய சீக்கிரத்திலே மூர்த்தியை ஒரு பிரபல டாக்டராக்கிவிட வேண்டும் என்று ஆவலுடன் உழைத்தார். அவர் உழைப்பு வீண் போக வில்லை. விரைவிலேயே டாக்டர் மூர்த்திக்குப் புகழ்கிடைக்கலாயிற்று. டாக்டர் ரகுராமனின் வாடிக்கைக்காரர்கள் மூர்த்தியின் சிகிச்சையைப் பெரிதும் விரும்பினர். ஒரு நாள் வேடிக்கையாகச் சொன்னார் மூர்த்தியிடம் ரகுராமன் : "மூர்த்தி! பார்த்தாயா? சிலர் நீ சிகிச்சை செய்வதையே அதிகம் விரும்புகிறார்கள். அதற்காக நீ மட்டும் இருக்கும்போது வருகிறார்கள். பேஷ்! என் பெயரைக் காப்பாற்றுவாய்" என்று. மூர்த்திக்கு உள்ளூற ஆனந்தம்.

அன்று மூர்த்தி, தன் நண்பர்கள் சிலருடன் பேசிக் கொண்டிருந்தான் கிளப்பில். நண்பர்களில் ஒருவன் சொன்னான், "என்னப்பா, மூர்த்தி! ஊரில் உன் பெயர் பிரமாதமாய் அடிபடுகிறதே!" என்று. மூர்த்திக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"ஒன்றும் பயப்படாதே! தொழில் முறையில் உன் பெயர் ரொம்பவும் பிரபலமாகி விட்டது என்று சொல்கிறேன். உன் மாமனாரையும் மிஞ்சிவிட்டாயே! அப்படியிருக்க நீ ஏன் தனியாய்த் தொழில் ஆரம்பிக்கக் கூடாது? இந்த நாளில், தாயும் பிள்ளையுமானாலும், வாயும் வயிறும் வேறேதானே? நீ உழைத்து என்ன பலன்? பெயரும் புகழும் பணமும் உன் மாமனார் அல்லவா கொண்டு போகிறார்? நான் ஏதோ கெடுதலாய்ச் சொல்லுவதாக எண்ணாதே! தொழில் நுட்பம் தெரிந்த பின் நீ தனியாக 'கிளினிக்' ஆரம்பிப்பது தான் நல்லது. கூட்டு முறை உதவாது" என்றான்.

நண்பனின் வார்த்தைகள் ஏற்கனவே கிளம்பி மறைந்து போன ஆசையை மீண்டும் மனத்திலே கொண்டு வந்து நிறுத்தியது டாக்டர் மூர்த்திக்கு. சற்று யோசித்துப் பார்த்ததில், அது வாஸ்தவமே என்றும் தோன்றியது. தொழில் முறையைத் தவிர, தன் உறவின் முறையும் அப்போதுதான் பரிமளிப்புடனும் கௌரவமாயும் இருக்கும் என்றும் கண்டான். அவ்வளவுதான். பிரிந்து போக ஆயத்தம் செய்யத் தொடங்கத் திட்டமிட்டான். மாப்பிள்ளையின் இந்த அனுகுண்டுச் சொற்களை டாக்டர் ரகுராமன் அதிர்ச்சியுடன் கேட்டார்.

"மூர்த்தி! திடீரென்று இந்த எண்ணம் ஏன் உனக்கு உதித்தது. நானே இன்னும் சில மாதங்களில் ஓய்வு பெற்று, உன்னையே முழுதும் கவனித்துக் கொள்ளும்படி செய்ய வேண்டும் என்று யோசித்துக் கொண்டிருந்தேன். ஏன் இப்படி அவசரப் படுகிறாய்?" என்றார் டாக்டர் சாந்தமாய்.



"இல்லை. இப்போது பிரிந்து போக வேண்டும். தயவு செய்து குறுக்கே ஒன்றும் சொல்லாதீர்கள்" என்றான். பேச்சிலே கண்டிப்பு தொனிப்பதைக் கண்டு, அயர்ந்து போனார் ரகுராமன். என்றுமே அவன் அம்மாதிரி பேசியது கிடையாது. மாப்பிள்ளையின் பிடிவாதத்தைக் கண்டு ஒன்றும் சொல்லத் தோன்ற வில்லை அவருக்கு.

"சரி, உன் இஷ்டம்!" என்று அவரையும் அறியாமல் அவர் வாய் உச்சரித்தது. இதையெல்லாம் கவனித்த கமலாவுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. யாரோ தன் கணவனின் உத்தமமான மனதைக் கலைத்துப் பாழாக்கி விட்டார்கள் என்றுதான் எண்ணினாள். தன் தந்தையின் பெருந்தன்மையான குணத்தைக் கவனித்திருந்தும், யாருடைய துர்ப்போதனைக்கோ அடிமையாகிவிட்ட தன் கணவனின் செயலுக்காகத் துக்கித்தாள்.

"ஏன் இன்று இந்தத் திடீர்த் திட்டம்? அப்பாவும் நீங்களும் சேர்ந்து தொழில் புரிவது பார்ப்பதற்கு எத்தனை கண்ணியமாயும் பெருமையாயும் இருக்கிறது? அதை விட்டு......" என்று ஆரம்பித்த கமலாவை அதட்டி நிறுத்தினான் மூர்த்தி.

"போதும், வேண்டியதில்லை உன் இதோபதேசம். எனக்கு அப்போதே ஆசை, தனித் தொழில் புரியவேண்டும் என்று. உன் அப்பா தான் குட்டிச் சுவராக்கினார்! இல்லாவிட்டால் இன்று நிலைமை வேறுவிதமாகியிருக்கும். இதோ பார்! நாளையிலிருந்து தனிமையில் தொழில் ஆரம்பம். அத்துடன் நம் குடித்தனமும் தனிதான்!"

"ஆ! குடித்தனம் கூடவா தனியாக நடத்த வேண்டும்? தொழில் வேணுமானால் தனியாக நடத்துங்கள். நாம் எப்போதும் போல அப்பாவுடன் இங்கேயே இருப்போம்!" என்றாள் ஏக்கத்துடன் கமலா.



"கூட்டுச் சுயம்பாகம் எதிலும் கூடாது. நீ இளம்பத்தான் வேண்டும்" என்றான் மூர்த்தி. தர்மசங்கடமான நிலையில் இருந்து தத்தளித்தாள் கமலா. தாயற்ற தன்னை, தாயும் தந்தையுமாய்க் காப்பாற்றி வளர்த்த தந்தைக்கு எதிராகத் தனிக் குடித்தனமா? தன்னைத் தவிர அவருக்கு வேறு யார்? மன்றாடினாள். பிடிவாதம் மூர்த்திக்கு அதிகமாயிற்றே தவிர, குறையவில்லை. மனிதனுக்குச் சில சமயம் எந்தக் காரியத்திலாவது, பிடிவாதம் தோன்றி விட்டால், வாதம் முற்றிப் பிடிவாதமும் முற்றத் தான் செய்கிறது!

கமலா தன்னையும் மீறிச் சொன்ன சில சொற்கள், தனக்கு இத்தனை யமனாய் வரப் போகிறதென்று யோசிக்கவில்லை.

"கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். என் தந்தையால் அல்லவா இன்று உங்களுக்கு இந்தப் புகழும் பெருமையும் தைரியமும் ஏற்பட்டிருக்கிறது? கொஞ்சம் அவர் வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்தால் என்ன?"

இந்தச் சொற்கள் மூர்த்திக்கு எத்தனை ஆவேசத்தைக் கிளப்பி விட்டன!

"என்ன? என்னை இடித்துக் காட்டுகிறாயா? உனக்கு அத்தனை தைரியமா என்னுடன் வழக்காட! உன் தந்தைக்கு என் நன்றியை, இதுவரை உழைத்துச் செலுத்தி விட்டேன், அம்மணி! உனக்கும் உன் தந்தைக்கும் என் கடைசி வந்தனம்!"

கமலா தான் இரண்டு மாதம் ஸ்நானம் செய்யாமல் இருக்கும் விஷயத்தைச் சொல்லத் தயங்கினாள், மூர்த்தியின் ஆத்திரத்துக்குப் பயந்து. அவன் வெளியேறி விட்டான்.

டாக்டர் மூர்த்தி தனிமையில் தொழில் ஆரம்பித்து மாதம் இரண்டாயிற்று. அவன் எதிர்பார்த்த அளவு அந்தத் தொழில் நடக்கவில்லை. தன்னைப் புகழ்ந்தவர்களும், தன்னிடம் சிகிச்சை பெற்றவர்களும், பழையபடி டாக்டர் ரகுராமனிடம் போவதைக் கண்டான். மாமனாரின் பேரில் பரம துவேஷம் உண்டாயிற்று. இன்னும் கொஞ்சம் பொறுத்துப் பார்த்தான். நிலைமையில் மாறுதல் இல்லை. இதற்கிடையில், ஒரு நாள் அவன் மாமனாரிடமிருந்து தகவல் வந்தது. மூர்த்தியின் தொழில் சரியாக நடக்கவில்லையென்று கேள்விப்படுவதாயும், தன்னிடமே மீண்டும் அவன் வருவதில் தனக்குச் சந்தோஷமே என்றும் தெரிவித்தார். தன்னை அவர் அவமானம் செய்வதாகவே எண்ணினான் மூர்த்தி.

ஊர், மனைவி, மாமனார் எல்லாவற்றின் மீதும் வெறுப்புக் கொண்டு, யுத்த சேவைக்குப் புறப்பட்டு விட்டான். அதிர்ஷ்டவசமாக யுத்தத்திலே அடிபட்ட வீரர்களுக்காகப் பல டாக்டர்கள் (வரும்படி இல்லாமல் தவித்தவர்கள்) தேவையாய் இருந்தது. இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் சுமார் நான்கு வருஷங்கள் சேவை புரிந்து விட்டு, யுத்தம்

முடிந்ததும், கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்தான் மூர்த்தி. யுத்தத்திலே மூர்த்திக்கு நல்ல புகழ் கிடைத்ததால், கல்கத்தாவில் தொழில் தொடங்கினான். சுமார் ஐந்து வருஷங்களாகத் தொழில் புரிந்து வருகிறான். நல்ல தொழில் நடக்கிறது. பங்களா, கார் எல்லாம் இருந்தன. யுத்தத்திலே பல கோரக் காட்சிகளைக் கண்டு மரத்துப் போன அவன் உள்ளம், தன் மனைவியைப் பற்றியோ, அல்லது தன் வேறு உறவினர்களைப் பற்றியோ எண்ணி, மனம் சலன மடையவில்லை.

கல்கத்தாவில் குடியேறிய பின், சுமார் நான்கு கடிதங்கள் அவனுக்கு வந்திருந்தன. கையெழுத்தைப் பார்த்ததும், அது யாரால் அனுப்பப்பட்டன என்று அவனுக்குத் தெரிந்திருந்தபடியால், அவற்றைத் திருப்பி யடித்தான். ஆம்! கமலாவின் கடிதங்கள்தாம் அவை. பல காலம் எங்கெங்கோ சஞ்சரித்து விட்டு அவை வந்திருந்தன அவனிடம். இந்த நிலையில்தான் ஆரம்பத்திலே குறிப்பிட்ட நிகழ்ச்சி நடந்தது.

மறுநாள், போவதா வேண்டாமா அந்த நோயாளியைப் பார்க்க என்று யோசித்தார் டாக்டர் மூர்த்தி. அந்த நோயாளி தன் மனைவி கமலா தான் என்பது தீர்மானமாய்த் தெரிந்த விஷயம். அவள் எப்படி இங்கே வந்தாள்? அவள் தந்தை என்ன ஆனார்? இந்த மனிதர் அவளைத் தன் தங்கை பெண் என்றார். ஆனால் அவனுக்குத் தெரிந்தவரையில் கமலா தனக்கு ஒரு மாமா உண்டு என்ற விஷயத்தைக் கூறியது கிடையாது. ஏன்? டாக்டர் ரகுராமனும் தமக்கு ஒரு மைத்துனர் இருப்பதாகச் சொன்னது கிடையாது.

தன் வெறுப்பு முன்னைப் போல, அத்தனை கடுமையாய் இல்லை என்பதை உணர்ந்தார் டாக்டர் மூர்த்தி. காலம் எப்பேர்ப்பட்ட வைரத்தையும் மாற்றக் கூடிய தல்லவா? நோயாளியைக் காணப் புறப்பட்டார்.


இன்னும் பிரக்ஞை தெளியாவிடினும், ஆபத்தில்லை என்று புலனாயிற்று பரிசோதித்ததில். மறுபடியும் மூர்த்தி மருந்தை எழுதிக் கொடுத்துவிட்டுத் திரும்புகையில், கமலாவின் மாமா அவரிடம் வந்தார்.

"டாக்டர்! குழந்தை பிழைத்தால் போதும்! பாவம்! பலவிதத் துன்பங்களை இந்த இளம் வயதில் அனுபவித்துவிட்டாள். போதாக் குறைக்கு நோய் வாய்ப்பட்டு வேறு படுத்து விட்டாள். ஏதோ உங்கள் கைராசி அவள் குணமாக வேண்டும்!" என்றார் கம்மிய குரலுடன்.

மெதுவாகப் பேச்சுக் கொடுத்தார் மூர்த்தி. "ஏன் ஸார்! இவளுடைய தாய் தந்தையரும் இங்கேதான் இருக்கிறார்களோ? உங்களிடம் ஏன் இவள் இருக்கிறாள்?" என்றார் டாக்டர் மூர்த்தி, தம் ஆவலை வெளியில் காட்டிக் கொள்ளாத முறையில்.

அந்த மனிதர் சொன்னார். "அந்தக் கதையை ஏன் கேட்கிறீர்கள்? இவள் தந்தை மதுரையில் பிரபல டாக்டர். தாயைச் சின்ன வயசிலேயே இழந்து விட்டாள். தன்னிடம் வேலை கற்று வந்த ஓர் இளம் டாக்டருக்கு இவளை மணம் செய்வித்தார் டாக்டர் ரகு


தண்ணீர்பேய் - எதிராய் - "ஸான்போரைஸ்ட்"




* பின்னியின் மில்கள்: தி பக்கிங்காம் அண்டு கர்னாடிக் கம். லிட்., மதராஸ்.
தி பங்களூர் உல்லன், காட்டன், அண்டு சில்க் மில்ஸ் கம். லிட்.

NAS

ராமன். பின்னர் மாமனாருக்கும் மாப்பிள்ளைக்கும் தகராறு ஏற்பட்டது. பிரிந்துபோய்த் தொழில் ஆரம்பித்தான். பெண்ணையும் ஒதுக்கி விட்டான், ஏதோ துடுக்காய் இரண்டு வார்த்தை சொன்னதற்காக. தனிமையில் தொழில் சரிவர நடக்கவில்லை. வெறுத்து, யுத்தத்திலே சேர்ந்து விட்டான். நாளது வரையில் சங்கதி இல்லை அவனைப் பற்றி.

"இதற்கிடையில், ரகுராமன் திடீரென்று மாரடைப்பினால் காலமானார். அதுவரை என் குடும்பத்துக்கும் அவருக்கும் ஆதி காலத்திலேயே ஏற்பட்ட தகராறு காரணமாய்ப் போக்குவரவு இல்லாமலிருந்தது. மனிதன் இறந்த பின்னும், அதைப் பாராட்டலாமா? எனவே மதுரைக்குப் போய்க் கமலாவை அழைத்து வந்தேன். கணவன் பிரிந்த துக்கம் ஒருபுறம்; தகப்பன் போன துயரம் ஒரு புறம், சேர்ந்து படுக்க வைத்து விட்டது.

அப்போது ஓர் பெண் குழந்தை அங்கு வந்து, அந்தநபரின் மடியில் ஏறி உட்கார்ந்து, டாக்டர் மூர்த்தியை உற்றுப் பார்த்தது.

"ஒன்று கூற மறந்துவிட்டேன். கமலாவின்—அதுதான் என் மருமாளின்—குழந்தை இவள். வயது பத்து ஆகிறது."

இந்தச் சொற்கள் மூர்த்திக்குத் தேள் கொட்டியது போலிருந்தது. ஒரே கணம்! பல பல எண்ணங்கள் அவர் மனத்திலே எழும்பி மறைந்தன.

மேற்கொண்டு அங்கு நிற்கப் பிரியப்படாமல் "சரி, நான் பிறகு வந்து பார்க்கிறேன்" என்று கூறி, காரில் ஏறினார்.

மறு தினமும் நோயாளியைக் காணச் சென்றார் மூர்த்தி. இன்று வரவேற்பு வேறு விதமாய் இருந்தது. முதலில் டாக்டர் நோயாளியையே காண நேர்ந்தது. அவளுடைய நிலைமையில் மாறுதல் தெரிந்தது. படுக்கையில் உட்கார்ந்திருந்தாள் அவள். அவள் மாமா வீட்டில் இல்லை.

டாக்டரைக் கண்ணுற்ற கமலா, "ஹா! நீங்களா?" என்று வாய் விட்டு அதிர்ச்சியுடன் கூவினாள். அருகில் நின்றிருந்த குழந்தை விழித்தாள். அடுத்த கணம் எங்கிருந்து வந்ததோ கண்ணீர்ப் பிரவாகம் கமலாவின் கண்களிலே! உணர்ச்சி வசமாகி விட்டாள். சிரமப்பட்டு எழுந்திருந்தாள்.

"என்னை மன்னித்து விடுங்கள். ஐயோ! உங்கள் குழந்தையைப் பாருங்கள்! நீங்கள் என்னைப் பிரிந்து செல்லும் போது நான் இரண்டு மாதம் கர்ப்பிணியாயிற்றே! நிச்சயம் செய்து கொண்டு தெரிவிக்க எண்ணிய என்னைக் கடவுள் சோதித்து விட்டார்!"

இதைக் கேட்டதும் மூர்த்தியின் ஆத்திரமும் கோபமும் எப்படித்தான் மறைந்தனவோ! "ஆ! என் கமலா! நான் உனக்குப் பல விதத்திலே கேடு விளைவித்து விட்டேன். போதாததற்கு, உன் ஒழுக்கத்திற்கும் மாசு கற்பிக்கத் துணிந்தேன். என்னை மன்னித்து விடு, கமலா" என்று ஆவேசம் வந்தவரைப் போலக் கூறிக் கண்ணீர் பெருக்கினார்.

இப்போது டாக்டர் மூர்த்தி, கமலாவுடனும் தன் அருமைப் பெண் பானுவுடனும் தம் 'மறு பிறவி'யைத் தொடங்கியிருக்கிறார்!





நீங்கள் நூல் துணி வாங்கும் பொழுது எப்போதுமே இக்குறியை கடையோரத்தில் கவனிக்கவும். 'ஸான்போரைஸ்ட்' குறியை உபயோகிக்க உரிமை பெற்ற தயாரிப்பாளர்களுடைய நூல் துணிகளிலேயே இதைக் காணலாம். ★

SANFORIZED
'ஸான்போரைஸ்ட்'
சுருங்கச் செய்யப்பட்ட துணி

நனைக்கத் தேவையில்லை அப்படியே தைக்கக் கொடுக்கலாம்.

*ஸ்ரீ அம்பிகா மில்ஸ் லிட்.,
அஹமதாபாத்.

# தங்கையின் கண்ணீர்



கே. ஆர். கௌஸல்யா

'ரமேஷ் அண்ட் கம்பெனி'யில் உத்தியோகம் ஏற்றபோது ரங்கநாதனுக்கு வயது இருபத்திரண்டு. பிறகு இரண்டு வருஷங்களுக்கெல்லாம் அவருக்கும் ஜனகத்துக்கும் விவாகமாகியது. அவர்களுடைய வாழ்க்கை ஓடம் கொந்தளிப்பற்ற கடலில் அமைதியாகச் சென்று கொண்டிருந்தது. விவாகமாகிய மறு வருஷமே சாருமதியை ஈன்றெடுத்தாள் ஜனகம். பிறகு பத்து வருஷங்களுக்குள் அவளுக்கு அடுத்தடுத்து மூன்று நான்கு குழந்தைகள் பிறந்து விட்டன. ரங்கநாதனுக்கு ஊரில் கொஞ்சம் நிலபுலன்கள் இருந்தன. அதன் விளைச்சலிலிருந்து கிடைத்து வந்த அரிசி அவருக்கு வருஷத்தில் ஏழெட்டு மாதங்களைத் தள்ளி வந்தது. ஆபீஸில் ஏதோ சுமாரான சம்பளம்தான் என்ற வருத்தத்தை இதன் மூலம் சிறிது பாராட்டாமலிருந்தார் அவர்.

அப்போது சாருமதிக்கு வயது பதினாறு. கல்யாண வயதை யடைந்துவிட்ட அவளுக்கு நாலு பேருடைய ஏச்சுப் பேச்சுக்களுக்கு ஆளாகு முன், விவாகம் செய்துவிட வேண்டுமென்று முழு மூச்சுடன் முனைந்தார் ரங்கநாதன். மனதுக்குத் திருப்தியான வரன் ஒன்றும் குதிரவில்லை.

அப்போதுதான் அவருடைய துன்ப சகாப்தம் தொடங்கியது. ஜனகத்திற்குச் சில மாதங்களாக உடல் நிலை சரியாக இல்லாமலிருந்தது. அத்துடன் ஆறு வருஷங்களுக்குப் பிறகு மீண்டும் அவள் கருத் தரித்திருந்தாள். டாக்டர்களிடம் காண்பித்ததில் அவள் தேக ஸ்திதி மிகவும் கேவலமான நிலையி லிருப்பதால் பெற்றுப் பிழைத்து எழுந்திருப்பதே கொஞ்சம் சிரமமான காரியந்தான் என்றும் கூறினர். இதனால் பூமியில் ஜனனமாகும்போதே தன் தந்தையின் வெறுப்பையும் மனக் கசப்பையும் தேடிக் கொண்டுதான் பிறந்தான் சந்துரு. குழந்தையையும் ஜனகத்தையும் அழைத்து வர ஆஸ்பத்திரிக்குச் சென்ற ரங்கநாதரிடம், "......இந்தக் குழந்தை ரொம்ப அதிர்ஷ்டசாலியாக இருக்கப் போகிறான் பாருங்கள்......" என்று சிரித்துக்கொண்டே கூறியவாறு அவர்களிடம் ஒப்படைத்தாள் ஆஸ்பத்திரி நர்ஸ்.

"அதுதான் தெரிகிறதே! அம்மாவின் உடம்பைப் பாழடித்து என் தலையில் இவ்வளவு பெரிய செலவைச் சுமத்தியிருப்பதிலிருந்தே!......" என்று முணுமுணுத்தார் ரங்கநாதன்.

"அப்படிச் சொல்லாதீர்கள், — என்னவோ தீர்க்கதரிசி போல் சொல்லுகிறாள் அந்த நர்ஸ். பிறக்கும்போதே என்ன தெரிந்துவிடும்! போகப் போகப் பார்ப்போமே..." என்றாள் ஜனகம் நம்பிக்கையும் மகிழ்ச்சியும் தொனிக்கும் குரலில்.

ஜனகத்தின் உடல் தேற இரண்டு மூன்று மாதங்கள் ஆயின. அதுவரை பணத்தைப் பணமாகப் பாராமல் செலவழித்தார் ரங்கநாதன். கையில் கொஞ்சம் நஞ்சம் சேர்த்திருந்த தொகையும் அவளுடைய வைத்தியத்திற்குச் செலவழிந்து விட்டதால், அந்த வருஷம் சாருமதியின் விவாகத்தைப் பற்றிய பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டியதாய் விட்டது.

மாதங்கள் பல ஓடி விட்டன. அன்று ஊரிலிருந்து தனக்கு வந்த கடிதத்தைப் படித்துப் பார்த்த ரங்கநாதன் தலையில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார். மழை யில்லாத காரணத்தினால் நிலமெல்லாம் காய்ந்து விட்டதால் அவர் அந்த வருஷம் நிலத்திலிருந்து ஒன்றும் எதிர்பார்க்க முடியாது என்று அதில் கண்டிருந்தது.

அந்த வருஷம் பெண்ணுக்குக் கல்யாணத்தை முடித்துத் தம் தலைமேலிருக்கும் பளுவில் ஒன்றைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்று நினைத்தார். வழக்கப்படி நிலத்திலிருந்து அரிசி கிடைக்கும்; அதைக் கொண்டு சிறிது நிலையில் நிற்கலாம் என்றெல்லாம் கனவு கண்டிருந்த ரங்கநாதனுக்கு இவை எல்லாவற்றிலும் ஏமாற்றமே

ஏற்பட்டது. அது அவருடைய கடைசிக் குழந்தை சந்துருவின் மேல் திரும்பியது. அவன் பிறந்த வேளைதான், தன் குடும்பம் படும் இத்தனை அல்லல்களுக்கும் காரணம் என்று தீர்மானித்து விட்டார் அவர். எனவே ஆறு வருஷங்களுக்குப் பிறகு பிறந்த சந்துரு ஆனந்தத்தை யளிப்பதற்குப் பதில் துயரத்தையும், வெறுப்பையும்தான் அளித்தான். ஆனால் சந்துருவின்மேல் உயிரையே வைத்திருந்த ஜனகமும், ரோகிணியும் ரங்கநாதனின் மனப் போக்கைக் கண்டு உள்ளூற வருந்தினர். காக்காய் உட்காரப் பனம்பழம் விழுவதைப் போல் சந்துரு பிறப்பதற்கும், தங்கள் குடும்பத்தில் ஏற்பட ஆரம்பித்த கஷ்டங்களும் ஒன்றாகி விட்டனவே தவிர, அதற்காக அவனை நொந்துகொள்ள அவர்களுக்குக் கொஞ்சங்கூட மனம் வரவில்லை.

ரங்கநாதனுக்கோ மனசு சலித்து விட்டது. வாழ்க்கையின்மீதே சொல்ல முடியாத ஒரு கசப் பேற்பட்டது. தன்னுடைய ஏழ்மை ஸ்திதியில் இத்தனை குழந்தைகளையும் எப்படிக் காப்பாற்றிக் கரை சேர்க்கப் போகிறோம் என்று கலங்கினார் அவர். எதிலும் உற்சாகமோ தெம்போ இன்றி ஏதோ யந்திரம் போல் இயங்கி வந்தார் அவர்.

அன்று காலை "அம்மா தலை, உடம்பு எல்லாம் வலிக்கிறது" என்று சிணுங்கிக் கொண்டே படுக்கையை விட்டு எழுந்தான் சந்துரு. திகிலுடன் அவன் கன்னத்தில் கையை வைத்துப் பார்த்தாள் ஜனகம். உடம்பு கணகண வென்று அனல் அடித்துக்கொண் டிருந்தது. சந்துருவை வாரி அணைத்து எடுத்துக்கொண்டு தன் கணவரின் அறைக்கு ஓடினாள் அவள். "குழந்தைக்கு உடம்பு நெருப்பாய்க் காய்கிறது. சீக்கிரம் டாக்டரிடம் எடுத்துப் போங்கள்!" என்றாள்.

"அது ஒரு செலவுதான் இப்போ பாக்கியாக இருந்தது" என்று மிகுந்த துயரத்துடன் கூறிய ரங்கநாதன் சந்துருவை அழைத்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றார்.

அன்று இரவு சந்துருவுக்கு உடம்பு ரொம்ப அதிகமாக இருந்தது. அன்ன ஆகாரமின்றிக் கண்ணைக்கூடத் திறக்காமல் படுத்திருந்த அவனருகிலேயே கண்ணீர் வடித்தவாறு உட்கார்ந்திருந்தனர், ஜனகமும், சாருமதியும் வீட்டில். ஒருவருக்கும் சாப்பிடக்கூடத் தோன்றவில்லை.

மறுநாள் காலை டாக்டர் கொடுத்த மருந்தின் வேகமோ ஜனகத்தின் பிரார்த்தனையின் பலனோ சந்துரு மெல்லக் கண்ணைத் திறந்தான். "அப்பா! இங்கே வாயேன்!" என்று ஈனஸ்வரத்தில் அழைத்தான் அவன். ரங்கநாதன் அவன் பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டார்.

"இன்னிக்கு நீ ஆபீசுக்குப் போக வேண்டாம், அப்பா! என் பக்கத்திலேயே இரு!" என்றான்.

"அம்மா அக்கா வெல்லாம்தான் இருக்காளே! நான் ஆபீசுக்குப் போனால் என்னடா!"

"உம்..." என்று சிணுங்க ஆரம்பித்த சந்துரு தன்னுடைய கையை நீட்டி ரங்கநாதனின் கையை மிகவும் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டான்.

"நீ இன்னிக்கு ஆபீசுக்குப் போக வேண்டாம், அப்பா! என் பக்கத்திலேயேதான் இருக்கணும்!" என்று சொல்லி வாய் விட்டு 'ஓ'வென்று அழ ஆரம்பித்து விட்டான் அவன்.

"இன்னிக்கு ஒரு நாள் மட்டும் ஆபீஸுக்கு லீவு எழுதிப் போட்டுடுங்கோ! குழந்தைக்கு உடம்பு சரியில்லாம இருக்கச்சே நீங்க போனீர்களானால் உடம்பு அதிகமாகிவிடும். அப்பா ஆபீஸுக்குப் போக மாட்டார்டா! உன் பக்கத்திலேயே இருப்பார்" என்று அவனைச் சமாதானப் படுத்தி அவன் கண்களைத் துடைத்தாள் ஜனகம்.

ரங்கநாதன் கட்டிலில் சந்துருவின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார். அவர் கையைப் பிடித்திருந்த பிடியைத் தளர்த்தாமலேயே தூங்க ஆரம்பித்தான் சந்துரு.

"அப்பா!" என்று அழைத்துக் கொண்டே திடுக்கிட்டுக் கண்ணை விழித்துப் பார்த்தான் சந்துரு.

"என்னடா, சந்துரு!"

"நான் தூங்கின அப்புறம் என்னை ஏமாத்திட்டு ஆபீஸுக்குப் போயிட்டியோன்னு பார்த்தேன்!"

ரங்கநாதனின் நெஞ்சை ஏதோ ஒரு பாரம் அழுத்தியது. கண்களில் பொங்கிய கண்ணீரைத் துண்டினால் துடைத்துக் கொண்டே அவர், "நான் போக மாட்டேண்டா கண்ணு! நீ தூங்கு!" என்று கரகரத்த குரலில் கூறினார்.

அன்று முழுவதும் சந்துருவை விட்டு அப்பால் நகராமல் அவன் பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டிருந்தார் ரங்கநாதன்.

மறு நாள் காலை. மணி ஒன்பது.

"அப்பா!...அப்பா!..." என்று கத்திக் கொண்டே கையில் ஒரு கவருடன் ஓடி வந்தான் ரங்கநாதனின் மூத்த பிள்ளை ஸ்ரீதரன். கவரைக் கையில் வாங்கிக் கிழித்துக் கடிதத்தை எடுத்துப் பரபரப்புடன் படிக்க ஆரம்பித்தார் ரங்கநாதன்.

"என் அன்புக்குரிய அண்ணாவுக்கு,

நமஸ்காரம். உனக்கும் எனக்கும் தொடர்பு விட்டுப் போய் எவ்வளவோ வருஷங்களுக்குப் பிறகு என்னுடைய பெயரை உங்களுக்கு ஞாபகப் படுத்த வேண்டி யிருக்கிறது. விவாகமானவுடன் நல்லதொரு நிலைமைக்கு வந்து விட்டோம் என்ற மமதையில் ஆதியில் எனக்காக எவ்வளவோ பாடு பட்ட உங்களை நான் இவ்வளவு நாட்கள் மதிக்காமல் மறந்திருந்தேன். அதன் பலனைப் பிறகுதான் உணர்ந்து கொண்டேன். சீரும் செல்வாக்குமாய் எவ்வளவோ சந்தோஷமாக இருந்த போதிலும் எங்கள் இல்வாழ்க்கையைச் சோபிக்கச் செய்ய ஒரு குழந்தை இல்லையே என்பதுதான் எங்களுக்குத் தீராத ஒரு குறையாக இருந்தது. அந்தக்




குறைக்கு நிவர்த்தி ஏற்படாமலேயே என் கணவர் ஒரு நாள் என்னை நிர்க்கதியாக்கி விட்டுப் போய் விட்டார். அப்போதிலிருந்து தான் எனக்கு உற்றார் உறவினர் எல்லாமாக இருந்து ஆதியில் என்னைக் காப்பாற்றிய உங்களை அவமதித்ததின் பலனைத் தெரிந்து கொண்டேன். பணம் ஒன்று மட்டும் இருந்துவிட்டால் போதும், மற்றவை பற்றி அக்கறை இல்லை என்ற எண்ணம் ஊறிக் கிடந்த என் உள்ளம், அப்படிப்பட்ட பணத்தினாலும் விலைக்கு வாங்க முடியாத அற்புத வஸ்து ஒன்று இருக்கிறது, அதுதான் மனச்சாந்தி என்று உணர்ந்து கொண்டது. குழந்தை யில்லாத என் சொத்தை அனுபவிக்க நேர் பங்காளிகள் இராதபடியால் என் புக்ககத்தார் அதை எடுத்துக் கொள்ளக் கழுகுக் கண்களோடு காத்துக் கொண்டிருக்கின்றனர். இந்த ஏக்கமே என்னைப் படுக்க வைத்து விட்டது. அதனால் மூச்சு இருக்கும்போதே ஏராளமான என் சொத்து சுதந்திரங்கள் உங்களுக்குச் சேரும்படியாக உயில் ஒன்று எழுதி வைத்து விட்டேன். நான் இனி அதிக நாள் உயிரோடு இருக்கமாட்டேன். மரணப் படுக்கையில் மனம் கசிந்து மன்னிப்புக் கோரும் உங்கள் சகோதரியை மனப்பூர்வமாக மன்னித்து விடுங்கள்.

லோகா."

"லோகா!" என்று வாய்விட்டுப் பலமாகக் கத்திவிட்டார் ரங்கநாதன்.

அதற்குள் உள்ளிருந்து ஓடிவந்த ஜனகம் அவர் கையிலிருந்த கடிதத்தை வாங்கிப் பரபரப்புடன் படித்தாள்.

"......இது விஷயமாக நமக்கு வருத்தமொரு புறம் இருப்பினும் நம் ஏழ்மை நிலையில் உங்கள் சகோதரியின் சொத்து சுதந்திரங்களெல்லாம் நமக்குச் சேர்ந்து விட்டது என்பது நாம் எதிர் பாராமல் நமக்குக் கிடைத்த அதிர்ஷ்டம்தானே! சந்துரு பிறந்ததிலிருந்து ஒரேயடியாகத் தூரதிர்ஷ்டம் அடிக்கிறது என்று சொன்னீர்களே! இப்பொழுது பார்த்தீர்களா! இவ்வளவு பெரிய பாக்கியத்தை யளித்த அவன் அதிர்ஷ்டக் குழந்தைதான்" என்றாள் ஜனகம் சந்தோஷ மிகுதியால்.



"என்ன ஐயா இது? இவ்வளவு நாழியாக சள, சளவென்று பேசினீர்கள்! இப்பொழுது கட, முட வென்று கண்ட பாக்கைக் கடித்துக்கொண்டு படத்தைப் பார்க்க விடமாட்டிங்கிறீர்! 'அசோகா' பாக்காயாகிலும் போட்டுக் கொள்ளக் கூடாதா? கடமுடா என்று இல்லாமல் வாய்க்குச் சொகுசா இருக்குமே!"

* * *

தட தடவென்று யாரோ உள்ளே ஓடிவரும் ஓசை கேட்டு எல்லோரும் திரும்பிப் பார்த்தனர். கையில் தினசரித்தாள் ஒன்றுடன் உள்ளே ஓடி வந்த ரங்கநாதனின் நண்பர் வேதாசலம் ரங்கநாதனை வியப்புடன் பார்த்தவாறு நின்றுவிட்டார். விஷயம் விளங்காமல் விழித்த ரங்கநாதனிடம் "ஸார்! நீங்கள் நேற்று ஆபீசுக்குப் போகவில்லையா!" என்று பரபரப்புடன் கேட்டார்.

"என் கடைசிக் குழந்தைக்கு உடம்பு சரியில்லை. அதனால்தான் நான் நேற்றுப் போகவில்லை" என்றார் ரங்கநாதன்.

"நீங்கள் பிழைத்தீர்கள், ஸார்! இதோ பாருங்கள்!" என்று அன்றைய தினசரியில் கொட்டை எழுத்துக்களில் பிரசுரமாகி யிருந்த ஒரு செய்தியைக் காண்பித்தார் அவர்.

அந்தச் செய்தியைக் கொஞ்சம் உரக்கப் படித்தார் ரங்கநாதன்:

"நேற்று மாலை, சற்றும் எதிர் பாராதவிதமாக திடீரென்று 'ரமேஷ் அண்டு கம்பெனி'யின் மேல் தளம் இடிந்து சரிந்து அதில் அச்சமயம் வேலை செய்து கொண்டிருந்த உத்தியோகஸ்தர்கள் அனைவருக்கும் பேராபத்தை விளைவித்து விட்டது. சிலர் குற்றுயிராய், பலத்த காயங்களுடன் சிகிச்சை பெற எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றனர். ஏராளமான உயிர்ச் சேதமும் பொருள் சேதமும் ஏற்பட்டுள்ளன!"

"ஆ!" என்று வாய்விட்டலறிய ரங்கநாதனின் கையிலிருந்த தினசரித்தாள் கீழே நழுவியது.

"ஐயோ! நம் சந்துரு ஆபீஸ் போக வேண்டாம்; தன் பக்கத்திலேயே இருக்க வேண்டுமென்று சொல்லி உங்களைத் தடுக்கத்தானே நேற்று நீங்கள் வீட்டிலேயே நின்று விட்டீர்கள். இல்லாவிட்டால் உங்கள் கதியும், எங்கள் கதியும் என்னவாகியிருக்கும்! பகவான்தான் உங்களைக் காப்பாற்றி எங்களுடைய வயிற்றில் பால் வார்த்தார். பத்திரிகையில் இந்தச் செய்தியைப் படிக்கும்போதே கேட்கப் பயமா யிருக்கிறதே! விபத்தில் அகப்பட்டுக் கொண்டவர்கள் என்ன கதிக்கு ஆளாகியிருப்பார்கள்! சந்துரு, என் கண்ணே!" என்று கட்டிலருகில் ஓடினாள் ஜனகம்.

வியப்பாலும் துயரத்தாலும் சிலையாய் உட்கார்ந்திருந்த ரங்கநாதன், "சந்துரு! சந்துரு! இவ்வளவு நாட்களாக வறுமையின் கொடுமை என் கண்முன் திரையாய் விழுந்து உன்மேலிருந்த பாசத்தை மறைத்துக் கொண்டிருந்தது. என் குழந்தை என்றும் பாராமல் உன்னை நான் எவ்வளவு அலட்சியப்படுத்தி யிருக்கிறேன்" என்று சந்துருவை அணைத்துக் கொண்டு விம்மிய அவர், தம் கண்களிலிருந்து பெருகிய கண்ணீரால் அவன் படுக்கையை நனைத்தார்.

"அழாதே அப்பா!" என்று அவ்வளவு ஜுரத்திலும் நடுங்கும் தன் சின்னஞ் சிறு கைகளால் தந்தையின் கண்ணீரைத் துடைத்தான் சந்துரு.



ஏன் கிப்ஸ்
உபயோகிக்கும் குழந்தைகள்
அதிருஷ்டமுடையவர்கள்?
அதிருஷ்டமுடை-
யவர்கள்
ஏனென்றால்
அவர்களுடைய
பெற்றோர்கள் கிப்ஸ்
டென்டிபிரிஸ் வாங்குகிறார்கள்!
அதிருஷ்டமுடை-
யவர்கள்
ஏனென்றால்
அவர்கள் அதன்
சுவையை
அனுபவிக்கிறார்கள்!
அதிருஷ்டமுடையவர்கள்
ஏனென்றால்
கிப்ஸ் டென்டிபிரிஸ்
பற்களை வெண்மை
யாகவும் ஈறுகளை
ஆரோக்கியமாகவும்
இருக்கச்செய்கிறது!
நீலம்,
சிவப்பு,
பச்சை
டப்பிகளில்
Gibbs
கிப்ஸ் டென்டிபிரிஸ்
பற்களுக்கு சீரிய குணமளிக்கிறது—குறைந்த செலவில்!
GD. 33-50 TM
டி. அன்ட் டபிள்யூ. கிப்ஸ் லிட்., லண்டனுக்காக இந்தியாவில் தயாரித்தது

# பலஹீனமாக இருக்கிறீர்களா?



## ஆல்போ-ஸாங்

## உட்கொண்டு திடமடையுங்கள்



மூன்று விதமான குணமளிக்கும் ஓர் அற்புத சஞ்சீவி

- ரத்த விருத்தி செய்கிறது
- உடலுக்கு வலுவூட்டுகிறது
- சரீர ஜீரண சக்தி பயிக்கிறது

ஆல்போ-ஸாங் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் தினசரி ஆகாரத்திற்கு ஓர் சிறந்த சேர்க்கை.



PRICE
Rs. 1½-
" 3/-
" 7/-

**J. & J. DeChane**
RESIDENCY ROAD.
HYDERABAD-DECCAN

# தி யுனைடெட் கமர்ஷியல் பாங்க் லிட்.,

தலைமை ஆபீஸ்: கல்கத்தா.

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 2 கோடிகள்
ரிசர்வ் நிதி
ரூ. 75 லக்ஷங்கள்

வெளிநாட்டு பிராஞ்ச் ஆபீஸ்கள்:
பாகிஸ்தானில்:
சிட்டகாங், கராச்சி.
பர்மாவில்:
ரங்கூன், மோல்மீன், அக்யாப் மாண்டலே.
மலேயாவில்:
சிங்கப்பூர், பெனாங்.
பாண்டிச்சேரியிலும் ஹாங்காங்கிலும் கூட ஆபீஸ்கள் உண்டு.
ஏஜெண்டுகள்:
உலகமெங்கும்—
ஐரோப்பா, அமெரிக்கா, ஆசியா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா.
எல்லாவித பாங்க் அலுவல்களையும் செய்கிறது.

பி. டி. தாகூர்,
ஜெனரல் மானேஜர்

ASP UC 3




பரிசுக் கதை: **எரிக் ரே, பிரிட்டன்** மொழி பெயர்ப்பு: **வாஞ்சி**

**தூ**க்கத்திலிருந்து அவன் எழுந்திருந்த போது, சூரியோதயம் ஆகிவிட்டது. சூரிய கிரணங்கள் சுள்ளென்று அவன்மீது விழுந்ததால் தான் அவன் தூக்கம் கலைந்து கண்களை விழித்துக் கொண்டான்.

காலை ஏழு மணிக்கே சூரிய வெப்பத்தைத் தாங்க முடியவில்லை. ஏனெனில் அது மரம் மட்டையற்ற பாலை வனம்.

தலையிலும் கழுத்திலும் உடைகளிலும் படிந்திருந்த மணலைத் தட்டிக் கொண்டான்; அவிழ்ந்து வைத்திருந்த பெல்டை இடுப்பில் இறுகக் கட்டிக் கொண்டான்.

கடலுக்குள் மூழ்கும் தருவாயில் இருப்பவன் தனக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்ற நம்பிக்கையுடன் சிறு துரும்பைப் பிடித்துக் கொள்வான் என்று சொல்லுவது உண்டு. அது போலவே மணல் சமுத்திரத்திலிருந்தும் சகிக்க முடியாத வெய்யிலிலிருந்தும் தனக்குப் பாதுகாப்பு அளிக்கும் என்ற நம்பிக்கையுடன் அவன் தன் கைக் குட்டையை எடுத்துக் கழுத்தின் பின் புறத்தில் போட்டுக் கொண்டான். கரை காணாத மணல் சமுத்திரத்தைக் கடப்பதற்காக நடக்கத் தொடங்கினான்.

இன்னும் நாற்பத்தெட்டு மணி நேரத்திலோ, அல்லது அதற்கு முன்போ, தான் இறக்கப் போவது தொண்ணூற்றெண்பது சத விகிதம் நிச்சயம் என்பது அவனுக்குத் தெரியும். அதற்காக அவன் இருந்த இடத்திலேயே படுத்துக் கொண்டிருக்க விரும்பவில்லை. உட்கார்ந்த வண்ணம் சாவதைக் காட்டிலும் நடந்து கொண்டிருக்கையில் இறப்பது மேல் என்று அவன் மனம் எண்ணியது!

மேக வரிசைகளின் அபூர்வமான தோற்றம் பாலைவன மணல் வரிசையுடன் போட்டி போடுவது போல் இருந்தது. அந்த வரிசைகளிடையே தோன்றிய பலவிதமான வர்ண ஜாலங்கள் பார்ப்பவர்களின் மனத்தைப் பரவசப் படுத்துவதாக இருந்தன. நாழிகை ஆக ஆக மேற்படி வர்ணங்கள் மறைந்து வந்தன. கடைசியில் மேகங்கள் எல்லாமே மறைந்து, வானம், பாலைவனத்துக்குக் களங்கமற்ற நீல விதானமாகக் காட்சி யளித்தது.

அவன், சூரியன் உதித்த திசைக்கு நேராக நடந்து சென்றான். அங்கு திக்குத் திசையை எப்படிக் கண்டு பிடிப்பது? எனவே தினந்தோறும் எழுந்ததும் சூரியன் எந்தத் திசையில் உதிக்கின்றதோ, அந்தத் திசையை நோக்கி நேராகச் சென்று வந்தான்.

* * *

**அ**வன் மேற்படி யாத்திரையைத் தொடங்கி இரண்டு நாட்கள் ஆகிவிட்டன.

இரண்டு தினங்களுக்கு முன் பாலைவனத்தில் அவன் உள்பட ஐந்து பேர்கள் இருந்தனர். இப்போது அவன் மாத்திரம் தனியாகப் பாலை வனத்தில் நடந்து சென்று கொண்டிருந்தான்.

மேற்படி ஐந்து பேரும் விமானத்தில் திருட்டுத் தனமாக வட ஆப்பிரிக்காவுக்கு ஆயுத வகைகளை ஏற்றிக் கொண்டு சென்றனர். துரதிர்ஷ்ட வசமாக அவர்கள் சென்ற

விமானம் நடு வழியில் பாலை வனத்தின் மத்தியில் இறங்கும்படி நேர்ந்து விட்டது.

எந்தத் திசையை நோக்கிச் சென்றாலும் இருநூறு மைல் தூரம் பாலை வனத்தைக் கடந்து செல்ல வேண்டும் என்று விமானி கணக்குப் பார்த்துக் கூறினார். பாலை வனத்தில் அவ்வளவு தூரம் நடந்து செல்லுவது அசாத்தியமான காரியம்.

அந்த நிலைமையில் தாங்கள் மேற்கொண்டு என்ன செய்வது என்பது பற்றி அவர்கள் மந்திராலோசனை செய்யலாயினர்.

ஒவ்வொருவர் ஒவ்வொருவிதமான யோசனை கூறினர். விமானி அதில் ஒன்றையும் அங்கீகரிக்கவில்லை. பாலைவனத்தைப் பற்றித் தங்களைக் காட்டிலும் அதிக விஷயம் தெரிந்த விமானியின் யோசனைக்கு விரோதமாக அவர்கள் எதுவும் செய்ய விரும்பவில்லை.

அவர்களை விமானங்கள் தேடி வரக்கூடும் என்ற நம்பிக்கைக்கும் இடமில்லை. ஏனெனில் அவர்கள் யாருக்கும் தெரியாமல் திருட்டுத்தனமாகப் புறப்பட்டு வந்தவர்கள். எனவே, அவர்களை யாரும் தேடி வரப்போவதில்லை. அந்த நிலைமையில் உயிர் தப்புவதற்கு வழி ஏதாவது உண்டா?

"யாதொரு வழியும் இல்லை" என்றார் விமானி.

"தற்செயலாக இந்த வழியில் செல்லும் விமானம் ஏதாவது நம்மைக் கண்டு பிடித்தாலன்றி நாம் உயிர் தப்புவதற்கு வழி இல்லை. பாலை வனத்தைக் கடக்கும் முயற்சியில் சகிக்க முடியாத கஷ்டத்துக்கு உள்ளாகி உயிர் துறப்பதைக் காட்டிலும், இந்த விமானத்தின் நிழலில் உட்கார்ந்து கொண்டு அமைதியாக இறப்பது மேல்."

இவ்விதம் கூறி முடித்த விமானியை மற்ற நால்வரும் வெறிக்கப் பார்த்தனர். பார்த்து என்ன செய்வது? அந்த நிலையில் விமானியின் யோசனையை விடச் சிறந்த யோசனை எதுவும் இருப்பதாகத் தோன்றவில்லை.

அவர்களிடையே சில நிமிஷங்கள் வரையில் மௌனம் நிலவியது. நிர்மானுஷ்யமான பாலை வனத்தில் வெய்யிலில் வாடி, பட்டினி கிடந்து இறக்கப் போகிறோம் என்ற எண்ணம் ஒவ்வொருவருடைய மனத்திலும் பல்வேறு சிந்தனைகளை எழுப்பின.

"இங்கிருந்து கடற்கரை எத்தனை மைல் தூரம் இருக்கும்?" என்று அவர்களில் ஒருவன் விமானியைப் பார்த்துக் கேட்டான்.

அந்தக் கேள்வி அர்த்தமற்ற கேள்வி யாதலால், விமானி கேள்வி கேட்டவனைப் பரிதாபகரமாகப் பார்த்தார்.

"இங்கிருந்து கடற்கரை குறைந்த பட்சம் நூற்று அறுபது மைல்கள் இருக்கும்...... இந்தக் கேள்வி எதற்காகக் கேட்டாய்? இங்கிருந்து அவ்வளவு தூரம் நடந்து செல்லுவது மனிதனால் சாத்தியமான காரியமில்லை. அப்படியே சென்றாலும் அங்கு கிராமமோ, நகரமோ எதுவுமில்லை. அவ் வழியாகக் கப்பல்கள் செல்லுவதும் அபூர்வம். அந்த வழியாகப் போகும் இரண்டொரு கப்பல்கள் கரையிலிருந்து வெகு தூரத்துக்கு அப்பால் செல்லுகின்றன" என்றார் விமானி.

விமானி கூறியது அவன் செவிகளில் ஏறவில்லை. அதற்கு அவன் குறிப்பிட்ட காரணம் யாரும் ஒத்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

"நண்பர்கள் எல்லோரும் இறப்பதை என் கண்களால் பார்த்துக்கொண்டே நான் இறக்க விரும்பவில்லை. பிறர் கஷ்டத்தைக் கண்களால் பார்க்காமல் தன்னந் தனியனாக மரணம் அடைவதே மேல் என்பது என் அபிப்பிராயம்" என்றான் அவன்.

விமானியும் அவனைத் தடுக்கவில்லை. விமானத்தில் இருந்த உணவுச் சாதனங்களில் ஐந்தில் ஒரு பங்கை விமானி அவனுக்குப் பகிர்ந்து கொடுத்தார்.

அவன் புறப்பட்டான். மற்றவர்கள் அவனையே பார்த்துக் கொண்டிருந்தனர். அவன் வெகு தூரம் சென்று திரும்பிப் பார்த்தான். நண்பர்கள் துணியை வீசிச் சைகை காட்டியது அவன் கண்களுக்குத் தெரிந்தது.

தான் தனியாகப் புறப்பட்டு வந்ததைக் குறித்து அவன் சிறிதும் வருந்தவில்லை. விமானம் இறங்கிய இடத்தில் மற்றவர்களுடன் தங்கினாலும், தன்னுடன்கூட யாராவது வந்தாலும் அவன் பேச வேண்டியிருக்கும். பேசுவதால் தன் சக்தி மேலும் குறைந்து விடும். தவிர, பேசிக்கொண்டே இறப்பதா? இந்த எண்ணத்தை அவனால் சகிக்கவே முடியவில்லை.

* * *

அவன் புறப்பட்டு இரண்டு நாட்கள் ஆகி விட்டன.

அவனிடம் இருந்த உணவு தீர்ந்துவிட்டது. தண்ணீர் இல்லை. சீதோஷ்ண நிலையோ படு மோசமாக இருந்தது. பகலில் அவன் உடல் பற்றி எரிவது போல் இருந்தது. இரவில் குளிரும் மணல் காற்றும் சகிக்க முடியவில்லை.

அவன் மிகவும் சோர்ந்து விட்டான். இன்னும் எண்பது மைல்களாவது நடந்து சென்றால்தான் பாலைவனத்தைக் கடக்க முடியும் என்று அவனுக்குத் தோன்றியது.

அப்போது அவனுக்குப் பக்க பலமாக இருந்த ஒன்றே ஒன்று அவனது பிடிவாதந்தான்!

பாலைவனத்தின் தன்மையை நன்கு அறிந்த விமானி அவனுக்கு ஒரு யோசனை கூறியிருந்தான். அதாவது பகலில் அதிகமாக நடக்கக் கூடாது; இரவில் தான் நடக்க வேண்டும் என்று சொல்லியிருந்தான்.

ஆனால் அவனோ அதற்கு நேர்மாறாக நடந்து கொண்டான். பகலில் நடந்தான்; இரவு முழுதும் ஓய்வு எடுத்துக் கொண்டான்.

பாலைவன உஷ்ணம் அவனுக்குப் புது சக்தியைக் கொடுப்பதாகக் கற்பனை செய்து

கொண்டான். பகலில் நடந்த சிரமத்துக்குப் பரிகாரமாக இரவு முழுவதும் உலகையே மறந்து தூங்கினான்.

அவன் சிறுவயதிலிருந்தே சுதந்திரத்தில் மிகவும் ஆர்வம் உள்ளவன். குடும்ப வாழ்க்கை அவனது சுதந்திரத்துக்கு முட்டுக்கட்டையாக இருப்பதாக அவனுக்குத் தோன்றியது. அவன் குடும்ப வாழ்க்கையைக் கை விட்டான். பிறகு தனது உத்தியோகம் தன் சுதந்திரத்துக்குக் குந்தமாக இருப்பதாக அவனுக்குத் தோன்றியது. எனவே, அதையும் உதறித் தள்ளினான்.

கடைசியில், கள்ளத்தனமாகச் சாமான்களைப் பிற நாடுகளுக்கு அனுப்பும் கோஷ்டியுடன் சேர்ந்து கொண்டான். அந்த வாழ்க்கை அவன் இஷ்டப்படி எக்காரியத்தையும் செய்வதற்கு அனுமதித்ததால், அது தான் அவனுக்குச் சுதந்திரம் அளிக்கும் இன்ப வாழ்க்கையாகத் தோன்றியது!

எனினும் அதிலும் ஒரு குறையிருந்தது. அதாவது அவன் அதிகாரிகளுக்குப் பயந்து கொண்டு எப்போதும் எங்காவது தலைமறைவாகவே இருக்க நேர்ந்தது.

ஆனால் இப்போது பாலை வனத்தில் அவனுக்குக் கிடைத்த சுதந்திரத்தைப் போல் இதற்கு முன் எக் காலத்திலும் கிடைத்ததில்லை. அவன் தன் இஷ்டப்படி எத்தனை மைல்கள் வேண்டுமாயினும் நடந்து செல்லலாம்! அங்கு அவனது சுதந்திரத்தில் யாரும் தலையிட முடியாது! அதிகாரிகள்கூட அவன் பேச்சுக்கு வர மாட்டார்கள்!

* * *

பாலைவனம் என்ற பெயரை அவன் அடிக்கடி கேள்விப்பட்டது உண்டு. எனினும் பாலைவனத்தில் தான் தனியாக நெடுந்தூரம் யாத்திரை செய்ய நேரும் என்று அவன் கனவிலும் எண்ணியதில்லை. பாலைவனம் எவ்வளவு கொடுமையான பிரதேசம் என்பதும் அவனுக்கு அப்பொழுது தெரியாது.

அவன் மிகுந்த உறுதியுடனிருந்தும் கூட, அவன் கால்கள் தள்ளாடின. கால்களில் பெரும் பாரம் கட்டப்பட்டிருப்பது போல் அவனுக்குத் தோன்றியது. கால்களைச் சுலபமாக எடுத்து வைக்க முடியவில்லை. தாங்க முடியாத சூரிய வெப்பமோ, ஒரு கொடிய மிருகம் தன் சதையைப் பிடுங்கித் தின்பதுபோல் அவனுக்குத் தோன்றியது. தன்னுடைய பின் கழுத்திலிருந்து ஜ்வாலை கிளம்புவது போன்ற உணர்ச்சி அவனுக்கு உண்டாயிற்று. கால்கள் கொப்பளித்து அதிலிருந்து உதிரம் கசியத் தொடங்கியது. தாங்க முடியாத தாகம் அவன் தொண்டையை அடைத்தது.

தலையுச்சிக்கு நேரே வந்த இரக்கமற்ற சூரியனை அவன் பார்த்தான். பார்க்கும் சக்தியைக் கூடத் தான் இழந்து வருவது அப்போதுதான் அவனுக்குத் தெரிந்தது.

தன்னைச் சுற்றி எங்கு பார்த்தாலும், மணலிலிருந்து கனல் அலை அலையாக வீசிக் கொண்டிருந்தது. அப்போது அவனுக்கு இந்த உலகில் சூரியன், மணல், ஆகாயத்தைத் தவிர வேறு எதுவுமே இல்லை என்று தோன்றியது.

அவனது நிழல் கிழக்குத் திசையில் நாழிக்கு நாழி நீண்டு கொண்டே சென்றது அவனுக்குச் சிறிது ஆறுதலை அளித்தது. சூரியன் அஸ்தமித்தால் அவனைத் தகிக்கும் ஜ்வாலை தணியும் அல்லவா? எனினும் மற்ற இரண்டு தினங்களில் இரவு ஓய்வு எடுத்துக் கொண்டது போல், அவன் அன்றிரவு ஓய்வு எடுத்துக் கொள்ள விரும்பவில்லை.

இனி பகலாயினும், இரவாயினும் தான் நடக்க முடியாமல் பிரக்ஞை இழந்து கீழே விழும் வரையில் நடப்பதென்று அவன் உறுதி கொண்டான்.

பாலைவனத்தின் நடுவில் ஆங்காங்கு தென்பட்ட சில கற்பாறைகள் அவனுக்கு விசித்திரமாகத் தோன்றின. சமுத்திரத்தில் சில இடங்களில் மீன்கள் மிதப்பது உண்டு. அந்த மணல் சமுத்திரத்தில் கற்பாறைகள் முளைத்திருந்தது மீன்கள் மிதப்பது போலவும் பிறகு மூழ்குவது போலவும் காணப்பட்டன!

நாழி ஆக ஆக அவனால் நிமிர்ந்து கூட நடக்க முடியவில்லை. அவன் உறுப்புகள் எல்லாம் எந்தவிநாடியிலும் அப்படியே உணர்ச்சி



யற்றுப் போய் ஸ்தம்பித்து நின்றுவிடப் போகின்றன என்று அவன் நினைத்தான்.

அவன் தேகத்தில் ஏற்பட்ட வேதனை ஒரு புறமிருக்க, அவன் மனமும் சகிக்க முடியாத வேதனைக்கு உள்ளாகியது.

அவன் மனத்தில் திடீரென்று ஒரு திகில் உண்டாகியது. கடற்கரை நூற்று அறுபது மைல் தூரம் இருக்கும் என்று விமானி கூறினர் அல்லவா? விமானத்தில் நேராகச் செல்லும் தூரத்தை அவர் குறிப்பிட்டிருக்கலாம். ஆனல், அடிக்கடி மணல் குன்றுகளைத் தாண்டிச் செல்ல வேண்டியிருப்பதால், கடற்கரை அதைப் போல் இரண்டு மடங்கு அதிக தூரம் இருந்தாலும் இருக்கலாம் என்று அவனுக்குப் பட்டது.

இதை எண்ணிப் பார்த்த போது அவன் உடல் நடுங்கியது. அவன் உடல் சோர்வும் உள்ளச் சோர்வும் மேலும் மேலும் அதிகமாயின. தான் பாலைவனத்தைக் கடக்கத் துணிந்தது, தற்கொலைக்கு ஒப்பாகும் என்ற முடிவுக்கு அவன் வந்தான்.

இனி அதையெல்லாம் எண்ணி வேதனைப் படுவதால் என்ன பலன்? எனவே, அவன் மறுபடியும் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டான். உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு நடக்கத் தொடங்கினன்.

மூன்று நாட்களாகியும் தான் தள்ளாடிக் கீழே விழாமல் நடப்பது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

எனினும் சிற்சில சமயங்களில் அவன் உணர்ச்சியற்று நடந்து சென்றுன். அப்போது அவனது கண்கள் தாளுக மூடிக் கொண்டன. உடல் வேதனையை மறந்தது. மனமும் ஸ்தம்பித்து நின்றது. கால்கள் மாத்திரம் தாளுக நடந்து சென்றன. தான் அப்படிச் செல்லுவது, உயிரற்ற ஒரு கட்டை நடந்து செல்லுவது போல் அவனுக்குத் தோன்றியது.

அவன் ஒரு சமயம் மணல் குன்று ஒன்றில் ஏறி அதன் உச்சிக்கு வந்தபோது, சுற்று முற்றும் பார்த்தான். அவன் தலை சுழன்றது. அப்படியே கீழே விழுந்து விட்டான் விழுந்த வேகத்தில் மறுபுறமாக உருண்டு உருண்டு கீழே சென்றுன்.

மேற்படி அதிர்ச்சி அவனைத் தட்டி எழுப்பியது. உணர்ச்சியற்றிருந்த அவன் உடலில் சிறிது உணர்ச்சி உண்டாயிற்று.

நடப்பதைக் காட்டிலும் உருண்டு உருண்டு சென்றது அவனுக்கு வசதியாக இருந்தது. மணல் குன்றுக இருந்தால் இறக்கத்தில் உருண்டு செல்லலாம். ஆனல் சமவெளியில் உருண்டு செல்லுவது சுலபமான காரியம் அல்லவே! அவ்விதம் செல்லுவதால் கால தாமதம் அல்லவா ஆகும்.

* * *

மீண்டும் சூரியன் மேற்குத் திசையில் மறைந்தான். தனக்கு ஓய்வு கொடுக்கும்படி அவனது கால்களும் உடலும் கெஞ்சுவது போல் அவனுக்குத் தோன்றியது. ஆனல் அவன் ஓய்வு எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. தான் சுருண்டு கீழே விழும் வரையில் தானுக ஓய்வு எடுத்துக் கொள்வதில்லை என்று அவன் திடசங்கல்பம் செய்து கொண்டான்.


தண்ணீர் இல்லாமல் அவன் தொண்டை வற்றிப் புண்ணுகியது; அவன் நாக்கு உலர்ந்து காய்ந்த சிறகைப்போல் ஆகியது.

தன்னை மரணம் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதை அவன் உணர்ந்தான். இனி எந்த விநாடியிலும் அவன் உடல் அசைவற்று, மூச்சு நின்று விடலாம். அதுவரையில், மூச்சு நிற்கும் வரையில் அவன் நடந்து செல்லத் தீர்மானித்தான்.

மறுநாள் சூரியன் மேற்குத் திசையில் மறையும்போது அவன் உயிருடன் இருந்தால், விமானி குறிப்பிட்ட நூற்று அறுபது மைல் தூரத்தை அவன் கடக்க முடியும்.

சிறிது தூரத்தில் சிறிய பாறை தெரிந்தது. எப்படியோ கஷ்டப்பட்டு அவன் அதனருகில் சென்றுன். அதன்மீது சிறிது நேரம் சாய்ந்து கொண்டிருந்தான். மனித சஞ்சாரமற்ற அந்தப் பாலைவனத்தில் மேற்படி குன்று அவனுக்குத் துணையாக நிற்பதுபோல் தோன்றியது.

சில நிமிஷ நேரம் அதன் பக்கத்தில் படுத்து இளைப்பாற விரும்பினன். அவ்விதம் படுத்தவன் நன்றுகத் தூங்கி விட்டான். மறுநாள் சூரிய வெப்பம் அவன் மீது பட்டபோதுதான் தூக்கத்திலிருந்து எழுந்திருந்தான்.



"என்னய்யா குடி முழுகிப் போச்சு? ஏன் இப்படிக் குதிக்கிறீர்!"

"ரெயிலுக்கு இரண்டு நிமிஷம் தாமதித்து வந்து விட்டேன். ரயில் போய் விட்டது."

"கேவலம் இரண்டு நிமிஷம் தாமதித்து வந்ததற்கா இப்படிக் குதிக்கிறீர்? என்னமோ இரண்டு மணி நேரம் தாமதித்து வந்தவர் மாதிரி குதிக்கிறீரே!"

அப்போது அவனது நிலை விசித்திரமானதாக இருந்தது. அவன் விழித்துக் கொண்டிருந்தும், அவனுக்குத் தான் தூங்குவது போல் தோன்றியது. தான் கனவு உலகத்தில் இருப்பதாக எண்ணினான். யந்திரத்தைப் போல் எழுந்து நடக்கத் தொடங்கினான். தாங்க முடியாத உஷ்ணம் உடலில் உள்ள உதிரத்தை உறிஞ்சுவதுபோல் தோன்றியது.

பட்டப் பகலில் அவனை இருள் சூழ்ந்து கொள்வதுபோல் இருந்தது. ஒவ்வொரு நாளாக அவனது நடையின் வேகம் குறைந்து விட்டது. அவன் அடிக்கடி தள்ளாடி நின்றான். அத்தகைய சமயங்களில் கீழே விழுவதா, அல்லது நடந்து செல்லுவதா என்பது பற்றி அவன் சிந்திப்பது போல் தோன்றியது.



"ஏண்டா பயலே! நீ, உங்கப்பா மாதிரி பெரியவனாக ஆன பிறகு என்ன செய்வாய்?"
"முதலில், இளைப்பதற்கு ஏதேனும் 'வழி தேட ஆரம்பிப்பேன்."

தினசரி குறைந்தபட்சம் நாற்பது மைல்கள் நடக்க வேண்டும் என்ற தீர்மானத்தையே அவன் அன்று மறந்து விட்டான். அப்போது இருந்த நிலையில் அவன் ஒரு நாளைக்கு நாலு மைல்கள் கூட நடக்க முடியாதோ என்று தோன்றியது.

அவனுக்கு எதிரில் காணப்பட்ட அவனது நிழல் சிற்சில சமயங்களில் மறைந்துவிட்டது. பாலைவன மணல் பலவித வர்ணங்களுடன் இருப்பதாக அவனுக்கு ஒரு பிரமை ஏற்பட்டது. இருந்தாலும் அவன் நடந்து கொண்டே இருந்தான்.

அங்கிருந்து ஒரு குன்றின்மீது ஏறும்போது அவன் பல தடவை விழுந்தான். குன்றின் உச்சியில் ஏறியதும் மறுபுறத்தில் இறங்குவதற்கு அவனுக்குச் சக்தி இல்லை. ஏற்கெனவே உருண்டு சென்றது அவனுக்கு லேசாக ஞாபகம் இருந்தது.

உடனே கீழே விழுந்தான். அவன் உடல் உருண்டு உருண்டு குன்றின் அடிவாரத்துக்கு வந்தது. பிறகு அவனால் எழுந்திருக்க முடியவில்லை. அவன் கண்கள் சுழன்றன. அவன் பிரக்ஞை இழந்தான்.

அவனுக்குத் தான் இறந்து விட்டதாகவும், தன் வாயில் யாரோ பாலைவன மணலை எடுத்துப் போடுவதாகவும் தோன்றியது. அவனால் கண்களைத் திறக்க முடியவில்லை. வாயையும் திறக்க முடியவில்லை.

அவன் முகத்தில் ஜில்லென்று தண்ணீர் பட்டதும் அவனுக்குச் சிறிது பிரக்ஞை வந்தது. அவன் மெதுவாகத் தன் மூடிய கண்களைத் திறந்தான்.

வானத்தில் ஒரு தலை மாத்திரம் தெரிவதாக அவனுக்குத் தோன்றியது. பிறகு ஒரு மனிதனின் உருவம் தெரிந்தது. அதன் பின் தன்னைச் சுற்றிப் பலர் நிற்பது அவன் கண்களுக்குப் புலப்பட்டது.

மரணம் நிச்சயம் என்று எண்ணிய அவன் ஆச்சரியகரமாக உயிர் தப்பினான். பாலைவனத்தில் இருநூறு மைல் நடந்து உயிருடன் வந்தது சாதாரணமாக மனித சாத்தியமான காரியம் அல்ல என்ற புகழுக்குப் பாத்திரமானான்.


ஆஸ்பத்திரியில் இருந்த அவனுக்குத் 'தான் செய்த பாலைவன யாத்திரை உண்மையில் ஒரு பொழுதும் நிகழ்ந்திருக்க முடியாத கனவு போல் தோன்றியது.

பாலைவனம் பலிகொண்ட அவனது கண்பர்களின் முகங்கள் அடிக்கடி அவனது கண்களெதிரில் தோன்றி மறைந்தன.



## நடன அரங்கேற்றம்

பம்பாய் இந்தியப் பண்பாட்டுச் சங்கத்தின் ஆதரவில், பாரதீய வித்யா பவனத்தில் சென்ற 7ந் தேதியன்று மாதுங்கா டாக்டர் எஸ். ஆர். ராமச்சந்திரன் அவர்களின் புதல்விகளான குமாரிகள் [illegible], [illegible] நடன அரங்கேற்றம் வெகு சிறப்பாக நடந்தேறியது. மேற்படி வைபவத்துக்கு மந்திரிகள், நீதிபதிகள், அயல் நாட்டுப் பிரதிநிதிகள் மற்றும் பல பிரமுகர்கள் விஜயம் செய்து சிறப்பித்தனர். பம்பாய் ஹைகோர்ட் நீதிபதி ஸ்ரீ டெண்டுல்கர் நடனமாடிய சிறுமிகளின் கலைத் திறமையைப் பெரிதும் பாராட்டி ஆசி கூறினார்.


பந்தோபஸ்துக்கு
பூட்டுங்கள்
டிலக்ஸ்
குட்இயர்

## 3. கடிதம் வந்தது!

லதாவுக்கு அந்தக் காட்சியைத் தன் கண்களாலேயே கண்டு ரசிக்க வேண்டும் என்று தோன்றியது. புத்தம் புதிதாகக் கல்யாணமான ஒரு தம்பதியைத் தனிமையில், இரவின் இருள் கவ்வும் மாலை வேளையில், அதுவும் அவர்களுடைய படுக்கை யறையிலேயே, பிறர் கண்களுக்குப் படாமல் ஒளிந்து மறைந்து பார்ப்ப தென்றால், அதில் உள்ள ஆசையைத் தடுக்க முடியுமா? ஆகா! அந்த ஆனந்தத்துக்கு வேறு எந்த ஆனந்தம் தான் ஈடாக முடியும்?

முற்றத்தைத் தாண்டி ஒரு ஹால் இருந்தது. அதற்கு அப்புறம் உள்ள இரண்டு அறைகள் கேசவனுடையவை. கதவு சாத்தியிருந்தது. துடிக்கும் உள்ளத்துடன் லதா கதவில் காதை வைத்துக்கொண்டு ஒட்டுக் கேட்கலானாள். ஒன்றும் சரியாகக் காதில் விழவில்லை. எனவே திரும்பி ஹாலுக்கு வந்தாள். ஆனால் இவ்வளவு சீக்கிரம் தன் ஆசை நிறைவேறாது என்று எண்ணித் தோல்வி மனப்பான்மையுடன் திரும்பிவிட லதா தயாராயில்லை. அவளுக்கு அந்த வீட்டில் ஒவ்வொரு மூலை-முடுக்கும் இண்டு-இடுக்கும் தெரியும். அப்படியிருக்கும் பொழுது அவள் முயற்சி செய்து பார்க்காமல் எப்படி இருப்பாள்?

ஹாலுக்குப் பின்னால் ஒரு குறுகிய பாதை இருந்தது. வீட்டுக்கு உபயோகமில்லாத பொருள்களும் தட்டு-முட்டுச் சாமான்களும் அதில் போடப்பட்டிருந்தன. அந்தப் பாதைக்குக் கோடியில் இன்னொரு அறை இருந்தது. அதைத்தான் காந்தா தனது சிங்கார விடுதியாக்கிக் கொண்டிருந்தாள். மெதுவாகக் கால்களை ஓசைப் படாமல் வைத்து லதா அந்த அறையை அடைந்து விட்டாள். அப்பொழுது அவளுக்கே தன் இருதயத்தின் துடிப்பு காதில் விழுந்தது. நாற்புறமும் நல்ல அமைதி நிலவியிருந்தது. அறையில் நுழைந்ததும், அங்கிருந்த சிங்கார மேஜை மீது நிழல் விழுந்தது. லதா திடுக்கிட்டுத் திரும்பினாள். பிறகு பக்கத்து அறையைக் கூர்ந்து கவனித்தாள்.




ஆசிரியர் : கமல்ஜோஷி

மொழிபெயர்ப்பு : ரா. வீ.

இரண்டு அறைகளுக்கும் மத்தியில் ஒரு திரை தொங்கிக் கொண்டிருந்தது. யாரும் அந்தப் பக்கம் வரமாட்டார்கள் என்ற நம்பிக்கையில் அறையின் கதவு பாதி திறந்தும், பாதி திறக்காததுமாக ஒருக்களிக்கப் பட்டிருந்தது. சிங்கார மேஜை அறையின் ஒரு மூலையில் இருந்தது. அதற்கு எதிர்த்தாற் போலிருந்த நாற்காலியில் உட்கார்ந்தால், பக்கத்து அறையில் இருக்கும் பொருள்களெல்லாம் நன்றாகத் தெரியும். ஆனால் பாதிக் கதவு ஒருக்களிக்கப்பட்டிருந்ததால், அந்த அறையில் உட்கார்ந்திருப்பவர்களை யாரும் பார்க்க முடியாது. அந்த அறை இருட்டாக இருந்ததும் லதாவுக்குச் சௌகரியமாகவே அமைந்தது.

திடீரென்று அந்த அறையிலிருந்து 'கல கல' வென்று சிரிக்கும் சப்தம் வரவே, லதா விழிப்புற்றாள். தன் கண்களை அகலவிரித்து அந்த அறையைப் பார்க்கலானாள். கட்டிலில் காலை நீட்டியவாறு காந்தா உட்கார்ந்திருந்தாள். அவள் மடியில் தலையை வைத்துக் கொண்டு கேசவன் படுத்திருந்தான்.

"சரியாகப் படுத்துக் கொண்டால் தானே நான் தலையைப் பிடிப்பதற்கு?" என்று கேட்டுக் கொண்டிருந்தாள் காந்தா. அவள் குரல் லதாவின் காதில் மிகத் தெளிவாக விழுந்து கொண்டிருந்தது.

கேசவன் புரண்டு படுத்துக் கொண்டே, "நீ ஒன்றும் தலையைப் பிடிக்க வேண்டாம். இங்கே வா" என்றான். பிறகு சட்டென்று தன் இரு கைகளையும் நீட்டிக் காந்தாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டான். அடுத்த கணம் அவள் முகத்தில் ஒரு முத்தமும் கொடுத்து விட்டான். காந்தா 'வேண்டாம், வேண்டாம்' என்று தடுத்துக் கொண்டே, முகத்தைக் குனிந்து கொடுத்து அவன் செய்கைக்கு ஈடு கொடுத்தாள். பிறகு, "ஆமாம், தலையை வலிக்கிறது என்று நீங்கள் வெறும் பாசாங்கு தானே செய்தீர்கள்? உங்கள் குணம் எனக்குத் தெரியாதா?" என்றாள் குறும்பாக. தனது இந்தக் கேள்வி அவளுக்கு அடக்க மாட்டாத சிரிப்பை வரவழைத்தது. எனவே, தன்னையும் மீறிக் கலகல வென்று கைகொட்டி

நகைத்து விட்டாள். சிங்கார மேஜைக் கெதிரே உட்கார்ந்திருந்த லதாவின் உடல் ஒரு நிமிஷத்துக்குக் கட்டை போலாகிவிட்டது. அப்புறம் என்ன? அதிசயமும் ஆச்சரியமும் தவழ அவள் கண்கள் கேசவனும் காந்தாவும் இருந்த அறையை மறுபடியும் ஆவலுடன் ஊடுருவி நோக்கின.

மேஜையில் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. காந்தா அதை ஊதி அணைக்க எண்ணி எழுந்திருந்தாள். அதைக் கண்ட கேசவன் எல்லை மீறிய காதல் உணர்ச்சியின் காரணமாகத் தழுதழுத்துப் போன குரலில், "விளக்கு எரிந்தால் எரிந்துவிட்டுப் போகட்டுமே! அணைப்பானேன்?" என்றான்.

இதென்ன கூத்து? இதைக் கேட்டதும் லதாவின் மூச்சு வேகம் அதிகரித்து விட்டதா அல்லது மூச்சுத்தான் முட்டிப் போய் நின்று விட்டதா? மேஜையின்மீது என்ன வைத்திருந்ததோ, தெரியாது. லதா தறிகெட்டுப் போய், ஒன்றும் புரியாமல் மேஜையைப் பிடித்துக் கொள்ளக் கையை நீட்டினாள். அவ்வளவுதான்! மேஜைமீதிருந்த ஏதோ ஒரு பொருள் கைபட்டு உருண்டு கல கலவென்ற ஓசையுடன் கீழே விழுந்து விட்டது!

அப்புறம் என்ன நடந்தது என்பது அவளுக்கு அவ்வளவாக நினைவில்லை. லதாவுக்குத் தலையைப் பம்பரமாகச் சுற்றியது. அந்தச் சத்தம் வந்த அடுத்த சில கணங்களுக்கெல்லாம் அறையின் பாதி மூடியிருந்த கதவு திறந்து கொண்டது. அது லதாவுக்கு நன்றாக நினைவிருந்தது. கேசவன் காந்தா இருவரும் சப்தம் கேட்டதும் பரக்கப் பரக்க எழுந்து அவள் இருந்த அறைக்கு ஓடி வந்தார்கள். சீர்குலைந்த தன் ஆடைகளைச் சீர் செய்தவாறே காந்தா தான் முதலில் உள்ளே நுழைந்தாள். அவளுக்குப் பின்னால் கையில் விளக்கைத் தூக்கிக் கொண்டு கேசவன் வந்தான்.

"யார் அது? யார் அது?" என்று மூச்சு வாங்கக் கேட்டாள் காந்தா. பரக்கப் பரக்க ஓடிவந்த சிரமம் அவளுக்கு. லதாவுக்குக் கேசவனையும் காந்தாவையும் பார்த்ததும் உயிரே போய் விட்டால் தேவலை போலிருந்தது. அவள் அவ்வளவு பயந்து செத்துக் கொண்டிருந்தாள். அவளுக்குப் பேச நா எழவில்லை. மிகவும் சிரமப்பட்டுத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு தடுமாறும் குரலில், "நான்தான், மன்னி!" என்றாள்.

பயம் அவளுடைய குரலில் பெருத்த மாறுதலை உண்டு பண்ணியிருந்தது. எனவே, அவளுடைய பேச்சுக் குரலைக் கொண்டு காந்தாவினாலோ அல்லது கேசவனாலோ யார் என்று தெளிவாகக் கண்டு பிடிக்க முடியவில்லை. எனவே, காந்தா, "நான் என்றால் யார்?" என்று சிறிது அதட்டிக் கேட்டாள்.

"நான்தான், லதா!" என்றாள் லதா. அதற்குள் கேசவன் அவளுடைய முகத்துக் கருகில் விளக்கைக் கொண்டு போனான். பிறகு, "நீயா? ஏன், லதா! இந்த நேரத்தில் இங்கே எங்கே வந்தாய்?" என்று வியப்புடன் கேட்டான்.

என்ன சாக்குச் சொல்வதென்று லதாவுக்கு விளங்கவில்லை. அவள் என்ன சொல்லலாம் என்று மூளையைச் செலவிட்டு யோசனை செய்வதற்குள்ளாகவே, காந்தா கடுமையான குரலில், "உங்களுக்குக் கண் இல்லையா, என்ன? அவளைப் போய் இந்த நேரத்தில் எங்கே வந்தாய் என்று கேட்டுக் கொண்டிருக்கிறீர்களே! அவள் கையில் என்ன இருக்கிறது, பாருங்கள்! மோதிரமும் வளையலும் தெரியவில்லையா?" என்றாள் தன் புடவைத் தலைப்பைச் சரியாகக் கட்டிக் கொண்டே. பிறகு லதாவை அப்படியே சுட்டெரித்து விடுபவள் போலப் பார்த்து, "ஓகோ! அப்படியா சமாசாரம்? இந்த அறைக்குப் பின்னாலிருந்து வரும் வழியும் உனக்குத் தெரியுமா? இன்றைக்குத் தான் உன்னைப் புரிந்து கொண்டேன். எவ்வளவு நாட்களாக இந்தக் காரியத்தில் ஈடுபட்டிருக்கிறாய்? நான் இன்று சாயந்திரம் முகம் கழுவும் பொழுது இவற்றைக் கழற்றிப் பவுடர் பெட்டியில் வைத்தேன். எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. அது உனக்கு எப்படித் தெரிந்தது? ஒருவேளை நான் வைத்தபொழுது



நீ ஒளிந்து ஒளிந்து நின்று பார்த்துக் கொண்டிருந்தாயோ?'' என்று கேட்டான்.

மறுத்துச் சொல்ல லதாவுக்கு ஒன்றும் வழி புலப்படவில்லை. இருட்டில், உணர்ச்சி வசப்பட்ட அவளது கைகள் மேஜைமீது வைத்திருந்த வளையல்களை எடுத்து விஷமம் செய்து கொண்டிருந்தன. இது உண்மை. இதில் சிறிதும் சந்தேகம் இல்லை. அதற்கு அத்தாட்சியாக அந்த வளையல்கள் இன்னும் அவளது திறந்த கையிலேயே இருந்தன.

காந்தாவுக்குக் கன கோபம் வந்து விட்டது. ''சீ! நீயும் ஒரு பெண் மாதிரி! முளைத்து மூன்று இலை விடவில்லை. அதற்குள் உனக்கு எப்படி யெல்லாம் துளிர்த்து விட்டது? நீ இவ்வளவு மட்டமானவளாக இருப்பாய் என்று நான் கனவிலும் கருதவில்லை. வளையல்களைப் போட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று தோன்றினால் என்னைக் கேட்டால் நான் கொடுத்திருக்க மாட்டேனா? அதற்கு இப்படித் திருடவா வேண்டும்? அப்பப்பா! உன் குணம் இப்பொழுதுதான் புரிந்தது! உனக்கு இந்த வீட்டில் இவ்வளவு இடம் கொடுத்ததே தவறு. கையில் கால் காசுக்கு வக்கில்லாத வீட்டுப் பெண்தானே? உன் புத்தி இப்படித்தான் போகும்! இதில் ஆச்சரியப் படுவதற்கு என்ன இருக்கிறது? உன்னை நம்பி அந்தரங்கத் தோழியாக்கிக் கொண்டேனே, என்னுடைய அந்தப் புத்தியைச் செருப்பால்தான் அடிக்க வேண்டும். போதுமடி அம்மா உன் சகவாசம்!'' என்று ஒரு குட்டிப் பிரசங்கமே செய்து விட்டாள்.

தலையைத் தொங்கவிட்டவண்ணம் காந்தா சொன்னது அவ்வளவையும் லதா கேட்டுக் கொண்டிருந்தாள். அவள் முகம் பேய் அறைந்தது போல வெளிறி விட்டது. அவள் உடல் வாழைக் குருத்தாக ஆடிக் கொண்டிருந்தது. தான் குற்றவாளி இல்லை என்பதை நிரூபிக்க அவள் வாயிலிருந்து ஒரு வார்த்தை கூட வெளி வரவில்லை. 'ஆம், நான் திருட்டுத் தனமாகத் தான் வந்தேன். ஆனால் இந்த மோதிரத்தையோ வளையலையோ திருட வரவில்லை. நான் திருட்டுத் தனமாக இங்கே வந்ததன் காரணமே வேறு' என்று அவள் ஒரு தடவையாவது சொல்லியிருக்கலாம் அல்லவா? ஆனால் அவளுக்கு அப்படிச்சொல்ல யோசனை ஓடினால் தானே? ஏதோ தறி கெட்டவள் போல் நின்று கொண்டிருந்தாள்.



இவ்வளவையும் கவனித்துக் கொண்டிருந்த கேசவன் வாய் திறந்து ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. வெகு நேரம் வரை கல்லாகச் சமைந்து நின்று கொண்டிருந்தான். பிறகு வாய் திறந்து ஒன்றும் சொல்லாமல் மெதுவாக லதாவின் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு போய் வாசல் வரையில் விட்டு விட்டு வந்தான்.

இந்தச் சம்பவம் நல்ல வேளையாக நாலாவது பேர் யாருக்குமே தெரியவில்லை. இருந்தாலும் லதா அந்தச் சம்பவத்துக்குப் பிறகு அந்த வீட்டு வாசற்படி வழி சென்றதில்லை. ஏன், அந்த வீட்டுக் குத்துக் கல்லைக்கூட மிதித்ததில்லை.

காந்தாவுக்கு அந்த விஷயங்கள் எல்லாம் இன்றும் நினைவிருக்குமா? அல்லது மறந்து போயிருப்பாளா?

அகதிகள் விடுதிக்குச் சென்ற லதா குழாயடியில் குனிந்தவாறே சிந்தனை செய்யலானாள். காந்தாவினால் தான் இன்று லதாவையே சட்டென்று அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லையே! ஒரு மனுஷ்யனையே நினைவு வைத்துக் கொள்ள முடியாத அவள் இந்த விஷயங்களை யெல்லாம் எங்கே நினைவு வைத்துக் கொண்டிருக்கப் போகிறாள் என்று தோன்றியது.

ஆனால் மறு கணமே 'நினைவாவது, மறக்கவாவது? நாம் இந்தண்டை வந்ததும், அவளுக்கு நம்மைப் பற்றி எத்தனை எத்தனையோ சிந்தனைகள் ஓடியிருக்கும்' என்று எண்ணினாள்.

அவள் நினைவு அங்கேயே அத்துடன் முடிந்து விடவில்லை. மேலும் தொடர்ந்தது.

அந்தச் சம்பவம் நடந்த சில தினங்களுக்கெல்லாம் தான் கேசவன், காந்தா இருவரும் தில்லிக்கு வந்து விட்டார்களே! தில்லிக்கு வந்த கேசவன் நிரந்தரமாகவே தில்லியில் வாசம் செய்யத் தொடங்கி விட்டான். அதனால் அதற்கு அப்புறம் காந்தா லாயல்பூர் பக்கம் வரவே இல்லை. கேசவனாவது இடையே இரண்டொரு தடவை வந்து போயிருக்கிறான். ஆனால் அவன் வந்தபொழுதெல்லாம் லதா அவனைப் பார்க்கப் போனதில்லை. ஏன்? அவள் அவனுடைய கண்களிலேயே கூடப் பட்டதில்லை.

அதற்குச் சில தினங்களுக்குப் பிறகு கேசவனின் தகப்பனார் லாயல்பூரைவிட்டுச் சிம்லாவுக்குக் குடியேறி விட்டார். அதனால் அதற்குப் பின் நீண்ட நாட்கள் அவர்களுடைய தொடர்பே அறுந்து விட்டது. எத்தனையோ வருஷங்களுக்குப் பிறகு இன்றுதான் காந்தாவைச் சந்தித்தாள் லதா.

'இன்று இந்நிலையில் தன்னைப் பார்த்ததும், காந்தாவின் உள்ளத்திலே எம்மாதிரியான எண்ணக் குவியல் எழும்பி யிருக்கும்?' என்று எண்ணிப் பார்த்தாள் லதா. இரக்கமா? இரக்கம் கட்டாயம் ஏற்படத்தான் செய்யும். ஏனெனில் உத்தியோகம் வேண்டித் தவிக்கும்படியான கதி லதாவுக்கு நேர்ந்து விட்டதல்லவா? எனவே, இரக்கம் ஏற்பட்டால் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. எத்தனையோ வருஷங்களுக்கு முன் லதாவின் உள்ளத்தில் உணர்ச்சிப் பெருக்கைத் தூண்டி விட்டுக் கதை கதையாகத் தனது காதல் அநுபவத்தைச் சொன்னாளே! அது மட்டுமா? காதல் அநுபவத்தைச் சொல்லி ஒரு வயது வந்த பெண்ணின் உள்ளக் கிடக்கையிலே காதல் இன்பத்தின் ஆசைத் தீயை எழுப்பி வளர்த்து விட்டாளே! அதெல்லாம் அவள் நினைவுக்கு வந்திருக்காதா? கட்டாயம் வந்திருக்கும். அதுமட்டும் அல்ல; 'அப்படிப்பட்ட பெண் இன்னும் கல்யாணம் செய்து கொள்ளாமல் கன்னிப் பெண்ணாகவே இருக்கிறாளே! இது என்ன விந்தை!' என்று எண்ணுவாள். அதை எண்ணிப் பார்க்கும்பொழுது அவளுக்கு ஒரே வியப்பாக போயிருந்திருக்கும்! ஆம், யாருக்குமே அந்த நிலையில் வியப்பு ஏற்படுவது இயல்புதானே?

உயர்ந்த கணவர் !




எண்ணச் சுழலில் சிக்கிய லதா அதில் உழன்ற வண்ணமே, குளித்து விட்டு மாற்று உடை உடுத்திக் கொண்டாள்.

விளக்கு வைக்கும் நேரம் ஆகிவிடவே, விளக்கு ஏற்றப் போனாள். அப்பொழுது தான் அவளுக்கு விளக்கில் எண்ணெய் இல்லை என்பது நினைவுக்கு வந்தது. அவளுடைய தாயாரோ முகத்தை இழுத்து மூடிக்கொண்டு ஒரு மூலையில் படுத்திருந்தாள்.

"அம்மா! திரும்பவும் ஜுரம் வந்து விட்டதா, என்ன?" என்று மன வருத்தத்துடன் கேட்ட லதா தாயாரின் நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள். தாயாரின் உடல் கனலாகக் கொதித்துக் கொண்டிருந்தது.

'உம்' என்று பெருமூச்சு விட்டவாறே புரண்டு படுத்தாள் தாயார். பிறகு, "ஆமாம், போனாயே! போன காரியம் என்னவாயிற்று? வேலை கிடைத்து விட்டதா?" என்று வார்த்தைக்கு வார்த்தை முக்கி முனகிக் கொண்டு கேட்டாள். பெண்ணின் வேலை விஷயத்தைத் தெரிந்து கொள்ளத் தாயாருக்குத்தான் எத்தனை ஆவல்?


"வேலை என்ன, இப்படிச் சுலபமாகக் கிடைத்து விடுகிறதா, அம்மா? இன்றுதானே 'இண்டர்வியூ' நடந்திருக்கிறது. வேலைக்கு மனுப் போட்டவள் நான் ஒருத்தி மட்டும் இல்லையே! இந்த விசாலமான உலகத்தில் இன்னும் என்னைப்போல் எத்தனை பெண்கள் இல்லை? கிட்டத்தட்ட ஐம்பது பெண்கள் மனுப் போட்டிருக்கிறார்கள். இன்னும் நான்கைந்து நாட்கள் கழித்துத்தான் 'யாருக்கு வேலை கிடைத்திருக்கிறது, என்ன?' என்று ஏதாவது தெரிய வரும்.—அம்மா! இன்று ஒரு கம்பெனிக்கு 'இண்டர்வியூ'வுக்குப் போயிருந்தேனே, அந்தக் கம்பெனிக்கு முக்கியமான



பைல் பீன்ஸ்
உங்களது
ஆரோக்கியத்தையும்
அழகான தோற்றத்தையும் திரும்பவும் தருகிறது.

[illegible]

[illegible]




**பைல் பீன்ஸ்**
எல்லா மருந்து வியாபாரி
களிடமும் கிடைக்கும்.

மதராஸிற்கு சோல் ஏஜன்டுகள்: தாதா & கோ., பார்க்டவுன்



**"குரங்கு மார்க்கு"**
கறுப்பு பற்பொடி
சகல பல் நோய்களுக்கும் சிறந்தது

**MONKEY BRAND**
**BLACK TOOTH POWDER**



**NOGI & COMPANY**
87, CHINA BAZAAR ROAD, MADRAS-1

எல்லா பிரபல கடைகளிலும் கிடைக்கும்



# தபால் மூலம் இலவசக் கல்வி போதனை

1. மெட்ரிகுலேஷன். 2. S. S. L. C. 3. தமிழ் வித்வான். 4. E. S. L. C. (தமிழ் 8ம் வகுப்பு) 5. கைத்தறி நெசவு. 6. ஹிந்தி (1953 ஆகஸ்ட், பிராத்மிக் பரீட்சை முதல் விசாரத் வரை). 7. விவசாயம். 8. கிராம முன்சீப். 9. ஹோமியோபதி வைத்தியம். 10. பேஸிக் ஆங்கிலம் (A, B, C, D முதல் 5ம் பாரத்திற்குரிய பாடம் வரை) முதலிய 1953-54ம் வருட சர்க்கார் பரீட்சைகளுக்கு தபால் மூலம் "இலவசமாக" பிரதி வாரம் பாடங்களனுப்பிப் பயிற்சி அளிக்கப்படும். சர்க்கார் பரீட்சையின் வெற்றிக்கும், மாணவர்களுக்குத் தவறாது பாடங்கள் அனுப்பிப் பயிற்சி அளிக்கப்படும் என்பதற்கும் உத்திரவாதப் பத்திரம் அளிக்கப்படும். இப்பத்திரம், மேற்கண்டவாறு எம்மால் செய்யத் தவறின், மாணவர்களின் சகல கஷ்ட நஷ்டங்களுக்கும் நாங்கள் பொறுப்பு என்பதை உறுதிப் படுத்துகிறது. எனவே, 15-4-53 முதல் ஆரம்பமாகும் இவ்வகுப்புகளின் முழு விவரங்களுக்கு உடன் 2 அணா ஸ்டாம்புடன் எழுதி சேர்ந்து கொள்ளவும்.

குறிப்பு :—மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறிய மாணவர்கள் தபால், தந்தி இலாக்கா வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

**ஆசிரியர் ட்ரெயினிங் ஸ்கூல் விண்ணப்பம்**

ஆசிரியர் (Teacher Training Schools) ட்ரெயினிங் ஸ்கூலில் சேர விண்ணப்பிக்கும் விண்ணப்ப பாரங்கள் எம்மிடம் கிடைக்கும். வேண்டுவோர் 4 முக்காலணா ஸ்டாம்புடன் எழுதினால் அனுப்பி வைக்கப்படும்.

Manager: Dr. K. L. VAIDYANATHAN, B.A.

**ஸ்ரீ லக்ஷ்மி டுடோரியல் இன்ஸ்டிடியூட்**
ரிஷிவந்தியம் P. O. - (Via) திருக்கோவிலூர் - S. A. Dt.

முதலாளி யார் என்று உனக்குத் தெரியுமா?" என்று ஆவலுடன் கேட்டாள் லதா.

"எனக்கு என்ன தெரியும்? இந்த வியாதி தான் தெரியும்! படுத்த படுக்கையாகப் போட்டுப் பிராணனை வாங்குகிறதே!" என்று அங்கலாய்த்தாள் தாயார்.

"நம்ம லாயல்பூர் கேசவ அண்ணா இல்லை, அவர்தான் முதலாளி!" என்றாள் லதா.

ஜுரத்தினால் சிவந்திருந்த தாயாரின் முகத்தில் ஆவலின் அறிகுறி தோன்றியது. அவள் ஆவலை அடக்க மாட்டாமல், "அப்படியா? கேசவன் என்ன சொன்னான்? உன்னை அவன் அடையாளம் தெரிந்து கொண்டானா? உனக்கு வேலை கொடுத்து விடுவானா? என்ன சொன்னான்?" என்று கேள்விக்கு மேல் கேள்வியை அடுக்கத் தொடங்கி விட்டாள்.

லதா அதற்கு ஒன்றும் பதில் சொல்லாமல் தன் தாயாருக்கு அருகிலேயே பாயைப் போட்டுக் கொண்டு படுத்துக் கொள்ளப் போனாள். தாயாருக்கு லதா பதில் சொல்லாததற்குக் காரணம் விளங்கவில்லை. அவளுக்கு அதைப் பற்றி யோசிக்கவும் திராணி இல்லை. லதா சாப்பிடாமல் படுத்துக் கொள்ளப் போவதைக் கண்ட தாயார், "ஏன், லதா! என்ன, நீ சாப்பிட வில்லையா? படுக்கை போட்டுக் கொண்டு விட்டாயே!" என்று கேட்டாள்.

"இல்லை, அம்மா! எனக்குப் பசி இல்லை!" என்று சொன்ன லதா, "ஏன், அம்மா! அறையெல்லாம் 'ஜில்' என்று ஒரே ஈரமாக இருக்கிறதே! அறைக்குள்ளே தண்ணீர் வந்து விட்டதா, என்ன?" என்று கேட்டாள்.

"ஆமாம். பகல் முழுதும் மழை பெய்ததல்லவா?" என்று இருமிக் கொண்டே சொன்ன தாயார், "உள்ளே நீர் வராமல் இருப்பதற்குச் சாத்தலாம் என்றால் ஜன்னலுக்குக் கதவில்லை. கூரைக்கு டின்தானே போட்டிருக்கிறார்கள்? அதுவும் ஒழுகுகிறது. நீ நாளைக்கு இந்த விடுதியின் அதிகாரியிடம் சொல்லி இதைப் பழுது பார்க்கச் சொல்லேன்!" என்று சொல்லி முடித்தாள்.

'சொல்லிப் பயன் ஏற்படாது. விடுதியின் அதிகாரி ஒரு காதால் வாங்கிக் கொண்டு இன்னொரு காதால் விட்டு விடுவார்' என்பது லதாவுக்குத் தெரியும். ஆயினும் அம்மாவிடம் அதைப் பற்றிச் சொல்வானேன் என்று எண்ணி "ஆகட்டும், அம்மா!" என்று சொல்லி வைத்தாள்.

அவளுக்குப் படுத்தால் தூக்கம் வரவில்லை. தாயாரின் உடல் நிலையை எண்ணியதும் அவள் மனத்தை என்னவோ செய்தது. 'வைத்தியத்துக்கு வழி என்ன செய்வது? பணத்துக்கு என்ன செய்வது? தம்பி வேறு இப்படித் தறிதலையாகத் திரிகிறானே? நமக்கு எங்கேயாவது வேலை கிடைக்குமோ, கிடைக்காதோ தெரியவில்லையே! கேசவ அண்ணா சொல்வதைப் பார்த்தால் அவர் ஏதாவது வேலை கொடுத்து விடுவார் என்றே தோன்றுகிறது. ஆனால் நம் அதிர்ஷ்டம் குறுக்கே போய் நின்று அவரை மறித்து விட்டால் நம் கதி என்ன ஆகும்? என்றைக்காவது ஒரு நாள் குடும்பம் முழுவதுமே இப்படிப் பட்டினியால் வாடி மடிந்து விடுமோ?' என்ற சிந்தனைகள் ஒன்றன்பின் ஒன்றாக அவளை வாட்டிப் பிழிந்தன. சிந்தனையில் சோர்ந்த அவளை நித்திரா தேவிகூட அண்டப் பயந்தாள். தன்னையும் சிந்தனைச் சங்கிலி கட்டிப் போட்டு விட்டால் என்ன செய்வது என்று நித்திரா தேவி பயந்தாளோ, என்னமோ?

இரவு முழுவதும் கண் கொட்டாமல் கழிந்தது. சிந்தனை அவளை விட்டபாடில்லை. 'இப்படிப் பட்டினியால் வாட்டி மடிய வைப்பதற்காகப் பகவான் நம்மை ஏன் படைக்க வேண்டும்?' என்று எண்ணிய அவள் தன் தலைவிதியைத் தானே நொந்து கொண்டாள்.

இப்படியே மூன்று நாட்கள் ஓடி விட்டன. மூன்றாம் நாள் காலையில் கேசவனிடமிருந்து ஒரு கார்டு கிடைத்தது. என்றைக்காவது ஒரு நாள் தன்னைத் தன் வீட்டில் வந்து பார்க்குமாறு அவன் லதாவுக்குக் கடிதம் எழுதியிருந்தான்.

அதை அறிந்த அவளுடைய தாயாருக்கு மகிழ்ச்சி மனம் கொள்ளவில்லை. "பார்த்தாயா? நான் சொன்னேனே, அந்த வேலை உனக்குத்தான் கிடைக்கும் என்று! நீ கேட்டாயா? இப்போது நான் சொன்னது பலித்து விட்டதா இல்லையா, பார்!" என்றாள்.

"எங்கே? வேலை கொடுத்து விட்டதாக ஒன்றும் கடிதத்தில் குறிப்பிட வில்லையே! அப்படியிருக்கும்பொழுது வேலைக்குத்தான் கூப்பிட்டிருக்கிறார் என்று எப்படி அனுமானிக்க முடியும்?" என்று லதா ஒரு சந்தேகத்தை எழுப்பினாள்.

"அப்படியெல்லாம் இராது. நான் சொல்கிறபடியே நடக்கிறதா, இல்லையா, பார்! கேசவன் உன்னை உத்தியோக விஷயமாகத்தான் கூப்பிட்டிருப்பான். நமது கஷ்ட காலத்துக்கு விடிவுகாலம் வந்துவிடப் போகிறது, பாரேன்!" என்றாள் தாயார்.

தாயாரின் நம்பிக்கை மிகுந்த அந்தச் சொற்கள் லதாவின் மனத்திலும் நம்பிக்கையை விதைத்துச் சென்றன.

அந்தக் கார்டைப் பார்த்துக் கொண்டே அவள் தன் மனத்துள் இல்லாத கோட்டைகளெல்லாம் கட்டத் தொடங்கினாள். ஆனால் அவள் மனத்தில் ஆசையும் நிராசையும், நிழலும் வெய்யிலும் போல் அலைந்தன. வேலைக்குக் கூப்பிடுவதாயிருந்தால் வீட்டுக்கு வரச் சொல்லுவானேன்? நேரே உத்தரவு அனுப்பி வைக்க வேண்டியது தானே? என்ன இருந்தாலும் கேசவ அண்ணா நமக்கு வேண்டியவர் அல்லவா? வீட்டில் கூப்பிட்டு விஷயத்தைச் சொல்லிவிட்டு அப்புறம் உத்தரவு அனுப்பலாம் என்றிருப்பார்!

இவ்விதம் மனக் கோட்டைகள் கட்டிக் கொண்டே லதா அன்று மாலை கேசவனின் மாளிகையை நோக்கிச் சென்றாள். (தொடரும்)

# விடாமுயற்சி



சௌமித்திரி

இந்தியாவிலிருந்து வந்த பத்திரிகைகளில் தலைசிறந்து விளங்கியது 'எதிரொலி' என்ற பெயர் கொண்ட வாரப் பத்திரிகை. சிறுவர் முதல் பெரியவர்கள் வரை அப்பத்திரிகையை அறியாதவர்கள் கிடையாது. அந்த அழகிய பத்திரிகை காட்சியளிக்காத வீட்டு மேஜையோ அல்லது ஆபீஸ் டிராயரோ நிச்சயமாக இருக்க முடியாது. அதைக் கையில் எடுத்துக் கொண்டு 'தெருவில்' நடந்து செல்வதைக் கௌரவம் என்று மக்கள் நினைத்தனர். இத்தகைய கீர்த்திக்கும் பிராபல்யத்திற்கும் காரணமாக இருந்தவர் அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் ஆராவமுதன் தான். உலகத்தில் தலைசிறந்த எழுத்தாளர்களில் அவரும் ஒருவர். அவருடைய எழுத்துக்கள் சொல்வன்மையும் கருத்தாழமும் நிறைந்தவையாக இருந்தன.

அன்று காலை பத்து மணியிருக்கும். 'எதிரொலி' பத்திரிகைக் காரியாலயத்திலிருந்த ஓர் அறையில் உதவி ஆசிரியர் சர்மா, மின்சார விசிறியின் கீழ் அமர்ந்து, சில்க் ஜிப்பா காற்றில் பறக்க, அன்று வந்த தபால்களைப் பார்த்துவிட்டு, கட்டுரைகளும் கதைகளும் வந்திருந்த 'கவர்களை' எடுத்து ஒவ்வொன்றாகப் படிக்கலானார். அவருடைய புருவங்கள் வில்லைப்போல் வளைவதும், நெற்றியில் அதிருப்தியின் அடையாளமாகச் சுருக்கங்கள் தோன்றுவதுமாக யிருந்தன. பல எழுத்தாளர்களின் கதைகள் குப்பைத் தொட்டியை நோக்கிப் பாய்ந்து கொண்டிருந்தன. கடைசியாக ஒரு இளம் எழுத்தாளரின் கதையைக் கையில் எடுத்துக் கொண்ட அவர், அந்த எழுத்துக்களைப் பார்த்ததும் முகத்தைச் சுளித்துக் கொண்டு அதனுடன் கூடவே அனுப்பப் பட்டிருந்த ஒரு கடிதத்தைப் பிரித்துப் படிக்கலானார்:

அன்புள்ள உதவி ஆசிரியரவர்களுக்கு,

கடந்த இரண்டு மாதங்களில் நான் 19 சிறு கதைகள் அனுப்பி யிருக்கிறேன். அவற்றில் ஒன்றைக்கூடத் தாங்கள் பிரசுரிக்கவில்லை. இரக்க மில்லாமல் திருப்பி யனுப்பி விட்டீர்கள். இப்பொழுது அனுப்பியிருக்கும் 'மனைவியின் காதலன்' என்னும் சிறுகதையை ஆசிரியர் ஆராவமுதத்திடம் கொடுத்துப் படிக்கச் சொல்லுங்கள். ஏனெனில் இது வரைக்கும் நான் அனுப்பிய கதைகளைத் தாங்கள் மட்டும்தான் படித்திருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும். அவரே கதைகளில் அடங்கி யிருக்கும் கருத்துக்களையும், அவற்றின் உயர்ந்த நடையினையும் உணரக் கூடியவர். அவர் பார்த்து என் கதை நன்றாக இல்லை என்று எனக்கு ஒரு வார்த்தை எழுதட்டும். அதற்கப்புறம் நான் கதை எழுதுவதையே நிறுத்தி விடுகிறேன்.

தங்கள் வெறுப்பிற்குப் பாத்திரமான,

'வம்பன்.'

இதைப் படித்து முடித்த சர்மாவின் கண்கள் கோவைப் பழம்போலச் சிவந்தன. அப்படியே அந்த 'வம்ப'னைக் கொன்று விடவேண்டும் போலிருந்தது அவருக்கு. காரசாரமாக ஏதாவது அவனுக்குப் பதிலளிக்க வேண்டும் என்று கையில் பிடித்திருந்த அவரது பார்க்கர் பேனா துடித்தது. இம்மாதிரி பிரகிருதிகளின் கதைகள் தன் காரியாலயத்திற்கு வருவதே பெரிய அவமானம் என்றுகூட அவருக்குப் பட்டது. அதைச் சுக்கு நூறாகக் கிழித்துப் போட்டு விடலாமா என்றுகூட எண்ணினார். ஆனால் அந்தச் சனியன் பிடித்த வம்பனின் அடுத்த கதைகளை இனி தன் காரியாலயத்திற்கு வரவொட்டாமல் தடுத்து விட வேண்டும் என்று எண்ணினார். எனவே, ஆசிரியர்

ஆராவமுதனின் அறைக்கு விரைந்தார். தம் உதவி ஆசிரியரின் கண்கள் சிவந்திருந்ததன் காரணத்தை ஊகித்தறிய முடியாத ஆராவமுதன், அவர் கொடுத்த கடிதத்தைப் படித்துப் பார்த்தார். பிறகு தம்முள் சிரித்துக் கொண்டு, உதவி ஆசிரியரின் கோபத்தைத் தணிக்கும் எண்ணத்துடன், "மிஸ்டர் சர்மா! இந்த வம்பனின் கதைகள் இனிமேல் தங்களைத் தொந்தரவு செய்யாது என்று கூறிவிட்டு ஒரு காகிதத்தில் மிகவும் வேகமாக ஏதோ எழுதி அதை வம்பனுக்கு அனுப்பி வைக்கச் சொன்னார். அக் கடிதம் :

"மிஸ்டர் வம்பன் !

உமக்குக் கதை எழுதும் அறிவு கொஞ்சமாவது இருப்பதாகத் தெரியவில்லை. ஆகையால் இனிமேல் தாங்கள் இலக்கிய சேவை செய்ய வேண்டும் என்கிற எண்ணத்தை விட்டு விட்டு வேறு காரியத்தில் ஈடுபடவும்.

ஆராவமுதன்."

* * *

இதற்குப் பின் ஒரு வாரம் சென்றது. அன்று காலை சர்மா தம் ஆபீஸ் அறையில் அமர்ந்தவாறு தபால்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் பெயருக்கு வந்திருந்த ஒரு மஞ்சள் நிறக் கவரை ஆவலுடன் எடுத்துப் பிரித்துப் பார்த்தார். அதில் ஒரு கல்யாணப் பத்திரிகையும் ஒரு கடிதமும் இருந்தன. கடிதத்தை ஆவலுடன் படித்தார் :

"அன்புள்ள உதவி ஆசிரியரவர்களுக்கு,

வணக்கம். முன்பின் அறிமுகமில்லாத ஒருவரிடமிருந்து அழைப்பு வந்திருப்பதைக் கண்டு நீங்கள் வியப்பெய்தலாம். ஆனால் தங்களுக்கும் எனக்கும் பல காலமாகக் கடிதத் தொடர்பு உண்டு என்பதை அறிந்தால் நான் தங்களை என் கல்யாணத்திற்கு அழைப்பதில் அர்த்த மிருக்கிறது என்று அறிந்து கொள்வீர்கள். தங்களுக்கு இடைவிடாத தலைவலி அளித்து வந்த 'வம்பனை' நீங்கள் மறந்திருக்க மாட்டீர்களென எண்ணுகிறேன்.

'மனைவியின் காதலன்' என்கிற என் கடைசிக் கதையுடன் அனுப்பியிருந்த கடிதம் உங்களுக்கு ஆத்திரத்தையும் கோபத்தையும் அளித்திருக்கும். அதற்காக நான் தங்கள் மன்னிப்பைக் கோருகிறேன். ஆசிரியர் ஆராவமுதன் அவர்களை எனக்கு நேர் முகமாகக் கடிதத்தை எழுதச் செய்து, அதன் மூலம் நான் காதலித்து வந்த ஊர்மிளாவைக் கல்யாணம் செய்து கொள்ள உதவியதற்காக என் மனப்பூர்வமான வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆசிரியரின் கடிதத்திற்கும் என் கல்யாணத்திற்கும் என்ன சம்பந்தம் என்று நீங்கள் கேட்கலாம். இதோ அதையும் சொல்லி விடுகிறேன்.

நான் ஊர்மிளா என்ற பெண்ணைக் காதலிக்கிறேன். அவளைக் கல்யாணம் செய்து கொள்ள அவளுடைய பெற்றோரின் சம்மதத்தையும் பெற்று விட்டேன். ஆனால் அவள், இந்தக் காலத்தில் ஆண்கள், "பெண்களுக்குப் பாடத் தெரியுமா? ஆடத்தெரியுமா?" என்று கேட்பதைப் பார்த்துவிட்டு, "என்னைக் கதை எழுதத் தெரியுமா?" என்று கேட்டுவிட்டாள். "கொஞ்சம் தெரியும்" என்று மழுப்பினேன். ஆனால் அவள் விடவில்லை. 'எதிரொலி' பத்திரிகையில் இரண்டு கதைகளாவது எழுதி அதற்கு அத்தாட்சியும் கொண்டு வந்தால் தான் நான் உங்களைக் கல்யாணம் செய்து கொள்வேன் என்று கூறிவிட்டாள்.

உடனே கதை எழுத ஆரம்பித்தேன். எனக்குத் தோன்றியதை எல்லாம் பக்கம் பக்கமாக, இரவென்றும் பகலென்றும் பாராது எழுதிக் கொண்டே போனேன். ஆனால் நீங்கள் ஒரு கதையையும் பிரசுரிக்கவில்லை. இந்த ஜன்மத்தில் என் உள்ளங் கவர்ந்த ஊர்மிளாவை யடைய முடியாது என்று மன விரக்தியடைந்திருந்த நான் ஒரு நாள் அவள் தம்பியைச் சந்தித்தேன்.


"என்ன ஸார்! உங்கள் கதை ஒன்றுகூடப் பிரசுரமாகவில்லை போலிருக்கிறதே!" என்று கேட்டான் கேலியாக. 'ஆம்' என்று பதிலளித்தேன். பரிதாபகரமாக என் துயரத்தை உணர்ந்து கொண்ட அவன், "ஸார்! உங்களுக்கு ஒரு யோசனை சொல்கிறேன். அதன் படி செய்தால் நிச்சயமாக நீங்கள் என் அக்காளைக் கல்யாணம் செய்து கொண்டு விடலாம்" என்றான்.



"என்ன யோசனை?" என்று ஆவலுடன் கேட்டேன். போன மாதம் 'எதிரொலி' பத்திரிகையின் ஆசிரியர் ஆராவமுதன் அக்கா படிக்கும்காலேஜுக்கு வந்து பிரசங்கம் செய்தாராம். அப்பொழுது அவருடைய கையெழுத்தைப் பல பெண்கள் தங்கள் 'ஆடோகிரா' புத்தகத்தில் வாங்கினார்களாம். அக்கா அவரை நெருங்குவ



# 20 அணாக்கள் ஒரு ரூபாய்க்கு



டயர்களை வாங்கும்பொழுது பயர்ஸ்டோன் டயர்களையே வாங்கி நீங்கள் செலவிடும் ஒவ்வொரு ரூபாய்க்கும் இருபது அணாவின் மதிப்பை அடையுங்கள். இந்த விசேஷ மதிப்பு டயர்கள் உத்பத்தியில் அதிக மைல்கள் உழைக்கும் வண்ணம் பிரஸித்தமானதும், பிரத்தியேகமானதுமான கம்-டிப்பிங் முறையைக் கையாளப்படுவதினால் உங்களுக்குக் கிடைக்கிறது. கம்-டிப்பிங் முறையானது நூல் இழைகள் ரப்பருடன் நன்கு பிணைக்கப்பட்டு டயர்கள் வெடித்துப் போகாமலும், நீடித்து நின்று அதிகமான மைல்கள் உழைக்கக் கூடியதாகவும் இருக்க உதவுகிறது.

**கம் - டிப்பிடு டயர் இது ஒன்றே**

# Firestone

**பயர்ஸ்டோன் டயர் அண்டு ரப்பர் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்**

LAS. (6)




---

## அரித்து, எரிந்து கொப்பளிக்கும் எக்ஸிமா 10 நிமிஷத்தில் குணமடைகிறது


நிக்ஸோடேர்ம் (Nixoderm) கண்டு பிடித்தது முதல் யாரும் எக்ஸிமா, பரு, ரத்தக் கட்டி ஆகிய சரும வியாதிகளால் அவதியுறவும், உங்களுக்கும் பிறருக்கும் வெறுப்பு ஏற்படவும் வேண்டாம். ரஸாயன முறையில் தயாரித்த நிக்ஸோடேர்ம் (Nixoderm) உதவியால் சருமத்தை சுத்தமாக்குங்கள். அநாவசியமாக வைத்துக்கொண்டு பிறர் உங்களை வியாதிஸ்தரெனக் கருத இடம் தராதீர்.

### ஒரு புதிய சாதனம்

நிக்ஸோடேர்ம் (Nixoderm) ஒரு புதிய களிம்பு. ஆனால் நீங்கள் உபயோகித்த இதர களிம்பைப் போன்றதல்ல. பிசுக்கற்றது. மேலே தடவும் போதே ஒரு பவுடரைப்போல உணருவீர்கள். சருமத் துவாரங்களினூடே சென்று வியாதிக்கு மூலமான இடத்தை தாக்குகிறது. நிக்ஸோடேர்ம் (Nixoderm) மூன்று வழிகளில் உபாதையைத் தாக்குகிறது: (1) நோய்க்குக் காரணமாகும் கிருமிகளைக் கொல்லுகிறது. (2) அரித்து, எரிந்து வேந்து போவதை 7 முதல் 10 நிமிஷத்தில் தடுத்து சருமத்தை மென்மையாக்குகிறது. (3) இயற்கையாகவே ஆற்றி, சுத்தமாக, மிருதுவாகப் பட்டுப் போல வழ வழப்பாகவும் ஆக்குகிறது.

### விரைவில் பலனளிக்கிறது

சரும நோய்களை நிவர்த்திக்கவே விஞ்ஞான முறையில் தயாரான நிக்ஸோடேர்ம் (Nixoderm) மற்றதைவிட சீக்கிரம் வேலை செய்கிறது. தமைச்சல், எரிச்சலை சில நிமிஷத்தில் நிறுத்தி விரைவில் சருமத்தை சுத்தமாக ஆற்றி, மிருதுவாகவும் வழ வழப்பாகவும் செய்கிறது. ஓரிரண்டு தினங்களில் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளுங்கள். தேடிய சஞ்சீவி—நாடிய வைத்தியம் கிடைத்ததை உணர்வீர்கள். நிக்ஸோடேர்ம் (Nixoderm) ஆயிரக் கணக்கானவர்களது சருமத்தைச் சுத்தமாக்கி




புஷ்டியாக்கியது. அவர்களில் ஒருவரான மிஸ்டர் R. K. கூறுகிறார்: "12 வருஷமாக தமைச்சலும் எரிச்சலும் தரும் எக்ஸிமாவினால் கஷ்டப்பட்டேன். பல மருந்துகளுக்குப்பிறகு நிக்ஸோடேர்ம் (Nixoderm) உபயோகித்தேன். 10 நிமிஷத்தில் தமைச்சல் நின்று மறுநாளே சருமம் சுத்தமாகியது. என் தோற்றத்தின் மாறுதலைக் கண்ட நண்பர்கள் ஆச்சரியமடைந்தனர்.

### திருப்திக்கு உத்தரவாதம்

சருமம் திருப்தியாகுதவரை நிக்ஸோடேர்ம் (Nixoderm) மதிப்பை இழக்கிறது. இன்றே நிக்ஸோடேர்ம் (Nixoderm) வாங்குங்கள். தோற்றத்தில் ஏற்படும் அபிவிருத்தியைக் காண ஆச்சரியப்படுவீர்கள். ஒரு வாரத்துக்கு உபயோகித்தால் சருமம் வழவழப்பாயும் மிருதுவாயும் சுத்தமாயும் வசீகரமாகவும் ஆவது நிச்சயம். இல்லையேல் காலிப் பெட்டியைத் திருப்பிக் கொடுத்து, கொடுத்த விலையை வாபஸ் பெறுங்கள். இன்றே நிக்ஸோடேர்ம் (Nixoderm) வாங்குங்கள். அதற்களித்த உத்திரவாதமே உங்களுக்கான உறுதி.

---

## 3 வாசனைக் கலாரத்னங்கள்

# கம் கம் ஜவாஜ் ★ கம்பால் ★ கமகர்

## அகர்பத்திகள்

**டி. எஸ். சுகந்தாலயா,**

வாசனைதிரவிய வியாபாரிகள், பெங்களூர்-2

தற்குள் அவர் காரில் ஏறிச் சென்று விட்டாராம். பெரிய எழுத்தாளரான அவருடைய கையெழுத்தைப் பெற முடிய வில்லையே என்று அவள் மிகவும் ஏக்கமாகவும் வருத்தமாகவும் இருக்கிறாள். நீங்கள் எப்படியாவது அந்த ஆசிரியரின் கையெழுத்தை வாங்கிக் கொடுத்து விட்டால், அவள் கல்யாணத்துக்குச் சம்மதித்து விடுவாள்'' என்றான்.

அதன்படி உங்களுக்கு ஒரு கடிதம் எழுதித் தங்களைக் கோபமுண்டாகும்படி செய்து ஆசிரியர் ஆராவமுதத்தின் கையொப்பமிட்ட கடிதத்தைப் பெற்றேன். அக் கடிதத்தையும், நீங்கள் எனக்குப் பரிசாக ஒவ்வொரு கதையுடனும் அனுப்பியிருந்த குண்டூசிகளையும் 'வணக்கத்துடன் திருப்பி அனுப்புகிறோம்' என்று அச்சடித்த காகிதங்களையும் ஒரு வெள்ளிப் பெட்டியில் எடுத்துவைத்துக் கொண்டு ஊர்மிளாவிடம் சென்றேன். அதை அவளிடம் கொடுத்து 'இதுதான் என் கதைக்கு வந்த பரிசு!' என்று கூறினேன். அதைத் திறந்து அதிலிருந்தவற்றைப் பார்த்துவிட்டு ஆசிரியர் ஆராவமுதத்தின் கடிதத்தை எடுத்துப் பிரித்துப் படித்துப் பார்த்தாள். மறு கணம் ஆனந்தத்தால் துள்ளிக் குதித்த அவள் "ராகவன்! நீங்கள் கதை எழுத அருகதையற்றவர் என்று ஆசிரியர் கூறியபோதிலும் உண்மையில் என் காதலைப் பெற அருகதையுள்ளவர்; என்னைக் கல்யாணம் செய்து கொள்ள அருகதையுள்ளவர். தாங்கள் இரவும் பகலும் மூளையைக் குழப்பிக் கொண்டு எனக்காக இருபது கதைகளை எழுதியிருக்கிறீர்கள். தங்கள் விடா முயற்சியை நான் பாராட்டுகிறேன். தவிர, எழுத்தாளர் ஆராவமுதத்தின் கையெழுத்தை நான் அடையும்படி செய்ததற்கு மிகவும் நன்றி'' என்று மகிழ்ச்சியுடன் கூறி அக் கடிதத்திலிருந்து ஆசிரியரின் கையெழுத்தை வெட்டித் தன் 'ஆடோகிராப்' புஸ்தகத்தில் ஒட்டி விட்டாள்.

நாளை எங்களுக்குத் திருமணம் நடக்கப் போகிறது. தங்கள் வரவை அன்புடன் எதிர்பார்க்கிறேன்.

'வம்பன்' என்ற புனைபெயர் கொண்ட
ராகவன்.''

உதவி ஆசிரியர் சர்மா வியப்பில் மூழ்கி விட்டார். காதலியைப் பெற விடா முயற்சியுடன் கதைகள் எழுதிய ராகவனை மனமார வாழ்த்தி, ஒரு தந்தியை அனுப்பி வைத்தார்.

# விபரீத விளைவு!

தோட்டத்தில் செடிகளுக்குப் பாத்தி வெட்டிக்கொண்டிருந்தேன். "ஸார்! ஸார்!" என்றகுரல் கேட்டுத் திரும்பினேன். ஐம்பது வயது மதிக்கத் தகுந்த கிழவர் ஒருவர் நின்று கொண்டிருந்தார்.

"என்ன ஸார்! இப்படி வீட்டைத் திறந்து போட்டு விட்டுத் தோட்ட வேலையில் மூழ்கியிருக்கிறீர்களே! வீட்டில் யாராவது புகுந்தால் கூடத் தெரியாதே! பட்டணத்தில் இப்படிக் கதவைத் திறந்து போட்டுவிட்டுக் கொல்லையில் வந்து நிற்கலாமா!" என்று கேட்டுவிட்டுப் பொக்கை வாய் தெரியச் சிரித்தார்.

எனக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. அதற்குள் அவர், "ஸார்! உங்களுக்குச் சிரமம் வைக்காமல் நானே வீட்டை யெல்லாம் சுற்றிப் பார்த்து விட்டேன். பாருங்கோ! இந்தக் காலத்திலே யாருக்குமே சரியாக வீடு கட்டத் தெரியவில்லை. கூடத்து அறை விசாலமாக இருக்க வேண்டாமா? சமையலறை எலிவளை போலல்லவா இருக்கிறது! அது தவிரச் சமையல் அறையில் ஒரே இருட்டு; புகை போவதற்கும் வழியில்லை!" என்று கட்டின வீட்டுக்குப் பழுது சொல்லத் தொடங்கி விட்டார். எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. இருந்தாலும் வந்த கோபத்தை அடக்கிக் கொண்டு, "அப்படியா!" என்று கேட்டு வைத்தேன்.

அத்துடன் அவர் விடவில்லை. "அது மட்டுமா! ஆபீஸ் அறையில் காற்று வருவதற்கு ஜன்னல் வைக்க வேண்டாமா! இந்த வீட்டைக் கட்டினவன் சுத்த ஞான சூன்யனாக........" என்று ஆரம்பித்து விட்டார்.

எனக்கு அவருடைய அதிகப் பிரசங்கித்தனமான அந்தப் பேச்சு கடுங்கோபத்தை வருவித்தது. அழையாத வீட்டில் முன்பின் தெரியாத ஒருவர் புகுந்து இப்படி அட்டகாசம் புரிந்தால் யாருக்குத்தான் கோபம் வராது!

"இந்தாருங்கோ! இந்த வீடு எப்படி இருந்து விட்டுப் போனால் உங்களுக்கு என்ன! இதில் இருக்கிறவர்களாகிய நாங்கள் எக்கேடாவது கெட்டுப் போகிறோம். அதற்காக நீங்கள் ஒன்றும் எங்களுக்காக வேதனைப்பட வேண்டாம்!" என்று ஆத்திரம் மிகுந்த குரலில் கூறினேன்.

"ஏன் ஐயா இப்படிக் கோபப் படுகிறீர்கள்! வீட்டில் குடியிருக்க வருபவர்கள் குறைகளையெல்லாம் சொன்னால் சௌகரியம் செய்து கொடுப்பதுதானே வீட்டுக்காரர்களுக்கு அழகு! அதை விட்டுப் பிரமாதமாகக் கோபப்படுகிறீரே!"

"யார் உங்களுக்கு இந்த வீடு வாடகைக்கு விடப் போகிறோர்கள் என்று சொன்னது! நாங்கள் வீட்டை வாடகைக்கு விட்டால் அல்லவோ உங்கள் குறைகளைக் கேட்டுக் கொள்ள வேண்டும்!" என்றேன் பொறுமை யிழந்து.

"என்ன ஸார்! விளையாடுகிறீர்களா! 'வீடு வாடகைக்கு விடப்படும்' என்று போட்டுவிட்டு என்னை ஏமாற்றப் பார்க்கிறீரோ! நான் பார்த்த வீடுகளில் இந்த வீடுதான் எனக்கு மனசுக்குப் பிடித்திருக்கிறது என்று வந்தால்..." என்று படபடவென்று பொரிந்து தள்ளிவிட்டு அங்கிருந்து நகர்ந்தார் கிழவர்.

கிழவருக்கு ஒருவேளை பைத்தியமோ என்று சந்தேகித்து வாசல் வரை அவர் பின்னாலேயே சென்று அவர் தெருவைத் தாண்டும் வரை நின்று விட்டுத் திரும்பினேன். அப்பொழுதுதான் அவருக்குப் பைத்தியமில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. யாரோ விஷமக்காரச் சிறுவன் அடுத்த வீட்டில் மாட்டியிருந்த "வீடு வாடகைக்கு விடப்படும்" என்ற போர்டைக் கழற்றி என் வீட்டில் மாட்டி யிருந்தான். —நுண்மணி.




ராமநாதன் தன் வீட்டுக் கதவைத் தட தடவென்று பலமாகத் தட்டினான். கார் காம்பௌண்டிற்குள் நுழையும் சத்தம் கேட்டதுமே அவனுடைய மனைவி முகத்தில் புன்னகை தவழ ஓடிவந்து கதவைத் திறக்காதது அவனுக்கு மிகவும் ஆச்சரியமா யிருந்தது.

நாலைந்து நிமிஷங்களுக்குப் பின் அவள்—ரேவதி— கதவைத் திறந்தாள். திறந்தவள் தன் கணவனின் முகத்தை ஒரு முறை ஏறிட்டுப் பார்த்து விட்டுப் பேசாமல் உள்ளே போகத் திரும்பினாள். "ஏன் இவ்வளவு நேரம்?" என்று அன்பொழுகக் கேட்கும் மனைவியிடம் தன் பிரதாபங்களைச் சொல்லி அளக்கலாம் என்று திட்ட மிட்டிருந்த ராமநாதனுக்கு, இது பெரிய ஏமாற்றம்தான். ஆனாலும் ஒருமாதிரி சமாளித்துக் கொண்டு உள்ளே போனான் அவன்.

கூடத்துக்குள் நுழைந்ததும் ரேவதி நேராகச் சமையற் கட்டுக்குச் சென்று விட்டாள். ராமநாதன் 'கோட்'டையும் கால் சட்டையையும் கழற்றி நாற்காலி மேலேயே மாட்டி விட்டு, வேஷ்டியைக் கட்டிக் கொண்டு உணவருந்து வதற்காக அவளைப் பின் தொடர்ந்து சென்றான்.

சமையற்காரி தன் வேலையை முடித்துக் கொண்டு போய் விட்டாளாதலால் ரேவதி தான் பரிமாறினாள். உணவு பரிமாறும் போதாவது அவள் ஏதாவது கேள்விகள் கேட்பாள் என்று எதிர் பார்த்தான் ராமநாதன். ஆனால் ரேவதி வாயைத் திறக்கவே யில்லை. மௌனம் அவள் கோபமா யிருப்பதின் வெளித் தோற்றம். "அவள் ஏன் கோபமா யிருக்கிறாள்?" என்பது ராமநாதன் அறி யாததல்ல. ஒரு நாளைப் போல இரவு ஒன்பது மணிக்கும் பத்து மணிக்கும் தன் கணவன் வீட்டுக்கு வந்தால், ஒரு இளம் மனைவியின் மனம் எப்படி யிருக்கும்?

டாக்டர் ராமநாதன் வயதில் இளையவராக இருந்தாலும் வைத்தியத்தில் கை தேர்ந்தவர் என்பது பிரசித்தம். ஆகவே, அவர் ஆஸ்பத்திரிக்குப் பல நோயாளிகள் விரைந்ததில் ஆச்சரியமில்லை. எல்லா நோயாளிகளையும் பார்த்து, பரிசோதித்து, மருந்து கொடுத்து விட்டு, நோயாளிகளின் வீட்டுக்கே சென்று பார்க்க வேண்டிய நோயாளிகளையும் பார்த்து விட்டு வீட்டுக்குத் திரும்பும் போது இரவு மணி ஒன்பது, பத்து என்று நேரம் ஆகி விடுகிறது. அதற்கு அவன் என்ன செய்ய முடியும்?

ரேவதி பேச்சை ஆரம்பிக்க மாட்டாள் என்பது நிச்சயமாகத் தெரிந்ததும் தானே பேச்சைத் துவக்க ஆரம்பிக்கும் வகையில் தொண்டையை ஒரு முறை கனைத்துச் சரிப் படுத்திக் கொண்டான்.

"ரேவதி!"

"..........."

"என்ன பேச மாட்டாயா? இன்றைக்கு ஒரு முக்கியமான சமாசாரம். உன்னுடைய அம்மாள் கடிதம் போட்டிருக்கிறார்கள்!"

"என்ன எழுதி யிருக்கிறார்?" 'அம்மா விடமிருந்து கடிதம்' என்றதும் ரேவதியின் குரலில் ஆர்வம் தொனித்தது.

"என்ன எழுதி யிருக்கிறார், தெரியுமா? உன் புருஷன் வேலைத் தொந்தரவால் வீட்டுக்கு நேரங் கழித்து வந்தால், அதற்காக அவரிடம் நீ கோபித்துக் கொண்டு பேசாமல் இருக்கக் கூடாது. அவருடைய ஆயாசத்தைத் தீர்க்க அவரோடு அன்புடன் நீ பேச வேண்டும். கண்ணீரும் மௌனமும் பெண் குலத்துக்கென்றே சிருஷ்டி கர்த்தா மனமுவந்து அளித்த அஸ்திரங்கள்தான் என்றாலும்..."

"போதும் போதும், நிறுத்துங்கள். 'அம்மா கடிதாசி போட்டிருக்கா' என்று பிரமாத

மாகச் சொல்லிவிட்டு வேறு என்னமோ பிரசங்கம் பண்ணுகிறீங்களே?''

''ஆமாம்; நான அப்படிச் சொல்லி யிருக்கா விட்டால் நீ இப்போ என்னோடே பேசி யிருப்பாயா?'' ராமநாதனின் முகத்தில் வெற்றிப் புன்னகை தோன்றியது.

ரேவதியும் சிரித்து விட்டாள்!

உண்ட களைப்புடன் ராமநாதன் நாற்காலி யில் சாய்ந்தான். கையில் வாசனைப் பாக்கும், தளிர் வெற்றிலையும், சிவப்புச் சுண்ணாம்பு மாக ரேவதி வந்தாள்.

அவள் கொடுத்த வெற்றிலையை மென்று கொண்டே, தான் ஒரு சிக்கலான ஆப ரேஷன் செய்து யாரோ ஒருவருடைய உயி ரைக் காப்பாற்றிய 'சரித்திரத்தை' அவ ளிடம் ராமநாதன் விவரித்துக் கொண்டிருந் தான். அவர்களுடைய பேச்சுக்குத் தடை விதித்தது டெலிபோனின் மணியோசை.

''டிரிங்.. டிரிங்...டிரிங்...டிரிங்...''

ரேவதிக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. 'சே, என்ன டாக்டர் பிழைப்பு வேண்டிக் கிடக்கிறது? டாக்டர்கள் மட்டும் மனிதர்கள் இல்லையா? அவர்களுக்குப் பசி, தாகம், தூக்கம், அசதி, விருப்பு வெறுப்பு, குடும்பக் கவலை ஒன்றும் இடையாதா? இதைப் பொதுமக்கள் அறிந்தால்தானே? வீட்டில் ஒரு கணம் ஓய்வெடுக்க விடாமல் எப்போதும் கூப்பாடுதானா?......''

திடீரென்று ரேவதிக்கு ஒரு யோசனை தோன்றிற்று. தானே 'போனை' எடுத்து, ராமநாதனை யாரேனும் அழைத்தால், 'அவர் வீட்டில் இல்லை' என்றோ, 'வேறு நம்பர்' என்றோ கூறிவிட்டால் என்ன?

இந்த யோசனை தோன்றிய அடுத்த கணம் அவளது இடது கை டெலிபோனை நோக்கிப் பாய்ந்து கொண்டிருந்தது.

ஆனால், ஒரு நிமிஷ நேரம் டெலிபோனின் ரீங்காரத்தை ரஸித்துக் கொண்டிருந்த ராம நாதன், ரேவதி ஏதோ யோசனையில் ஆழ்ந் திருப்பதை அறிந்து தானே பதில் கூறுவதற் காக, ரேவதி போன அதே நேரத்தில், தன் கையையும் நீட்டினான். வெற்றி ராமநாத னுக்குத்தான்! ரேவதியின் திருக்கரம் போனை நெருங்குவதற்கு முன்பே ராமநாதன் அதைக் கையில் எடுத்து விட்டான்!

''ஹலோ...'' என்றான் ராமநாதன். கவலை யுடன் அவன் பேச்சைக் கவனித்துக் கொண் டிருந்தாள் ரேவதி.

''என்ன, பெரிய காயமா? மாடிப்படியி லேருந்தா? உங்கள் விலாசம்...இதோ வந்து விட்டேன்...'' என்ற ராமநாதனின் முற்றுப் பெறாத சொற் கோவைகள் அவளுக்கு நிலை மையைப் புரிய வைத்தன.

அடுத்த சில நிமிஷங்களுக்குள் சட்டை அணிந்து கொண்ட ராமநாதன் மருந்துப் பெட்டியுடன் காரை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான். ரேவதி இருந்த இடத்தை விட்டு எழுந்திருக்கவே யில்லை. மனப் பாரம் அவளை அழுத்தியது; கண்கள் நீருகியாகப் பொழியத் தயாராக இருந்தன.

''ரேவதி, கதவைச் சாத்திக் கொள்! இதோ பத்து நிமிஷத்தில் வந்து விடுகிறேன்......'' என்று காரிலிருந்தபடியே ராமநாதன் பட படவென்று கூறிய வார்த்தைகள் அவளுக்கு உணர்வு ஊட்டின.

உணர்ச்சி யற்றவளாக எழுந்து சென்று வாசற் கதவைச் சாத்தினாள். உள்ளே வந்த அவள் கண்களில் நாற்காலியின் மேல் இருந்த கால் சட்டையும் 'கோட்டும்' காட்சி யளித்தன. அவைகளை உரிய இடத் தில் மாட்டலாமே என்ற எண்ணத்தில், அவைகளை உதறியவாறே கையில் எடுத் தாள். கோட்டுப் பையிலிருந்த ஏதோ ஒரு கடிதம் கீழே விழுந்தது. கடிதத்தைக் கையிலெடுத்தபோது அது ஒரு பெண்ணின் கையெழுத்தா யிருப்பதைக் கவனித்தாள் ரேவதி. தன்னை யறியாமலேயே கடிதத் தைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தாள்.

''பிரியமுள்ள அன்பரே,

இன்றைய தினம் இரண்டாவது காட் சிக்கு, 'நந்தினி' தியேட்டர் வாசலில் உங்களுக்காகக் காத்துக் கொண்டிருப் பேன். தாங்கள் எந்த வேலையிருந்தாலும் தவறாது என்னை வந்து சந்திக்கவும்.

மோகனா.''

கடிதத்தைப் படித்த ரேவதிக்குத் தன் தலையில் பேரிடி விழுந்தது போல் தோன் றிற்று. மாடிப் படியி லிருந்து விழுந்த



விழுந்தவர்:—'குதிரை கீழே தள்ளினது மல்லாமல் குழியையும் பறித்ததாம்' என்கிற மாதிரி, என்னைக் கீழே தள்ளி யது மல்லாமல், கீழே விழுந்து போன என் அரோகா பொட்டலங்களில் ஒன்று தாருங்கள் என்று கேட்கிறீரே......சே! நீங்கள் அந்தக் குதிரையை விட மோச மானவர், ஐயா!

## கல்கி

(வாரப் பதிப்பு)

சந்தா விவரம்

| | | ஒரு வருடம் | ஆறு மாதம் |
|---|---|---|---|
| இந்தியா<br>சிலோன் | ரூ. | 13-0-0 | 6-8-0 |
| பர்மா<br>மலேயா<br>வெளிநாடு | ரூ. | 14-10-0 | 7-5-0 |

குறிப்பு :—வி. பி. பி. மூலம் அனுப்புவது கிடையாது. தயவு செய்து முன் பணம் அனுப்ப வேண்டும். சிலோன் நேயர்கள் மட்டும் வி. பி. பி. மூலம் சந்தாத் தொகையைச் செலுத்தலாம்.

கடிதம் எழுதும்போது சந்தா நேயர்கள் தங்கள் சந்தா நெம்பரைக் குறிப்பிடவும்.

மானேஜர் - கல்கி காரியாலயம் - சென்னை


வரை உயிர்ப்பிக்கப் போவதாகக் கூறிக் கள்ளக் காதலியுடன் சினிமாவுக்குப் போய் விட்டாரா, அவள் அன்புக் கணவன்!

அவள் போனை எடுக்கக் கையை நீட்டியும் ராமநாதனே வலுவில் டெலிபோனை எடுத்துப் பதில் கூறியதன் மர்மம் இப்போதல்லவா ரேவதிக்குப் புரிகிறது? உம்...இது எவ்வளவு நாளையத் தொடர்போ? ஒவ்வொரு நாளும் அவன் வெகு நேரம் கழித்து வீட்டுக்கு வருவதன் காரணம் இதுதானோ என்னவோ? ஐந்தரை மணிக்கு டிஸ்பென்ஸரியிலிருந்து கிளம்பி 'அவளு'டன் கடற்கரைக்கும் சினிமாவுக்கும் உல்லாசமாகப் போய் விட்டு வந்தால் நேரமாகாமல் என்ன செய்யும்?......

'கால் சட்டையை'யும் 'கோட்'டையும் நாற்காலியிலேயே போட்டாள் அவள். அவள் மனம் குழம்பி யிருந்தது.

படுக்கையில் படுத்து விசித்தபடியே ரேவதி தூங்கிவிட்டாள். அப்படி எவ்வளவு நேரம் தூங்கினளோ, அவளுக்கே தெரியாது.

"டிரிங்...டிரிங்...டிரிங்...டிரிங்..."

ரேவதியின் கோபத்துக்கு எல்லையே இல்லை. 'அர்த்த ராத்திரி வேளையில் யார் இப்படிப் பிராணனை வாங்குகிறார்கள்!" என்று முணுமுணுத்துக் கொண்டே எழுந்து போய், விளக்கின் 'ஸ்விச்'சைப் போட்டுவிட்டு, டெலிபோன் ரிஸீவரைக் கையில் எடுத்தாள்.

"ஹலோ! யார் பேசுகிறது? டாக்டர் ராமநாதன் இருக்கிறாரா?"

"இல்லையே. வெளியே போயிருக்கிறார். நீங்கள் யார் என்று சொன்னால்..."

"நான் அனந்தராமன் பேசுகிறேன்..."

அனந்தராமன், ராமநாதனின் வெகு கால நண்பன். இருவரும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். தொழிலில் வேறு வேறு முறையைப் பின் பற்றினாலும், அவர்களிடையே நட்பு மட்டும் வளர்ந்து கொண்டே வந்தது. இது ரேவதிக்கும் தெரிந்த விஷயம்.

இப்போது, அனந்தராமனின் குரலில் தொனித்த ஒருவித நடுக்கத்தை ரேவதியினால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

"ஏதேனும் அவசரச் செய்தியாயிருந்தால் என்னிடம் தெரிவியுங்கள். அவர் வந்தவுடன் சொல்லுகிறேன்."

"உம்...இல்லை...வந்து...இன்று சாயங்காலம் 'கிளப்'பில் பில்லியர்ட்ஸ் விளையாடிக் கொண்டிருந்தோம். திரும்பி வரும்போது, 'ஸ்டாண்டி'லிருந்து அவன் 'கோட்'டைத் தவறுதலாக எடுத்து நான் போட்டுக் கொண்டு வந்து விட்டேன். நாங்கள் இருவரும் ஒரே துணியில் தைத்துக் கொண்டோமாதலால், அவசரத்தில் வித்தியாசம் காண முடியவில்லை...அவன் என் 'கோட்'டைப் போட்டுக் கொண்டு வந்திருப்பான் என்று நினைக்கிறேன். உம்...அந்தக் கோட்டில்... வந்து...ஒரு முக்கியமான 'பிரைவேட் லெட்டர்' இருந்தது...!"

"இப்போதான் நான் சினிமாவிலிருந்து திரும்பி வந்தேன். கோட்டைக் கழற்றி மாட்டும் போதுதான் என் தவறை உணர்ந்தேன். கடிதம் மிகவும் முக்கியமானதினால் நடு ராத்திரியிலேயே போன் பண்ணினேன். மன்னிக்க வேண்டும்!"

"அடடா, அதனாலென்ன? பரவாயில்லை. உங்கள் கோட் இங்கேதான் இருக்கிறது; கடிதமும் பத்திரமாக இருக்கும்! கவலையின்றி நிம்மதியாகத் தூங்குங்கள். வணக்கம்."

போனைக் கீழே வைத்த ரேவதிக்கு அடங்காக் கோபம் பிறந்தது, தன் பேரிலேயே! இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக ராமநாதனுடன் பழகியும் அவனுடைய குணத்தை அவள் நன்றாகப் புரிந்து கொள்ளாதது அவளுக்கே வெட்கமாயிருந்தது. அவள் உள்ளத்தில் சந்தேகம் விரித்திருந்த பனித்திரை 'சட்'டென்று விலகியது. அவள் உள்ளத்திலிருந்து ஒரு நீண்ட பெருமூச்சுப் பிறந்தது.

அப்போது வீட்டுக் காம்பௌண்டில் கார் நுழையும் சத்தம் கேட்டது. வாசற் கதவைத் திறக்கச் சென்றாள் ரேவதி.

காரை ஷெட்டில் விட்டு வருவதற்கு முன்பாகத் திறந்த கதவின் முன் ரேவதி நின்று கொண்டு அவனை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதை அறிந்து ஆச்சரியமடைந்தான்.

"என்ன ரேவதி, இன்னும் தூங்கவில்லையா? உம்...முகமெல்லாம் சிவந்து, கண் வீங்கி..."

ரேவதியின் அழகிய கண்கள் ராமநாதனின் உள்ளத்தை ஊடுருவிக் கொண்டிருந்தன.

"ரேவதி!" என்று கூப்பிட்டவாறு அவளை உலுக்கினான் ராமநாதன்.

"நீங்கள் வெளியே போனதிலிருந்து எனக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. அப்பா, இவ்வளவு நாழிகையாகிவிட்டதா?"

அவள் குரலில் இதுவரையில் தான் கேட்டிராத அமைதியையும் பரிவையும் கண்டு ராமநாதன் ஆச்சரிய மடைந்தான். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவனுக்குத் தான் நடந்தது ஒன்றும் தெரியாதே!

கவியரசர் டாகூர் காந்தி மகாத்மாவின் பெருமையையும் அவர் இந்தியாவுக்கு ஆற்றியிருக்கும் அருந்தொண்டையும்

# மகாத்மா காந்தி

என்ற நூலில் அழகாக விளக்கியிருக்கிறார்

விலை அணா எட்டு.

(தபால் செலவு தனி)

சசிதேவி எழுதிய

# விஜயா

முதலிய கதைகள்

விலை ரூ. 2-8-0

(தபால் செலவு தனி)

●

கிடைக்குமிடம்

**கல்கி காரியாலயம்**

கீழ்ப்பாக்கம் :: சென்னை

---

# பிரஸிடெண்ட் வெஜிடெபிள் ஹேர் ஆயில்



பிரபல ஸினிமா நக்ஷத்திர நடிகை ஸ்ரீமதி டி. ஆர். ராஜகுமாரி கூறுவது: "நான் பிரஸிடெண்ட் வெஜிடபிள் ஹேர் ஆயில் உபயோகித்ததில் அது கேசத்திற்கு சிறந்த கூந்தல் தைலம் என்பதை அறியலானேன். இது கேச வளர்ச்சியை அபாரமாக அளிப்பது மட்டுமின்றி தேகத்திற்குக் குளிர்ச்சியையும் அளிக்கிறது."

தயாரிப்பவர்கள்:

**ரத்தோட் டிரேடிங் கம்பெனி**

மதராஸ்-1

---

# மார்புச்சளி

'பெப்ஸ் அருந்துங்கள்'

## என்று டாக்டர் சொல்லுகிறார்





இருமல், ஜலதோஷம், தொண்டைப்புண், மார்புச்சளி, இன்புளுயன்ஸா மற்றும் தொண்டை, மார்பு சம்பந்தமான நோய்கள் அபாயகரமானவை. இத்தொல்லைகளை எல்லாம் பெப்ஸ் மூலம் நிவர்த்தி செய்துகொள்ளுங்கள். பெப்ஸ் மூச்சு விடுவதை சுலபமாக்குகிறது. பெப்ஸிலிருக்கும் செழிப்பான மருந்துச் சத்துக்கள் மார்புக்குள்ளும் சுவாச கோசங்களிலும் ஊடுருவிச் செல்லுகிறது. அதனால் தான் பெப்ஸ் துரிதமாகவும் நிச்சயமாகவும் இருமலைத் தடுக்கிறது; புண்ணை குணப்படுத்துகிறது; ஆபத்து விளைவிக்கும் நோய்க்கிருமிகளைக் கொல்லுகிறது; சுவாச கோசத்திற்கும் தொண்டைக்கும் இதமளிக்கிறது. தொண்டை, மார்பு நோய்களுக்குகந்த தித்திக்கும் சுவையுள்ள மாத்திரைகளான பெப்ஸையே டாக்டர்கள் சிபார்சு செய்கிறார்கள்.

**பெப்ஸ் நன்கு அருந்துங்கள் PEPS**




**தொண்டை, மார்பு வலி நிவாரண மாத்திரைகள்.**

PPY-15 TAM

மதராஸிற்கு ஹோல் ஏஜண்டுகள்: மெஸர்ஸ். தாதா & கம்பெனி, மதராஸ்

## உங்களை

## எப்பொழுதும்

## முன்னேற்றப்

## பாதையில்

## வைத்திருக்கும்

## அன்றாட

## முதலீடு

உங்கள் பணம் மேலும் மேலும் விருத்தியாவதை நீங்கள் விரும்புகிறீர்கள் — யார்தான் விரும்பவில்லை—அதுவும் அதிகப்படி பணத்துக்கு அநுமான வரி இல்லை என்னும்போது. ஆகவே **தேசிய சேமிப்புப் பத்திரங்களை** வாங்கிக் கொண்டே இருங்கள். இன்றைய தினம் முதலீடு செய்யப்படுகிற பிரதி 100 ரூபாயும் பன்னிரண்டு வருடங்களில் 150 ரூபாயாகிறது.

உங்கள் பத்திரங்களை முழு காலத்துக்கும் அப்படியே வைத்திருக்கிறீர்களானால், அவைகள் வருடத்திற்கு 4. 1/6 சத விகித வட்டி அளிக்கின்றன. உண்மையிலேயே இது உயர்ந்த வட்டிதான்.

உங்களால் முடிந்ததையெல்லாம் வாங்குங்கள்; ஆனால் காலவரையறைக்குள் பணமாக மாற்றாதீர்கள்; ஏனென்றால் அவைகள் இன்னும் நல்ல வட்டி சம்பாதித்துக் கொண்டே இருக்கின்றன— மேலும் மேலும் அவை மதிப்பில் உயர்ந்து கொண்டே போகின்றன. நீங்களும் உங்கள் குடும்பத்தில் ஒவ்வொருவரும் எவ்வளவு சிறிய சேமிப்பைக் கொண்டும் கணிசமான தொகையை காலக்கிரமத்தில் காணலாம்.

5, 10, 50, 100, 500, 1,000, 5,000 ரூபாய் மதிப்புகளில் இப் பத்திரங்கள் தபால் ஆபீஸ்களில் கிடைக்கும்.

அவ்வப்பொழுது திருத்தப்பட்ட 1944-ம் வருஷத்து தேசிய சேமிப்புப் பத்திர விதிகளின் படி வழங்கப் படுகின்றன.

# பன்னிரண்டு வருட தேசிய சேமிப்புப் பத்திரங்கள்

மேற்கொண்டு செய்திகளுக்காகவும் அல்லது இந்த முதலீட்டைக் குறித்த விதிகளுக்காகவும் "கார்டன் காஸில்", சிம்லா-3 என்னும் விலாசத்திலுள்ள நாஷனல் ஸேவிங்ஸ் கமிஷனருக்காவது உங்கள் ராஜ்யத்தின் மாகாண நாஷனல் ஸேவிங்ஸ் ஆபீஸருக்காவது தயவுசெய்து எழுதிக் கேளுங்கள்.

AC 438 TM




பரமசிவத்தின் மகன் பெயரில்தான் மாணிக்கம்; குணத்தில் குப்பைமணி.

பல ஆண்டுகளாகப் பிள்ளையில்லாத குறையை நிவர்த்தி செய்யப் பரமசிவம் தம்பதிகளுக்குக் கிடைத்த புத்திர செல்வம்தான் மாணிக்கம். கிடைத்தற்கரிய மாணிக்கம் கிடைத்து விட்டதாக அவர்கள் எண்ணினார்கள். அன்புடன் அருமை பெருமையாக வளர்த்தார்கள்.

ஆனால் மாணிக்கம் வளர வளர, அவன் தம் பெயரை எடுக்கமாட்டான் என்று பரமசிவத்துக்கு நன்றாய் விளங்கி விட்டது. அவனைப் பள்ளிக்கூடத்தில் கொண்டு போய் விட்டு வருவதற்குள் அவருக்குப் போதும் போது மென்றாகிவிடும். பொழுது போனால், அவனோடு மல்லுக்கு நிற்பது தான் அவருக்கு வேலை.

"என் உயிரை வாங்கத்தான், இவன் எனக்குப் பிள்ளையாய்ப் பிறந்திருக்கிறான்" என்று அடிக்கடி தம் மனைவி காமாட்சியிடம் எரிச்சலோடு சொல்லிக் கொண்டிருந்தார் அவர்.

"பிள்ளையை ஒன்றும் சொல்லாதீர்கள். வயசு வந்தால் தன்னாலேயே திருந்திப் போய்விடுவான்" என்று காமாட்சி கணவரிடம் மகன் மாணிக்கத்துக்காகப் பரிந்து பேசினாள்.

மாணிக்கத்துக்கு என்னவோ படிப்பு ஏறவில்லை. பள்ளிக்கூடத்துச் சம்பளத்தை வாங்கிக் கண்ட படி செலவு செய்து, ஒரு வேலையுமின்றி ஊரைச் சுற்றித் திரிந்துவிட்டு வந்து நிற்பான்.

"இவன் படித்து, குப்பை கூட்டியது போதும். என்னோடு வந்து, வியாபார முறையைக் கற்றுப் பிழைக்கத் தெரிந்து கொண்டால், அதுவே போதும்" என்று பரமசிவத்துக்கு ஒரு நாள் தோன்றி விட்டது. மாணிக்கத்தைக் கடைக்கு அழைத்துக் கொண்டு போனார்.

* * *

பரமசிவம் ஒரு மளிகைக் கடை வியாபாரி. சின்னஞ் சிறிய வெற்றிலைப் பாக்குக் கடையிலிருந்து, தம் சாமர்த்தியத்தினால் மளிகைக் கடை முதலாளியாக மாறியிருந்தார் அவர். "படிப்பில்லாவிட்டாலும், பணம் சம்பாதிக்கத் தெரிந்து கொண்டிருக்கிறேன்" என்று அவர் அடிக்கடி மனைவியிடம் கூறிப் பெருமைப்பட்டுக் கொள்வார். மாணிக்கமும் அவரைப் போலவே, ஆகிவிட வேண்டும் என்று அவர் விரும்பினார்.

மாணிக்கத்துக்கு என்னவோ கடையில் உட்கார்ந்திருக்கப் பிடிக்கவில்லை. வியாபாரத்தில் அவன் புத்தி செல்லவில்லை. அவன் பார்வை மட்டும் எப்போதும் பணப் பெட்டியின் மேல் பதிந்து போயிருக்கும்; மூளை ஏதாவது குருட்டு யோசனை செய்து கொண்டிருக்கும்.

தந்தை இல்லாத சமயம் பார்த்து, ஐந்து, பத்து என்று அவன் எடுத்துக் கொண்டு விடுவான். பெரும் நெருப்புக்கு சரமில்லை. அவன் எடுத்துக் கொள்ளும் இந்தச் சிறிய தொகை, பரமசிவத்துக்கு வெகு நாட்கள் வரை தெரியாமலிருந்தது. அதற்குப் பதில், மகன் கடை வியாபாரத்தில் காண்பித்த சிரத்தையைக் கண்டு, அவர் பூரித்துப் புளகாங்கித மடைந்து போனார்.

"பார்த்தாயா, காமாட்சி! பையனுக்குப் புத்தி வந்து விட்டது! அவன் எல்லாம் தெரிந்து கொண்டு விட்டானானால், நான் கிம்மதியாய் உட்கார்ந்து விடுவேன். கடைச் சாவியையும், கணக்கையும் அவனிடம் ஒப்படைத்து விடுவேன்" என்று பரமசிவம் மனைவியிடம் உள்ளம் நிறைந்த திருப்தியோடு பேசிக் கொண்டிருந்தார்.

"நான்தான், அப்போதே சொன்னேனே! புலிக்குப் பிறந்தது, பூனையாகி விடுமா! பிள்ளை மனசு திருந்திவிட்டது. பாருங்கள், என் நம்பிக்கை ஒருபோதும் வீண் போகாது. என் மனசும் இப்போதுதான் குளிர்ந்தது" என்று காமாட்சியும் தன் மகனைப் பாராட்டிப் பேசினாள்.

ஆனால் இந்தப் புகழுரைகளைக் கேட்டுக் கொண்டிருந்த மாணிக்கம் தனக்குள்ளே சிரித்துக்

கொண்டான். அந்த பேதைக்கு, இந்த அசட்டு அப்பாவையும், அம்மாவையும் கண்டு சிரிப்புதான்!

*  *  *

ஒரு நாள் எங்கோ வெளியில் போய்விட்டு வந்த பரமசிவம், மீண்டும் பணப் பெட்டியருகில் உட்கார்ந்தார். அவர் கடைக்குச் சரக்குகள் அனுப்பிய கம்பெனியின் பிரதிநிதி பண வசூலுக்காக அப்போது வந்திருந்தார். அவர் தனியாக வைத்திருந்த பணத்தை எடுத்து எண்ணினார். முழுசாக ஒரு நூறு ரூபாய் நோட்டு குறைந்திருந்தது.

"நூறு ரூபாய் குறைகிறது நீ எடுத்தாயா அப்பா" என்று அவர் மாணிக்கத்தைப் பார்த்துக் கேட்டார். "நான் பார்க்கவில்லையே; விற்று முதலான பணத்தைத்தான் வாங்கிப் போட்டேன். வேறு எதுவும் எனக்குத் தெரியாது" என்று அவன் ஒரேயடியாகச் சாதித்து விட்டான்.

வந்திருந்தவருக்கு, ஒரு வழியாகப் பணத்தைக் கொடுத்து அனுப்பினார் பரமசிவம்; மகனையும் மற்றவனையும் மத்தியானம் சாப்பாட்டிற்கு வீட்டிற்கு அனுப்பி வைத்தார்.




அவர்கள் போனதும், கடையில் ஒரு இடம் பாக்கி யில்லாமல் அவர் தேட ஆரம்பித்தார். என்ன ஆச்சரியம்! ஒரு சாக்கு மூட்டைக்கடியில், காணாமற்போன நூறு ரூபாய் நோட்டு இருந்தது.

"இது மாணிக்கத்தின் வேலைதான்!" அவர் தம் மகனின் யோக்கியதையைப் புரிந்து கொண்டார். அன்றுதான் முதன் முதலாக அவருக்கு மகன்மீது சந்தேகம் ஏற்பட்டது. சாப்பிடப் போனவன் திரும்பவும் கடைக்கு வரவில்லை.

கடைக் கணக்கை எடுத்துச் சரி பார்த்தார் பரமசிவம். என்ன ஆச்சரியம்! ஆயிரம் ரூபாய் வரைக்கும் துண்டு விழுந்திருந்தது.

"பயல் என்னை ஏமாற்றி விட்டிருக்கிறான். இவ்வளவு நாளாக, நான்தான் கவனிக்காமல் இருந்திருக்கிறேன்" என்று தம்மைத் தாமே நொந்து கொள்வதைத் தவிர அவருக்கு வேறு வழியில்லை.

அன்றிரவு கடையை மூடிக் கொண்டு போன பரமசிவம் மகனிடமும், மனைவியிடமும் குதியாய்க் குதித்தார்; பொரிந்து விழுந்தார்; அவர் கண்களில் தீப்பொறி பறந்தன; வார்த்தைகள் அனலைக் கக்கின. திரிபுரத்தை நெற்றிக் கண்ணால் எரித்த பரமசிவம், அன்று இந்தப் பரமசிவத்திடம் தோற்றுப் போயிருப்பார். காமாட்சி பயந்து அசந்து போனாள். இத்தனைக்கும் மாணிக்கம் மட்டும் பயந்தவனாகத் தெரியவில்லை.

"உன் அருமைப் பிள்ளையின் திருட்டுப் புத்தியை நீதான் மெச்சிக் கொள்ள வேணும். ஆயிரம் ரூபாய் குறைகிறது. உன் பிள்ளை எடுத்துச் சூறையாடியிருக்கிறான். என் புத்தியைத்தான் செருப்பால் அடிக்கணும். இவனைக் கடைக்குக் கொண்டு போனதே தப்பு. தடிப் பயலுக்குக் கல்யாணம் பண்ணுகிற வயசாகிறது. இன்னும் பொறுப்பு ஏற்படக் காணோம். எல்லாம் என் தலையெழுத்து" என்று பரமசிவம் நொந்து கொண்டார்.

"ஏன்டா, அப்பா! நீ பணத்தை எடுத்தாயா? உண்மையைச் சொல்லிவிடு" என்று காமாட்சி மகனைப் பார்த்துச் சாவதானமாகக் கேட்டாள்.

"அம்மா, நான் ஏன் எடுக்கிறேன்! எனக்குச் செலவுக்குத்தான் நீங்கள் கொடுக்கிறீர்களே. யார் எடுத்தார்களோ! நான் இனிமேல் கடைப் பக்கமே போகவில்லை" என்று மிகவும் யோக்கியன்போல் பேசினான் மாணிக்கம்.

"அவன் திருடி ஏப்பம் விட்டது போதாது என்று நீ வேறு கொடுத்து அழுகிறாயா!" என்று பரமசிவம் மனைவியைக் கடிந்து கொண்டார்.

"அவன் எடுத்திருக்க மாட்டான். கணக்கை மறுபடியும் போய்ச் சரி பாருங்கள். கிடைத்து விடும்" என்று காமாட்சி மகனின் யோக்கியதைக்கு நற்சாட்சி பத்திரம் கொடுத்தாள்.

"கணக்காவது மண்ணாங்கட்டியாவது! போன ரூபாய் இனிமேல்தான் வரப்போகிறதா!" என்று பரமசிவம் அலுத்துக் கொண்டார். அவர் கோபம் தணியவில்லை. சாப்பிடாமல் போய்ப் படுத்துக் கொண்டார். அன்றிரவு எல்லாருமே பட்டினி.

*  *  *

**ப**ள்ளிக்கூடத்தைத் தலை முழுகியது போல், மாணிக்கம், தந்தையின் மளிகைக் கடைக்கும் ஒரு முழுக்குப் போட்டு விட்டான்.

வேளா வேளைக்கு வீட்டுக்கு வருவது, மூக்குப் பிடிக்கச் சாப்பிடுவது, கண்டபடி ஊர் சுற்றி வருவது இவைகளைத் தன் அன்றாட வேலைகளாக வகுத்துக் கொண்டான், காமாட்சியின் குலக் கொழுந்தான மாணிக்கம். தாயின் இதமான வார்த்தைகளினால்கூட அவன் முரட்டுக் குணத்தை மாற்ற முடியவில்லை. அதற்குப் பதிலாக, அவள் அவனிடம் காட்டிய அன்பு, அவன் மனத்தை மேலும் கெட்டிப் படுத்திக் கொண்டே வந்தது.

ஒருநாள் காமாட்சியின் பெட்டியிலிருந்த நூறு ரூபாய் நோட்டு ஒன்று காணவில்லை. அப்பொழுது தான் அவளுக்கும் "இது மகன் செய்த வேலை" என்று தெரிய வந்தது.

"இதோ பாருடா, கண்ணு! இந்த வீட்டில் இருக்கும் பொருள்கள் எல்லாம் உனக்குத்தான். உன் செலவுக்குப் பணம் வேணுமானால், என்னைக் கேட்டால் நான் தந்துவிட்டுப் போகிறேன். பெட்டியில் இருக்கும் பணத்தைத் தெரியாமல் எடுத்துக் கொண்டு போகலாமா!" என்று மகனுக்குப் புத்திமதி சொன்னாள், அன்பு நிறைந்த உள்ளமும் பாசமே உருவும் கொண்டிருந்த அந்தத் தாய். அது மட்டுமல்ல. அவன் இம்மாதிரியான காரியங்களில் மறுபடியும் மறுபடியும் ஈடுபடாமலிருப்பதற்காக, அவன் செலவுக்கு வேண்டிய ரூபாய்களும் கொடுக்க ஆரம்பித்து விட்டாள்.

மாணிக்கம் தன் போக்கை மாற்றிக் கொள்ளவில்லை. அவன் குணத்தில் காமாட்சி எதிர்பார்த்த

மாறுதல் எதையும் அவனால் கண்டு கொள்ள முடியவில்லை. அவனுக்கு என்னதான் அப்படி செலவிருந்ததோ! எப்படிச் செலவு செய்தானோ! அடிக்கடி அவளிடம் எதையாவது காரணம் காட்டி, பணம் வாங்கிக் கொண்டிருந்தான்.

* * *

இரண்டு மாதங்களுக்குப் பிறகு, பரமசிவம் வியாபார சம்பந்தமாக வெளியூருக்குப் போய் ஒரு வாரத்துக்குமேல் தங்கவேண்டி யிருந்தது. மகனின் போக்கியதையை நம்பி, அவனைக் கடையில் உட்கார வைத்து விட்டுப் போகவும் அவரால் முடியவில்லை. கடைச் சிப்பந்தியையும் அவர் நம்ப மாட்டார். கடையைப் பூட்டி வைத்து விட்டே அவர் ஊருக்குப் போனார்.

வெளியூர்களில் தம் வேலையை முடித்துக் கொண்டு, ஒரு நாள் இரவு ஊர் திரும்பிய பரமசிவத்துக்கு ஒரு அதிசயம் அங்கே காத்துக் கொண்டிருந்ததை அவரால் அறிய முடியவில்லை.

மறுநாள் அதிகாலையிலே போய்க் கடையைத் திறந்தார் அவர். கடையில் ஒவ்வொன்றும் சரியாக இருக்கிறதா என்று எல்லாவற்றையும் ஒரு முறை நோட்டம் பார்த்துக் கொண்டே வந்தார். கடைசியாக ஒரு மூலையிலிருந்த பணப் பெட்டியின் மேல் போய் அவர் பார்வை பதிந்தது.

அங்கேதான் அதிசயம் நிகழ்ந்திருந்தது. பணப் பெட்டி உடைக்கப் பட்டிருந்தது. அதிலிருந்த பணம் ஒரு தம்பிடிகூடக் காணப்படவில்லை. மகனுக்குப் பயந்து வீட்டிலிருந்து கொண்டு வந்து வைத்திருந்த வைர நகைகளையும் காணவில்லை.

இத்தனை கட்டுக்காவல் இல்லாமல், எப்படித் திருடன் வந்து விடுவான்! ஏதோ ஒரு உள்ளுணர்வு திருடியவன் மாணிக்கமாகத்தான் இருக்க வேண்டும் என்பதை அவருக்கு அறிவுறுத்தியது.

ஒருகால் இது மாணிக்கத்தின் வேலையாக இல்லாவிட்டால்! வேறு யாராவது சாமர்த்தியசாலி அவரில்லாத சமயம் பார்த்து, மறு சாவி போட்டு, கடையினுள் நுழைந்து கொள்ளை யடித்துக் கொண்டு போய் விட்டானோ! யாராயிருந்தால் என்ன! பொருள்கள் போனவைகள்தானே!

போலீசில் போய்ப் புகார் செய்து கொள்வதா, வேண்டாமா! ஒருகால் தம்முடைய மகனே திருடனாக இருந்து விட்டால்!......

பரமசிவம் யோசித்தார்.

வீட்டுக்குப் போய், மனைவியுடன் ஒரு வார்த்தை கலந்து கொண்டு, மகனையும் கேட்டுப் பார்த்து விட்டுத்தான் எதையும் செய்ய வேண்டும்.

அவர் ஒரு முடிவு கட்டிக் கொண்டார். அத்துடன் கடையையும் கட்டிக் கொண்டு வீட்டுக்குக் கிளம்பினார். அவர் முன்னால் எடுத்து வைத்த ஒவ்வொரு காலடியும். அவரை என்னுடையதெல்லாம் என்னும்படி செய்து கொண்டிருந்தது.

உள்ளத்தின் கவலையைப் பிரதிபலித்துக் கொண்டு, தொங்கிய முகத்துடன், வழக்கத்துக்கு மாறாக வீடு திரும்பிய கணவரைக் கண்ட காமாட்சி கவலை கொண்டாள். "ஏதோ நடக்காதது நடக்கிறது" என்ற ஒரு பயங்கரத் திகில் அவள் மனத்தை அப்பொழுதே கவ்விப் பிடித்தது.

"ஏன்" என்று ஒரே வார்த்தையினால், அவள் பரபரப்போடு அவரைப் பார்த்துக் கேட்டாள்.

"மாணிக்கம் எங்கே!" என்று கேட்டார்.

"காலையில் எழுந்து போனவன்தான்! எப்போது வருவானோ! என்ன நடந்தது! விவரமாய், விளக்கமாய்ச் சொல்லுங்கள்" என்று கம்மிய குரலில் பீதியடைந்தவளாய்க் கேட்டாள். அவள் உள்ளத்தின் நடுக்கம் மட்டும் குறையவில்லை.

பரமசிவம் நடந்ததை அவளுக்குச் சொன்னார்.

"அதற்குப் பின்னே என்ன செய்வான்! ஏன் அவனைத் தேடுகிறீர்கள்! நீங்கள் இன்னும் இதைப் பற்றிப் போலீசில் எழுதி வைக்க வில்லையா!"

"போலீசில் எழுதி வைத்து என்ன செய்வது! திருடன் நம் வீட்டிலேயே இருந்து விட்டால்! போனதும் போய் மானக்கேட்டை வேறு வாங்கிக் கட்டிக் கொள்ளச் சொல்கிறாயா! ஊரில் தலை காட்டிக் கொண்டிருக்க முடியுமா?"

"நீங்கள் என்னதான் சொல்கிறீர்கள்! மாணிக்கம்தான் திருடி யிருப்பான் என்று சொல்லப் போகிறீர்கள். அவன் கை கொஞ்சம் நீளம்தான். இருந்தாலும் இப்படிப் பட்ட திருட்டுச் செயலை அவன் ஒருகாலும் செய்திருக்க மாட்டான்."



ஆயிரம்தான் ஆனாலும், மகன் இத்தகைய தகாத காரியத்தில் ஒருகாலும் ஈடுபட மாட்டான் என்ற திடநம்பிக்கை காமாட்சிக்கு. எனவே ஆக வேண்டியதைக் கவனிக்க அவரை மீண்டும் மீண்டும் துரிதப் படுத்தினாள்.

பரமசிவம் அவள் வார்த்தைக்கு அசைந்து கொடுக்கவில்லை. உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்திருக்கவுமில்லை. மாணிக்கத்தின் வரவை ஒவ்வொரு கணமும் ஆவலோடு எதிர்பார்த்திருந்த அவர், நேரம் விரைந்து கொண்டிருந்ததைக் கூடப் பொருட்படுத்தாமல் உட்கார்ந்திருந்தார்.

பொழுது சாய்ந்த வேளையில், எங்கெங்கெல்லாமோ சுற்றி யலைந்து திரிந்து விட்டு, வீடு வந்து சேர்ந்தான் மாணிக்கம்.

"இங்கே வாடா அப்பா, மாணிக்கம்!" என்று கனிவோடு பரமசிவம் மகனை அழைத்தார். அவன் அவர் எதிரில் வந்து நின்றான். "இப்படி உட்கார்" என்றார். மாணிக்கம் தயக்கத்தோடு உட்கார்ந்து கொண்டான். காமாட்சி ஒருபுறமாக நின்று, அவர்களிருவரையும் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"தம்பி, நம் கடையில், நான் இல்லாத சமயம் பார்த்து, திருட்டுப் போயிருக்கிறது. நீ இருந்து என்ன பயன்!" என்று கேட்டார். அவர் குரலில் இப்பொழுது அன்பும் கவலையும் இழையோடின.

"ஐயோ, திருட்டுப் போய் விட்டதா! இப்படி கொள்ளையடிக்க எவன் காத்திருந்தானோ, தெரியவில்லையே! இப்படி நடக்கும் என்று தெரிந்திருந்தால், நானாவது கடையில் போய்ப் படுத்திருந்திருக்கலாம். என்னையும்தான் கடை வழி ஏற

வேண்டாம் என்று சொல்லி விட்டீர்கள். உடனே போய்ப் போலீஸில் எழுதி வைக்க வேண்டும். கிளம்புங்கள் அப்பா" என்று பரமசிவத்தை அவசரப்படுத்தினான் மாணிக்கம்.

"தம்பி, நான் கேட்கிறேன் என்று கோபப் படாதே, உண்மையைச் சொல்லிவிடு. நீ பணத்தையும், நகையையும் எடுத்தாயா!"

"எனக்கு இந்தத் திருட்டுப் பிழைப்புத்தானா! நீங்கள் என்னதான் சொல்கிறீர்கள், அப்பா!"

"நீதான் திருடியிருக்கிறாய் என்கிறேன். உன் யோக்கியதை எனக்குத் தெரியாதா! இத்தனை நாள் இல்லாது, எந்தச் சீமையிலிருந்து திருடன் வந்து விடப் போகிறான்!"

"இல்லவே இல்லை! இன்னொரு தரம் அம்மாதிரி சொல்ல வேண்டாம். போலீசுக்குத் தெரியப் படுத்தித் திருடனையும் பொருளையும் கண்டு பிடிக்காமல் எதை எதையோ, பேசுகிறீர்களே, அப்பா!"

"தம்பி மாணிக்கம்! இதோ பார்! எனக்கு அப்படியெல்லாம் செய்யத் தெரியாது, என்று நினைத்து விட்டாய்! பிறகு என்ன நடக்கும் தெரியுமா! உண்மைக் குற்றவாளி ஒருநாள் அகப்படாமல் போக மாட்டான். மூன்று வருஷமோ, ஏழு வருஷமோ கூட்டி விடுவார்கள். போலீஸ் புலிகள் சும்மா இருக்க மாட்டார்கள். எப்படியும் கண்டு பிடித்து விடுவார்கள். தெரியுமா!" என்றார் பரமசிவம்.

"கிளம்புங்கள், அப்பா; நானும் வருகிறேன், போலீஸ் ஸ்டேஷனுக்குப் போவோம்."

"மறுமுறையும் நான் சொல்கிறேன். மாணிக்கம் நீதான், திருடன்!"

"இல்லை. இல்லை. எங்கு வேண்டுமானாலும் வந்து, நான் சொல்லத் தயார்."

"தம்பி, நீதான் திருடன்! எனக்குத் தெரிகிறது. உன்னை ஜெயிலுக்கு அனுப்பிவிட்டு, நானும் உன் அம்மாவும், அவமானம் தாங்கமாட்டாது, மனம் உடைந்து சாகவேண்டும். உன் நினைப்பு இதுதானா! தகப்பன் மகனாயிருந்தாலும், திருடியது நீதான் என்று சாட்சியம் கிடைத்து விட்டால், உன்னைப் படைத்த பிரம்மா வந்தாலும் விடமாட்டார்கள். 'என்னிடத்தில் என் மகன், தனக்குச் சேரவேண்டிய சொத்தைத் தானே திருடியிருக்கிறான், போனால் போகிறான் விட்டு விடுங்கள்' என்று நான் கெஞ்சினாலும் விட மாட்டார்கள். கௌரவமாகயிருந்த குடும்பத்துக்கு உன்னால் ஒரு இழுக்கு வரவேண்டாம். உண்மையைச் சொல்லிவிடு, உனக்குப் புண்ணியமுண்டு" என்றார் பரமசிவம்.

இதைக் கூறியதும் பரமசிவத்தின் கண்களிலிருந்து பொல பொலவென்று, கண்ணீர் வழிந்து, அவர் கன்னத்தை நனைத்துக் கொண்டு கீழே சிதறி விழுந்து கொண்டிருந்தது.

தம் ஆங்காரம், சக்தி, கோபதாபம் எல்லாம் மறந்து, மகனிடம் இரங்கிக் கொண்டிருந்த அவர் தோற்றம் பார்க்கப் பரிதாபமாக யிருந்தது. மாணிக்கம் திருடன்தானோ இல்லையோ. அவன் கல்மனசும் கசிந்துருகியது. அவன் சிறிது நேரம் யோசனையிலாழ்ந்தான். அதற்குள் அவன் உள் மனசு ஏதோ அவனிடம் பேசியது. கொஞ்ச நேரம் அவன் மௌனமாக யிருந்து பார்த்தான். பிறகு எதையோ நினைத்துக் கொண்டவன்போல் தேம்பித் தேம்பி யழுதான்.

"அப்பா......நான்தான் திருடன். வேறு யாரோ செய்த வேலை இது என்று உங்களை நம்பும்படி செய்து விடலாம் என்று பார்த்தேன், நீங்கள் ஏமாறவில்லை. கிணறு வெட்ட, பூதம் புறப்பட்ட கதையாய் நீங்கள் எதை எதையோ சொல்லுகிறீர்கள். என்றால் எந்த விபரீதமும் நேரவேண்டாம். பணம் செலவழிந்து விட்டது. நகைகள் அப்படியே இருக்கின்றன. எனக்குப் புத்தி வந்து விட்டது அப்பா; என்னை மன்னித்தேன் என்று சொல்லுங்கள் அப்பா. இனி எந்தத் துரும்பையும் உங்கள் அனுமதியில்லாமல் தொடமாட்டேன். அம்மா, உங்கள் மனசை நான் அறிந்து கொள்ளவில்லை. பாடாதபாடு படுத்தி வைத்திருப்பேன். நான் பிள்ளையாய்ப் பிறந்தது இதற்குத்தானா! என்னை மன்னித்தேன் என்று சொல்லுங்கள், அம்மா" என்று கெஞ்சினான். மாணிக்கம் கண்களிலிருந்து அருவி நீரென கண்ணீர் பெருகி வழிந்து கொண்டிருந்தது.

"என்னை மன்னித்து விடுங்கள், அப்பா, இனிமேல் இந்தக் கெட்ட வழிக்கு நான் போகவே மாட்டேன்" என்று மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்டே அவன் அழுதான்; வேண்டிய மட்டும் அழுதான். பெற்றோர்கள் மனம் புண்பட அவன் இதுவரை செய்திருந்த தகாத செயல்கள் எல்லாம் அவன் கண்ணீரில் கரைந்து மறைந்து போயின. பரமசிவமும், காமாட்சியும் தங்கள் கண்களைத் துடைத்துக் கொண்டனர்.

காமாட்சி, மாணிக்கத்தை அணைத்துக்கொண்டு அவன் கண்களைத் துடைத்து விட்டாள்.

"மாணிக்கம், உனக்காகத்தானே, நாங்கள் உயிரையே வைத்துக் கொண்டிருக்கிறோம். இது ஏன் உனக்குத் தெரியாமல் போய் விட்டது! நாங்கள் அரும்பாடு பட்டுப் பணம் சேர்த்து வைப்பதெல்லாம் யாருக்கு என்று நினைத்து விட்டாய்! அசட்டுப் பிள்ளை, நீ இப்படி இருக்கலாமா! கருத்தாய் இருந்தால், நாளைக்கு நீ தானே சுகமாக யிருக்கப் போகிறாய்!" என்று காமாட்சி நாத் தழுதழுக்கச் சொன்னாள்.

பரமசிவம் தம் மடியில் வைத்திருந்த கடைச் சாவியை எடுத்து அவனிடம் கொடுத்தார்.

"மாணிக்கம், சொல்வதை நன்றாய்க் காதில் வாங்கிக் கொள். இன்று முதல் நீதான் கடை முதலாளி. புத்தியாய்ப் பிழைத்துக் கொண்டாலும் சரி, அல்லது இருக்கிறதைக் குறையாடி அழித்தாலும் சரி, எல்லாம் இனிமேல் உன்னோடுதான். நமக்கிருக்கும் சொத்து, சுதந்திரம் எல்லாமே இனிமேல் உன் பொறுப்பில்தான். உன்வழிக்கோ, கடைவழிக்கோ நான் வரப்போவ இல்லை. வீட்டில் நிம்மதியாக யிருந்து விடப் போகிறேன். ஏன் நின்று கொண்டிருக்கிறாய்? இப்பொழுதே போய்க் கடையைத் திற. நானும் இதோ வருகிறேன். வந்து உனக்குக் கணக்கு வழக்குகளை, காண்பித்து விட்டு வருகிறேன்" என்று மனங் கசிந்துருகிப் பேசினார் அவர்.

"மாணிக்கம், அப்பா சொல்கிறபடி கேட்டு, நல்ல பிள்ளையென்று பேர் எடுடா. என் பெற்ற வயிறும் குளிர்ந்து போகும்" என்றாள் காமாட்சி.

"சரி, அம்மா, நீங்கள் சொல்கிறபடியே செய்கிறேன்" என்று கடையைத் திறக்கக் கிளம்பினான் எல்லாப் பொறுப்புகளையும் தன்மேல் தாங்கிக்கொண்ட மாணிக்கம்.

பழைய மாணிக்கம் அவனுள்ளேயே மறைந்தான். புதியதொரு மாணிக்கம் அவனிடமிருந்து எழுந்தான். அது மட்டுமல்ல. அன்றைய தினத்திலிருந்து அவன் குணத்திலும் மாணிக்கம் ஆனான்!

காமாட்சி தன் கணவனைப் பார்த்து "'புலிக்குப் பிறந்தது பூனையாகி விடுமா!' என்று நான் அப்பொழுதே சொல்லவில்லையா!" என்றாள். அதை ஆமோதிப்பவர் போலப் பரமசிவம் தம் அகமும் முகமும் மலர ஒரு புன்முறுவல் பூத்தார்.

# அழகரும் சிங்கரும்

கோணல்

எங்கள் ஊரில் ஒரு வசனம் சொல்லுவதுண்டு: இரண்டு பேர் சேர்ந்து ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கினால், "அழகரும் சிங்கரும் ஹோட்டல் வைத்த கதையாய் முடியப் போகிறது" என்பார்கள். அழகரும் சிங்கரும் ஹோட்டல் வைத்த வைபவம் ஊரார் சொல்லுமளவுக்கு வசனமாகி விட்டதென்றால் யாருக்குத்தான் அந்தக் கதையைக் கேட்க ஆர்வமிருக்காது?

அழகரும் சிங்கரும் அத்தான் அம்மாஞ்சிகள்—அதாவது அழகய்யங்காருக்குச் சிங்கமய்யங்கார் அத்தான். சிங்கமய்யங்காருக்கு அழகய்யங்கார் அம்மாஞ்சி—அவ்வளவுதான். அழகய்யங்கார் எங்கள் வட்டாரத்திலேயே பிரசித்தியான பரிசாரகர்—சமையற்காரர். எந்தக் கல்யாண விருந்திலும் அழகய்யங்கார் தளிகை என்றால் கேட்க வேண்டாம். அழகய்யங்காரின் அழகே தனியழகுதான். ஆறே முக்காலடி உயரம்; அதற்குத் தக்க பருமன். நாச்சியார் கோயில் கல் கருடன் மாதிரி கரிய திருமேனி.

அம்மாஞ்சி அழகரைப் போன்றதல்ல, அத்தான் சிங்கமய்யங்காரின் திருவுருவம். சிங்கமய்யங்கார் என்று திருநாமமிடப்பட்டிருந்தாலும் அதற்குப் பின் அவதாரமாகிய வாமனவதாரம் போலத்தான் திருக்கோலம் கொண்டிருந்தார். நல்ல சிவப்பு! அவர் நடந்து வரும்போது தவளை ஒன்று தத்தித் தத்தி வருவது போலத்தான் இருக்கும். துல்லியமான காஞ்சீபுரம் பத்தாறு வேஷ்டியைப் பாங்காக உடுத்தி இருப்பார். காலில் நகம் முளைத்த நாள் முதலாகச் செட்டியார் கடைக் குமாஸ்தா. வட்டிக் கணக்குப் போடுவதில் கெட்டிக்காரப் புள்ளி. பதினாயிரக் கணக்கான ரூபாய்களைக் கணக்கில் ஏற்ற வேண்டுமா அல்லது கணக்கிலிருந்து மறைத்துக் காட்ட வேண்டுமா இந்த வித்தைகளிலெல்லாம் அசகாய சூரர்.

அழகரும் சிங்கரும் கிட்டத்தட்ட ஒரே வயதையுடையவர்கள். இருவருக்கும் வயது அறுபதுக்கு மேலாகி விட்டது. இன்னுமா வெளி மனிதர்களுக்கு உழைத்து உயிர் வாழ வேண்டும் என்ற அலுப்பு அவர்களுக்கு ஏற்பட்டது. இருவரிடமும் இவ்வளவு நாளாக உழைத்துச் சேர்த்த பணம் கொஞ்சம் கைவசமிருந்தது. இருவருக்கும் கையிலுள்ள முதலைக் கொண்டு சொந்தமாக ஏதேனும் தொழில் நடத்தலாம் என்று தோன்றியது.

"என்னடா, அம்மாஞ்சி! பிறருக்கு உழைத்து உழைத்து உடம்பு ஓடாப் போச்சு. கையிலிருக்கிற பணத்தை வைத்துக்கொண்டு சொந்தமாக ஏதாவது தொழில் நடத்தி ஜீவிக்கலாமென்று நினைக்கிறேன். உன் அபிப்பிராயம் என்ன?" என்றார் சிங்கமய்யங்கார்.

"தங்கமான யோசனை. எனக்குக் கூட அப்படித்தான் தோன்றுகிறது. ஏன், நீயும் நானும் சேர்ந்து ஏதாவது செய்யக்கூடாது?" என்றார் அழகர்.

சிங்கர் சட்டென்று அழகரின் வார்த்தைக்குப் பிடி கொடுக்கிறவராய் இல்லை. "இரண்டு பேரும் சேர்ந்தா ஏதாவது செய்யலாம் என்று சொல்றே... ஊம்! சரி! நீ கொஞ்சம் பணம் போடு; நானும் கொஞ்சம் போடறேன். இரண்டு பேருமாகச் சேர்ந்து ஒரு தவணைக் கடை ஆரம்பிப்போம். நம்பிக்கையான புள்ளிகளுக்கு வட்டிக்குக் கடன் கொடுத்து வாங்கலாம்" என்றார் சிங்கமய்யங்கார்.

வட்டிக்குக் கடன் கொடுத்து வாங்குவது சிங்கமய்யங்காருக்குத் தரமான வியாபாரமாகப் படலாம். ஆனால் அழகருக்கு அந்த விஷயத்தில் அநுபவம் போதாதல்லவா? தவிர, சிங்கன் தன்னை அநுபவமில்லாத தொழிலில் மாட்ட வைத்து ஏமாற்ற நினைக்கிறானோ என்ற சந்தேகம் ஏற்பட்டது. "கடன் வாங்குகிறவனெல்லாம் வட்டியோடு நாணயமாகத் திருப்பிக் கொடுக்கிற காலம் இது இல்லை, சிங்கா. தவிர எனக்கு அந்தத் தொழிலில் அநுபவம் போதாது......வேறு ஏதாவது செய்யலாமே..." என்றார் அழகர்.

"அம்மாஞ்சி! இந்தச் சிங்கனுக்குத் தவணைக்குக் கடன் கொடுத்து வாங்குவதிலே கொஞ்ச நஞ்சம் அநுபவமா! நான் இருக்கச்சே நீ துளிக்கூட பயப்பட வேண்டாம். நக்ஷத்திரய்யன் மாதிரி விழியிலே விரலைக் கொடுத்து. கொடுத்த கடனை வட்டிக்கு அபராத வட்டி போட்டு வாங்கிடுவேன்."

"நீ இந்த விஷயத்திலே கெட்டிக்காரனாக இருக்கலாம், அத்தான். ஆனால் எனக்கு அநுபவம் போதாதே? நீ எழுதிப் படிக்கிற கணக்கைத் தானே நான் நம்பியாகணும்? எனக்குத்தான் படிக்கவும் தெரியாது; எழுதவும் தெரியாதே......?"

"அப்படியானால் நான் பொய்க் கணக்கு எழுதறவனா, என்ன?"

"நான் சொல்லணுமா? பொய்க் கணக்கு எழுதி எழுதித் தலையே வழுக்கை விழுந்து போச்சு என்று நீயே என்னிடம் நூறாயிரம் தடவை சொல்லி இருக்கிறாயே! அந்தப் பழக்கத்தினாலே உனக்கு நிஜக் கணக்கு எழுத வராதோ என்ற பயந்தான் எனக்கு!"

சிங்கமய்யங்கார் யோசித்தார்: "என்ன செய்யலாம் என்று நீதான் சொல்லேன்."

"ஏன்? ஒரு ஹோட்டல் வைக்கக்கூடாது?" என்றார் அழகய்யங்கார்.

"ஹோட்டலா...? உனக்குச் சமைக்கத் தெரியும். எனக்கு என்ன செய்ய முடியும்...?"

"ஏன் நீ பெட்டியடியைக் கவனித்துக் கொள். நான் அடுப்படியில் நிற்கிறேன். அன்றன்றைக்கு நடக்கும் வியாபாரத்துக்கு அன்றன்றைக்குக் கணக்குச் சொல்லிவிடு போதும். புளியோதரை, பொங்கல், சர்க்கரைப் பொங்கல், தயிர்சாதம், வடை, காப்பி இதையெல்லாம் ஒரு கணக்காய்ச்

செய்து வைக்கிறேன். இதற்கு வியாபாரம் நடந்தால் போதும்'' என்றார் அழகர்.

சிங்கர் சிறிது நேரம் யோசனை செய்து விட்டு, "சரி! சுற்று வேலை செய்ய மனுஷ்யாள் வேண்டாமா?'' என்றார்.

"என் மைத்துனனும் உன் மைத்துனனும் சும்மாத்தானே இருக்கிறார்கள். அவர்கள் அதைக் கவனித்துக் கொள்ளட்டுமே வெளி யிலே எதுக்குச் சம்பளத்துக்கு ஆசாமிகளைப் பிடிக்க வேணும்...'' என்றார்.

அழகரின் யோசனை சிங்கருக்கும் சரியாகப் பட்டதால் இருவரும் கூடி ஹோட்டல் வைப்பதாகத் தீர்மானித்து விட்டனர்.

எங்கள் தெருக் கோடியில் 'அழகிய சிங்க விலாஸ்' பிரசாதங்கள் விலை சரசமாய்க் கிடைக்கும்! என்ற விளம்பரப் பலகையுடன் ஒரு ஹோட்டல் ஆரம்பிக்கப்பட்டது.

அழகய்யங்கார் தன் மைத்துனன் திருமலை யைத் தனியாக அழைத்து, "ஏய்! சிங்கன் மச்சினன் ஒரு சாப்பாட்டுராமன். கிடைத்த இடத்தில் கொண்ட வரையில் சாப்பிடுவான். நீ அசடு மாதிரி இருக்காதே! அவன் ஒரு சர்க்கரைப் பொங்கல் சாப்பிட்டால் நீ இரண்டு சாப்பிடு.''

"எனக்குத் தெரியாதா அத்திம்பேரே? அவ் விஷயத்திலே அவனுக்குச் சளைத்தவ னில்லை நான்'' என்றான் அழகர் மைத்துனன்.

* * *

அடுப்படியில் நின்று கொண்டிருந்த அழகய்யங்காருக்குச் சமீபமாக ஒரு வாலிபன் வந்து "மாமா...'' என்றான். அழகய்யங்கார் அவனைத் திரும்பிப் பார்த்துவிட்டு "அடடே நாச்சுவா? வாடா, வா, உட்காரு...எங்கே வந்தே...?'' என்று உபசாரம் செய்தார்.

"புதிசா கடை வைத்திருக்கிறீர் என்று கேள்விப்பட்டேன்'' என்றான் நாச்சு.

"ரொம்ப சரி! நான் கடை வைத்திருக் கிறதில் உனக்குச் சந்தோஷம் தானே...?''

"ரொம்ப சந்தோஷம் மாமா! சரியான காரியம்தான் செய்தீர்கள். இந்த ஊரில் உங்களுக்கு நடக்காத வியாபாரம் வேறு யாருக்கு நடக்கப் போகிறது? அதுவும் உங்கள் கையாலே செய்த புளியோதரை ஒன்றைச் சாப்பிட்டால் போதுமே, மற்ற ஹோட்டலிலே தேவாமிருதம் செய்து வைத்திருந்தாலும் போக மாட்டேனே...''

நாச்சுவின் வார்த்தைகள் அடுப் படியில் நிற்கும் அழகருக்குப் பன்னீரால் திருமஞ்சன மாட்டி யது போலிருந்தது.


"நாச்சு! ஒரு புளியோதரை வேணுமானால் சாப்பிடேன்!'' என்றார் அன்போடு அழகர்.

"வேண்டாம், மாமா! இப் போதான் முதல் முதலிலே புதி சாகக் கடை வைத்திருக்கிறீர்கள் ......'' என்று இழுத்தான் நாச்சு.

"அதனாலே என்னடா குடி முழுகிப் போறது? நீ 'நம் ஆசாமி' சாப்பிட்டதனாலே எங்களுக்கு ஒன்றும் குறைந்து போய் விடாது'' என்றார் அழகய்யங்கார்.

நாச்சு அழகரின் உபசாரத்தைப் புறக் கணிக்க மாட்டாதவன் போல் இரண்டு புளியஞ்சாதம், ஒரு பொங்கல், வடை, காப்பி இவைகளையெல்லாம் 'பேஷ், பேஷ்! பிர மாதம்' என்று சிலாகித்து கொண்டே சாப் பிட்டு விட்டு வெளியே வந்தான். அவன் சாப்பிட்டவைகளை கணக்குப் போட்டு வைத் திருந்த சிங்கமய்யங்காரின் மைத்துனன், "அய்யங்கார்வாள் அணா பத்து, அரையே அரைக்கால்'' என்று கூவினான். இதைக் கேட்டதும் நாச்சு திகைப்படைந்து நின்று விட்டான். இதைப் பார்த்த அழகய்யங்கார் அடுப்படியை விட்டு வெளியே வந்து, "அதிகப்பிரசங்கி, உன்னை யாருடா கணக்குச் சொல்லச் சொன்னது? இவன் யாரு தெரியுமா? ஊருலே போறவன் இல்லே, எங்க சித்தப்பா வுக்கு ஷட்டகர் மருமான்'' என்றார்.

பெட்டியடியில் உட்கார்ந்திருந்த சிங்கமய் யங்கார் இதைக் கேட்டுவிட்டு "அம்மாஞ்சி, என் மச்சினனுக்கு இதெல்லாம் தெரியாது. கோபித்துக்குக் கொள்ளாதே. கணக்குச் சொல்ல வேண்டியது அவன் கடமை! சொன்னான்'' என்று அழகரைச் சமாதானம் செய்தார். இந்தச் சமயத்தில் இன்னொரு வாலிபன் சிங்கமய்யங்காருக்குச் சமீபமாக வந்து "என்ன மாமா! புதிசா ஹோட்டல் வைத்திருக்கிறீர்கள் என்று கேள்விப்பட்டு வந்தேன்...'' என்று சொல்லிக் கொண்டே உட்கார்ந்தான். அவனைப் பார்த்ததும் சிங்க மய்யங்கார் துள்ளிக் குதித்து, "அடடே!



இச்சுவா? வாடா, வா! ஏதோ வயதான காலத்திலே இப்படி ஏதாவது செய்யலாமே என்று...'' என்றார்.

''பேஷாச் செய்ய வேண்டிய காரியம்தான். வியாபாரம் எப்படி?'' என்றான் இச்சு.

''அதிருக்கட்டும். உள்ளே போய் ஏதாவது சாப்பிடு. வராதவன் வந்திருக்கே'' என்று உபசாரம் செய்தார் சிங்கமய்யங்கார்.

'' இல்லே மாமா! முதன் முதல் கடை வைத்திருக்கிறீர்கள். இன்னொரு காலைக்கு ஆகட்டுமே......'' என்றான் இச்சு.

''அதனாலே என்னடா? 'நம்பளவன்' சாப்பிட்டால் ஒன்றும் குறைந்து போயிடாது...'' என்று சொல்லி விட்டு அழகரைக் கூப்பிட்டு '' அம்மாஞ்சி! இவன் யார் தெரியுமா? எங்க அத்திம்பேருக்கு மாமா பிள்ளை - அதோடு மட்டுமில்லே எனக்குப் பத்து நாள் தாயாதி'' என்று அறிமுகம் செய்து வைத்தார் இச்சுவை.

''ஓஹோ! அப்படியா ரொம்ப சந்தோஷம்'' என்றார் அழகய்யங்கார். இச்சு உள்ளே போய் இரண்டு சக்கரைப் பொங்கல், ஒரு பொங்கல், வடை, காப்பி இவைகளைச் சாப்பிட்டு விட்டுச் சிங்கமய்யங்காரை ஸ்தோத்திரம் செய்து விட்டுப் போனான்.

இப்படியாகத் தினமும் ஹோட்டலில் தாயாதி பங்காளிகளும், சிநேகிதர்களும் வந்து 'ஓசியாகச் சாப்பிட்டது' போகக் கொஞ்சம் கொஞ்சம் வியாபாரமும் நடந்து தான் வந்தது. அழகய்யங்கார் மைத்துனன் திருமலையும் சிங்கமய்யங்கார் மைத்துனன் உப்பிலியும் ஒருவருக்கொருவர் சளைக்காதவர்களாக அவன் நாலு சக்கரைப் பொங்கல் சாப்பிட்டால், இவன் ஆறு சக்கரைப் பொங்கலும், இவன் ஆறு புளியோதரை சாப்பிட்டால் அவன் எட்டுப் புளியோதரையும் சாப்பிட்டு வந்தார்கள். அழகய்யங்காருக்குத் தன் மைத்துனன் உயர்ந்தவனாகப் பட்டான்! சிங்கமய்யங்காருக்குத் தன் மைத்துனன் உயர்ந்தவனாகப் பட்டான்! மைத்துனர் இருவருக்கும் புளியோதரையும் சர்க்கரைப் பொங்கலும்தான் உயர்ந்ததாகப் பட்டது!!!



ஒரு நாள் யாரோ ஒரு மனிதர் அந்த ஹோட்டலில் நுழைந்து ஒரு புளியஞ் சாதத்தை வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். திடீரென்று அந்த மனிதருக்கு விக்கல் எடுக்க ஆரம்பித்தது. அழகய்யங்காரின் மைத்துனன் திருமலை அந்த மனிதருக்குப் புளியோதரையைக் கொடுத்து விட்டு, தண்ணீர் சிங்கமய்யங்காரின் மைத்துனன் கொடுக்கட்டுமே என்று வேறு எங்கோ கவனமாய் இருப்பவன்போல் நின்று கொண்டிருந்தான். புளியோதரை சாப்பிட்டுக் கொண்டிருந்த மனிதர் 'ஐயா! கொஞ்சம் தண்ணி கொடுக்கக் கூடாதா......?'' என்றார் பரிதாபத்துடன். திருமலை உப்பிலிதான் தண்ணீர் கொடுக்கட்டுமே என்று நின்று கொண்டிருந்தான். உப்பிலி திருமலைதான் தண்ணீர் கொடுக்கட்டுமே என்று நின்று கொண்டிருந்தான். சாப்பிட்டுக் கொண்டிருந்த மனிதர் ஆத்திரத்துடன் ''என்னய்யா, இரண்டு பேரும் அப்படி நிக்கிறீங்களே! விக்கல் பிராணனே போய் விடும் போலிருக்குதே...'' என்று கத்தினார்.

''ஏய் ஏண்டா, மரம்மாதிரி நிக்கறே? அந்த மனுஷ்யனுக்கு ஒரு டம்ளர் தீர்த்தம் கொடுக்கக் கூடாதோ?'' என்றான் திருமலை உப்பிலியைப் பார்த்து.

''ஏய்! யாரைப் பார்த்துடா மரம் என்று சொன்னாய்? நீதானேடா புளியோதரை கொடுத்தே. அப்படியே ஒரு டம்ளர் தண்ணி வைக்கிறத்துக்குச் சிரமமாய்ப் போய் விட்டதோ......?'' என்றான் உப்பிலி.

''ஆமாம்! சிரமமாய்த்தான் போச்சு. உன்னைப்போல எட்டுச் சர்க்கரைப் பொங்கலை ஒரே மூச்சுலே விழுங்கின சிரமம் இருக்காது'' என்றான் திருமலை.

'' சாமி! உங்க சண்டை அப்புறம் இருக்கட்டும். எனக்கு உயிர் போய் கிட்டே இருக்குது. ரெண்டிலே யாராவது ஒரு டம்ளர் தண்ணி கொடும்!'' என்றார் சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்.

அந்த மனிதருக்கு உயிர் எப்படிப் போய்க் கொண்டிருக்கிறது என்பதைப்பற்றித் திருமலையோ உப்பிலியோ கவலைப்படவே இல்லை.

''ஏய்! நீ ஆறு சர்க்கரைப் பொங்கலை ஒரு மூச்சிலே விழுங்கச்சே நான் எட்டுச் சர்க்கரைப் பொங்கலைச் சாப்பிட்டதில் என்ன தப்பு?'' என்றான் உப்பிலி.

"ஏன் சாப்பிடமாட்டே! எல்லாம் உங்க அப்பன் வீட்டுச் சொத்துத்தானே. அழகய்யங்காரின் உழைப்பும் காசும் அப்படிப் போறது..." என்றான் திருமலை.

"அழகய்யங்காரின் காசும் உழைப்பும் தானோ? ஏய்! பெட்டி யடியிலே உட்கார்ந்திருக்கிறது சிங்கமய்யங்கார் ஞாபகத்திலே வைத்துக்கோ..." என்றான் உப்பிலி.

"அடுப்படியிலே ஒருத்தன் நின்னு உழைச்சான்னு பெட்டி யடியிலே ஏன் ஒருத்தன் திண்டு தலைகாணி போட்டுக் கொண்டு உட்காரமாட்டான்?" என்றான் திருமலை.

இந்தச் சமயத்தில் பெட்டியடியிலிருந்த சிங்கரும் அடுப்படியிலிருந்த அழகரும் தங்கள் மைத்துனன்மார்களைச் சமாதானம் செய்ய வந்தனர்.

அந்த ஹோட்டலுக்குச் சாப்பிட வந்த அப்பாவி விக்கலிடையே 'தண்ணி, தண்ணி' என்று கதறுவது ஒருவர் காதிலுமே விழுந்ததாகத் தெரியவில்லை.

"அம்மாஞ்சி. உன் மைத்துனன் ரொம்ப அதிகப் பிரசங்கியாய் இருக்கான். நீ அவனுக்குக் கொடுக்கிற இடம்" என்றார் சிங்கர்.

"நீ உன் மைத்துனனுக்கு இவ்வளவு இடம் கொடுத்திருக்கிறபோது நான் ஏன் கொடுக்கக் கூடாது..." என்றார் அழகர்.

இந்தச் சமயத்தில் 'தொப்'பென்று ஒரு சத்தம் கேட்டது. சட்டென்று எல்லோருடைய பார்வையும் திரும்பியது. பெஞ்சியில் உட்கார்ந்து புளியஞ் சாதம் சாப்பிட்டுக் கொண்டிருந்த மனிதர் மூர்ச்சையுற்றுத் தரையில் விழுந்து கிடந்தார். பாவம் அவர்தான் தண்ணீருக்காக விக்கலிடையே எவ்வளவு நேரம் துடித்துக் கொண்டிருப்பார். எல்லோரும் துடி துடிப்போடு அந்த மனிதருக்குச் சமீபமாக ஓடிப் போய்ப் பார்த்தனர். திருமலை ஓடிப் போய் ஒரு பெரிய குடத்தில் தண்ணீர் கொண்டு வந்தான். உப்பிலி ஒரு பெரிய பக்கெட் நிறையத் தண்ணீரைக் கொண்டு வந்தான். சிங்கமய்யங்கார் அந்த மனிதனின் முகத்தில் தண்ணீரைத் தெளித்தார். அழகய்யங்கார் ஒரு டம்ளரில் தண்ணீரை எடுத்து அந்த மனிதரின் வாயைத் திறந்து உள்ளே செலுத்தினார். கடவுளருளால் அந்த மனிதர் மூர்ச்சை தெளிந்து மெதுவாக எழுந்து உட்கார்ந்து "ஐயா! கொஞ்சம் தண்ணி கொடுக்கக் கூடாதா?" என்றார் பரிதாபத்தோடு.

"தண்ணியா? வேண்டியது இதோ பாருங்கள்" என்று பக்கெட்டையும் குடத்தையும் காட்டினான் திருமலை.

இதைக் கேட்டதும் அந்த மனிதர் கோபத்துடன் பார்த்துக் கொண்டே "ஏன்? ஒரு மனிதன் பிராணனை விட்டப்புறம் ஒரு அண்டாவிலேயும் தவலையிலும் தண்ணீர் கொண்டு வாங்களேன்! ஏன் ஐயா! இப்படி ஹோட்டலை வைத்துப் புளியஞ் சாதத்தைக் கொடுத்துத் தண்ணியில்லாமே சாப்பிட வரவங்களையெல்லாம் கொன்று விடலாம் என்று நினைக்கிறீங்களா?" என்றார்.

சிங்கரும் அழகரும் அந்த மனிதரைச் சமாதானம் செய்து அனுப்பப் பட்ட பாடு பெரும் பாடாகி விட்டது. இத்தனை அமர்க்களத்திற்குப் பிறகு சிங்கமய்யங்காரின் கோபம் அசாத்தியமாகி விட்டது. "ஏய் அம்மாஞ்சி! இப்படியே இனிமேல் வியாபாரம் நடந்து கொண்டு போனால் உருப்படாது. நீ இப்படிப் புளியோதரை செய்தால் ஒரே மனிதன்கூடக் கடைக்குள்ளே நுழையமாட்டான். நீ செய்த புளியோதரையைச் சாப்பிட்டவன் உடனே பரம பதத்துக்குப் போக வேண்டியதுதான் போலிருக்கிறது."

"நீ ஏண்டா சிங்கா சொல்ல மாட்டே! தர்பார்லே உட்கார்ந்திருக்கிற மாதிரி பெட்டியடியிலே உட்கார்ந்து பொய்க் கணக்கு எழுதிக் கொண்டிருக்காயோல்லியோ? எப்படி வியாபாரம் உருப்படும்? இன்னி வரையில் ஏதாவது லாபம் வந்திருக்கிறதா?" என்றார் அழகர் சீற்றத்துடன்.

"லாபம் வந்தால்தானே கணக்கிலே காட்ட முடியும்? உன் மச்சினன், தாயாதி பங்காளிகளும் வந்து 'ஓசி'யாச் சாப்பிட்டதுதான் பெரிய வியாபாரம். காசு கொடுத்து நீ செய்த பதார்த்தத்தைச் சாப்பிட்டவன்தான் மூர்ச்சை போட்டு விழுறானே...?" என்றார் சிங்கமய்யங்கார்.

"அப்படியா! உன் மச்சினன் சாப்பிட்டதும் உன் தாயாதி பங்காளிகள் வந்து சத்திரத்திலே சாப்பிடுகிறது மாதிரி சாப்பிட்டு விட்டுப் போனதும் மறந்து போயிடுமோ...? போதும் இனிமேல் இந்த வியாபாரமே வேண்டாம். இன்றோடு கடையை மூடி விடுவோம்..." என்றார் அழகர்.

"மூடாமல் இனிமேல் என்ன செய்யறது? உனக்கு முன்னாலே நான் கணக்குக் கட்டித் தீர்மானம் செய்து விட்டேன். இன்னும் இரண்டு நாள் கடை யிருந்தால் புளியோதரை கொடுத்துக் கொன்றான் என்று கொலைக் குற்றம் ஏதாவது தலையில் வந்து விடிந்தாலும் விடியும்" என்றார் சிங்கர்.

அன்றைய தினத்திலிருந்து அழகிய சிங்க விலாஸ் மூடப்பட்டு விட்டது. அதனால் அழகருக்கு ஐந்நூறு ரூபாய் நஷ்டம். சிங்கருக்கு ஐந்நூறு ரூபாய் நஷ்டம். அதைவிட, திருமலைக்கும் உப்பிலிக்குந்தான் பெருத்த நஷ்டம். இனிமேல் சர்க்கரைப் பொங்கலையும் புளியோதரையையும் போட்டி போட்டுக் கொண்டு சாப்பிட இடமேது?

அழகரும் சிங்கரும் ஒருமாத காலமே ஹோட்டல் வைத்து நடத்தினாலும் அந்த வைபவம் ஜனங்கள் மனத்தை விட்டு அகலாத வண்ணம் கர்ண பரம்பரையாக வரும் வசனம் போலாகி விட்டதுதான் விநோதம்.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" press
No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras


வெண்மையாக
சலவை செய்யப் பட்டுள்ளன
பிரகாசமாக
சலவை செய்யப் பட்டுள்ளன
ஸன்லைட் சோப்பினில் தான்
துணிகளை
அடித்துத் துவைக்காமலே
வெண்மையாகவும்
பிரகாசமாகவும்
சலவை செய்கிறது!
SUNLIGHT SOAP
SUNLIGHT SOAP

S. 201-50 TM

REGD. NO. M. 4392

*Registered as a newspaper in Ceylon*

